குரும்பசிட்டி

# அருள்மிகு முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்



புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ

# கும்பாபிஷேக சிறப்பு மலர்

11-05-2013

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரும்பசிட்டி
# அருள்மிகு முத்துமாரி அம்பாள் தேவஸ்தான
# அஷ்டபந்தன நவகுண்ட பக்ஷ மகா கும்பாபிஷேக
# சிறப்பு மலர் - 2013



வெளியீடு:

பரிபாலன சபை

குரும்பசிட்டி அருள் மிகு முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

குரும்பசிட்டி

11-05-2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | குரும்பசிட்டி அருள்மிகு முத்துமாரி அம்பாள் தேவஸ்தான அஷ்டபந்தன நவகுண்ட பக்ஷ மகா கும்பாபிஷேக சிறப்பு மலர் - 2013 |
| வெளியீடு | : | பரிபாலன சபை<br>குரும்பசிட்டி அருள் மிகு முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம் |
| மலர் வெளியீடு அனுசரனை | : | அமரர் கையிலாயபிள்ளை ஐயாத்துரை குடும்பத்தினர் |
| பக்கங்கள் | : | 106 + 8 படங்கள் |
| அளவு | : | B5 (JIS) |
| அச்சுவடிவமைப்பு | : | குரு பிறிண்டேர்ஸ் 39/2, ஆடியபாதம் வீதி திருநெல்வேலி |
| உரிமை | : | பரிபாலன சபை<br>குரும்பசிட்டி அருள் மிகு முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம் |
| முதற்பதிப்பு | : | 11 வைகாசி 2013 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூலவிக்கிரகம்




எழுந்தருளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரும்பசிட்டிக் கிராமத்தின் ஆலயங்களின் அமைவிடங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிபாலன சபையினர்

| | |
|---|---|
| சிவாச்சாரியார் தி. இரத்தினசாமி ஐயா | ஆலய பிரதமகுரு |
| திரு. செ. ஈஸ்வரபாலன் | தலைவர் |
| திரு. வ. கிருஷ்ணசாமி | செயலாளர் |
| திரு. கு. இராசநாயகம் | பொருளாளர் |
| திரு. ம. சபாரத்தினம் | உபதலைவர் |
| திரு. க. சிவதாசன் | உதவிச்செயலாளர். |

## மலர்க்குழுவினர்

| | |
|---|---|
| திரு. அருண். சக்திவேல் | மலராசிரியர் |
| திரு. த. ஐங்கரன் | உதவி மலராசிரியர் |
| திரு. ந. மகாலிங்கம் | உதவி மலராசிரியர் |
| திரு. பொ. தவராசா | வெளித்தொடர்புகள் |
| திரு. இ. உதயன் | புகைப்பட தொகுப்புகள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


முன்னுரை

ஆசிச் செய்திகள் 7 - 11

- ஆதீன முதல்வர் - நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்
- ஆதீன கர்த்தா - கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரசுவாமி கோவில்
- ஆதீன இளவரசு- மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில்
- பிரதம குரு - நாயன்மார்க்கட்டு அரசடிப்பிள்ளையார் ஆலயம்
- பிரதம குரு - வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்
- பிரதம குரு - சுழிபுரம் மகாமாரி அம்பாள் தேவஸ்தானம்
- கும்பாபிஷேக பிரதம குரு
- ஆலயப் பிரதம குரு

வாழ்த்துச் செய்திகள் 12 - 24

- கௌரவ ஆளுநர்
- ஆளுநரின் செயலாளர்
- அரசாங்க அதிபர்
- பணிப்பாளர் (இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்)
- பிரதேச செயலர் (வலி. வடக்கு)
- தலைவர் - ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
- பிரதேச சபைத் தவிசாளர் (வலிகாமம் வடக்கு)
- பரிபாலன சபைத் தலைவர்

பாமாலைகள்

- குரும்பசிட்டி அம்பாள் திருவூஞ்சல் 25
- குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள் திருப்பதிகம் 28
- குரும்பசிட்டி முத்துமாரி அகவல் 32
- ஏழூர் நாயகி முத்துமாரி 33
- கூட்டுப் பிரார்த்தனை 37
- கூடி உனைக் கும்பிடுவோம் 39

தலவரலாறு 40

கட்டுரைகள்

- "அம்பாள் அன்றும் உருவாகினாள் இன்றும் உருவாகின்றாள்" 48
- மாரி அருள் பெருவாரி 54
- மாரி அம்மையின் திருக்குடமுழுக்கும்.... 58
- மலரும் நினைவுகள் 62
- கலையும் தமிழும் சைவமும் வளர்ந்த மண்..... 64
- நினைவில் இருந்து அகலாத நிகழ்வுகள் 67
- என்றும் துணை இருப்பாள் எங்கள் முத்துமாரி 70
- ஆலயத்தொண்டே இவர்கள் தம் மாண்பு 72
- மாரியின் மகோற்சவம் 76

சிறப்புக் கட்டுரைகள்

- சைவசமய நுட்பமும் சக்தி தத்துவச் சிறப்பும் 80
- முத்துமாரியம்மன் வழிபாட்டு மரபுகள் ஊடாக அறியப்படும்
- பண்பாட்டு நிறுவனங்கள் 85

இணைப்புக்கள்

- உற்சவங்களும் உபயகாரர்கள் பற்றிய விபரமும் 91
- திருப்பணிகளைத் தம் பணியாக செயற்படுத்தி தந்தோர் விபரம் 93
- திருப்பணி நிதி மற்றும் பொருள் உதவி புரிந்தோர் விபரம் 94 -102
- அன்னையின் அருள் வேண்டிப் பிரார்த்திப்போர் 103
- தொடர்வோம் திருப்பணி வேலைகளை.... 104

நன்றியுரை 105





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

*மாரிதன் மரலடி யோங்க*
*மண்மிசைத் தலமு மோங்க*
*சீரிய பதியு மோங்க*
*சிறப்புற மனைக ளோங்க*
*வீரிய மைந்த ரோங்க*
*விளைபயிர் மண்ணி லோங்க*
*பேரிடர் களைவாய் குரும்பை*
*நகர் மாரிநின் சீரடிகள் போற்றி*

எல்லாம் வல்ல எம்பெருமாட்டியின் பாதாரவிந்தங்களே தஞ்சமென நெஞ்சுருகி வாழ்ந்த மக்களால் மாண்பு பெற்ற மண் குரும்பசிட்டி. இம் மண்ணில் மீளவும் தாய்க்கு ஒரு தலம் அமைத்து கும்பாபிஷேக பெரும் சாந்தி விழாவுடன் கூடவே கும்பாபிஷேக மலர் ஒன்றையும் காணக் கிடைக்கப் பெற்றமை அம்பாளின் திருவுளமும் நாம் பெற்ற பாக்கியமுமாகும்.

மலரும் இம்மலரானது அதன் வடிவமைப்பினாலும் உள்ளடக்கியுள்ள விடயங்களாலும் மணம்பரப்ப வேண்டும் என்பதற்கு அப்பால் நொந்து போயுள்ள எமது கிராமத்துக்கும் மக்களுக்கும் நோய் தீர்க்கும் மூலிகையாக அவர்களால் என்றென்றும் பேணப்பட வேண்டும் என்பதே ஆலயப் பரிபாலன சபையினரின் எதிர்பார்ப்பாகும்.

மனிதவாழ்க்கைக் காலத்தில் இரு தசாப்தங்கள் என்பது கணிசமானதொரு காலப்பகுதியாகும். எந்தையும் தாயும் அவர் முன்னவர் பலரும் மகிழ்ந்து குலாவி இருந்த எம்மண்ணில் நாமும் வாழ்ந்தோம் வளர்ந்தோம். தவிர்க்க முடியாததொரு இடப் பெயர்வானது ஏறத்தாழ இரு தசாப்தங்களுக்கு மேலாக நீடித்த வகையில் எமது இயல்பான வாழ்க்கையை சீரழித்து விட்ட தென்றே குறிப்பிட வேண்டும். இன்று எமது கிராமத்தின் ஒரு சிறு பகுதி மீள்குடியேற்றத்துக்காக விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் அருள்மிகு முத்துமாரி அம்பாள் தன் அருள் வீச்சினால் எம்மக்களையும் சந்ததிகளையும் மீண்டும் எம்மண்ணிற்கு அழைத்து நிற்கிறாள். எம்பெருமாட்டியின் திருவருளின் அதிர்வலைகள் எம்மண்ணுக்கும் மக்களுக்கும் நல்லதொரு சுபீட்சத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே இம்மலரின் ஊடாக நாம் வேண்டும் பிரார்த்தனையாகும். இந்தவகையில் எம்மண்ணின் தனித்துவத்தையும் மகத்துவத்தையும் அனுபவித்த முதியவர்களின் வளத்தினையும் எம்மண்ணில் பிறந்தும் மண்ணின் வாசனையை நுகரமுடியாத வயதில் உள்ள இளைஞர்களின் பலத்தையும் ஒன்றிணைய வைத்து எமது எதிர்காலச் சந்ததியினருக்கு பயனுள்ள குறிப்புக்களைக் கையளிக்க வேண்டும் என்பது காலத்தின் கட்டாய தேவையாகி நிற்கிறது.

எமக்கெல்லாம் எழுத்தறிவித்து எழுத்தாணி பிடிக்க வைத்த வித்தியாலயம், சைவ நெறி வளர்த்து வாழ்வாங்கு வாழவைத்த ஆலயங்கள், ஏர்த்தொழிலுக்கு கைகொடுத்த விளைநிலங்கள் இவ்வாறான அழிந்தும் அழியாச் சின்னங்களாக விளங்கும் கிராமத்தின் அடையாளங்களை ஆவணப்படுத்துதலின் பெறுமதியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடப்பெயர்வின் தாக்கங்கள் எமக்கு உணர்த்தி நிற்கின்றன. இந் நடவடிக்கைகளில் ஒன்றாகவே குரும்பசிட்டி அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலய வரலாற்றுச் சான்றுகள் இம்மலரூடாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஆலய வரலாற்றில் 1970 மற்றும் 1981 ஆம் ஆண்டுகாலப்பகுதிகளில் கும்பாபிஷேகங்கள் நடை பெற்றுள்ளமையை அறியக் கூடியதாக இருப்பினும் ஆலயம் தொடர்பான எந்தவித வராலாற்று ஆவணங்களும் வெளியிடப்படாமையால் இம்மலரின் ஊடான பதிவுகளே ஆலயம் தொடர்பான ஆவணப்படுத்தல் நடவடிக்கையில் முதல் முயற்சியாக அமைகிறது எனலாம். மிக நீண்டதொரு கால இடைவெளியின் பின் இம்முயற்சி மேற் கொள்ளப்படுவதால் ஆவணப் படுத்தக் கூடிய பல தகவல்களை பெறுவதில் இடர்ப்பாடுகள் நிலவின. குறிப்பாக தகவல்களை தரக்கூடிய முதியவர்கள் பலர் காலமாகிவிட்டார்கள். இது மட்டுமன்றி பல்வேறு இடங்களிலும் இடம் பெயர்ந்து அல்லற் பட்ட வேளைகளில் ஆலயம் தொடர்பான பல தகவல்களைப் பெறக் கூடிய நூல்கள் குறிப்புக்கள் என்பன பேணப்பட முடியாமல் அழிந்து விட்டன.

எனவே பல சிரமங்கள் மத்தியில் எமக்குக் கிடைத்த விடயங்களை எமது கிராமத்து உறவுகளின் உணர்வுகளின் வழிவந்த குறிப்புக்களாகவும், முத்துமாரி அம்மாளின் பாமாலைகள் ஊடாகவும், படத்தொகுப்புக்கள் ஊடாகவும், விசேட கட்டுரைகள் ஊடாகவும் ஆவணப்படுத்தியுள்ளோம். ஆசிச் செய்திகள் வாழ்த்துச் செய்திகள் என்பன மலரை அலங்கரிக்கும் நோக்கில் மட்டுமன்றி அவற்றின் ஊடாகவும் ஆலயத்தின் வரலாறு தொடர்பான ஆவணப்படுத்தல்கள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தவகையில் இம்மலரை தொகுக்கும் பொறுப்பினைத் தந்துதவிய ஆலய பரிபாலன சபையினருக்கும் இம்மலரில் பிரசுரிப்பதற்குத் தேவையான விடயங்களை மனமுவந்து நல்கிய அம்பாள் அடியவர்களுக்கும் சிறப்புக் கட்டுரைகளைத் தந்துதவிய பெரியோர்களுக்கும் சிரமம் பாராது ஆலயம் தொடர்பான விடயங்களை நேர்காணலின் போது தந்துதவிய பெரியோர்களுக்கும் படத் தொகுப்புகளுக்கு உதவிபுரிந்த ஆர்வலர்களுக்கும் இம்மலரினை சிறந்த வகையில் வடிவமைத்து அச்சேற்றி தந்த அச்சகத்தினருக்கும் குரும்பசிட்டி அருள்மிகு முத்துமாரி அம்பாளின் திருவருள் கிடைக்க வேண்டும் என இம்மலர் கொண்டு பிரார்த்திக்கிறோம்.

மேலும் அருள்மிகு முத்தமாரி அம்பாள் ஆலய கும்பாபிஷேகம் இனிதே நிறைவேற பொருள் உதவி நிதி உதவி நல்கியோருக்கும், தாமாகவே சில திருப்பணி வேலைகளை பொறுப்பேற்று நிறைவேற்றிய பெரியோர்களுக்கும், சரீர உதவிகள் புரிந்த அன்பர்களுக்கும் ஆகமக் கிரியைகளில் பங்குகொண்ட அந்தணப் பெரியோர்களுக்கும், அம்பாள் அடியவர்களுக்கும் அருள்மிகு முத்துமாரி அம்பாளின் திருவருள் என்றென்றும் நிலைத்திட பிரார்த்திக்கும் வாடாமலராக இம் மலரினை வெளியிடுவதில் பெருமகிழ்வடைகிறோம்.

நன்றி

**அருண். சக்திவேல்**
மலர்க்குழுவின் சார்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
குருபாதம்



# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

முதலாவது குருமஹா சந்நிதானம்

ஆதீன குரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

இரண்டாவது குருமஹா சந்நிதானம்

**ஸ்தாபிதம் : 1966**

**021 222 2870**

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

10/08/2013

## அருளாசிச் செய்தி



ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்
இரண்டாவது குரு மஹா சந்நிதானம்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

அம்பிகை அடியார்களுக்கு!

குரும்பசிட்டிப் பதியில் எழுந்தருளியிருக்கும் முத்துமாரி அம்பாளுக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதை நிதர்சனப் படுத்தும் பொருட்டு மலர்வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். சைவ சமயமும் தமிழ் பண்பாட்டு நெறியும் இயல் இசை நாடகம் போன்ற முத்தமிழிலும் சிறந்து விளங்கிய சிந்தனையாளர்களும் பல ஆலயங்களும் சிறந்து விளங்கிய இப் பிரதேசத்தில் நீண்டகாலமாக வழிபாட்டுத் தெய்வமாக விளங்கிய முத்துமாரி அம்பாளுக்கு போரினால் பல சிதைவுகள் ஏற்பட்டு இன்று புனர் நிர்மாணம் செய்யப்பட்டு புதியதோர் ஆலயமாக காட்சி தருவது அனைத்து மக்களுக்கும் மகிழ்ச்சியைத் தருகிறது. உலகத்துக்கு தாயாக விளங்கும் அன்னை இவ்வாலயத்தில் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பொருட்டு முத்துமாரி அம்பாளாக வீற்றிருக்கின்றாள். அம்பிகையினுடைய கருணையினால் பன்னிரண்டாண்டுகளுக்கொருமுறை நடைபெறும் கும்பாபிஷேகம் இவ் வாலயத்தில் நடைபெறுவது ஊருக்கும் ஆலயத்திற்கும் பெருமையாகும். இப் புனித செயலைச் செய்திருக்கும் அனைத்து அன்பு உள்ளங்களையும் வாழ்த்துகின்றோம். அனைவரும் கும்பாபிஷேகத்தைத் தரிசித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக. மலர் சிறப்புற அமைய அம்பிகையைப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகை துணை

# கீரிமலை ஸ்ரீநகுலாம்பிகா சமேத ஸ்ரீநகுலேஸ்வரசுவாமி கோவில்
# KEERIMALAI SRI NAGULAMBIGA SAMETHA SRI NAGULESWARA SWAMY TEMPLE

*Rajarajasri K. Naguleswara Kurukkal* J.P.
Governing Authority & Chief Priest,
Naguleswaram, Keerimalai.
Kankesanthurai.
Sri Lanka
Phone:- 0217900470
0213212440



ராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள்
ஆதீனகர்த்தாவும் பிரதம சிவாச்சாரியாரும்
நகுலேஸ்வரம்,
கீரிமலை,
காங்கேசன்துறை.
ஸ்ரீலங்கா

## அருளாசிச் செய்தி



ராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள்
ஆதீனகர்த்தாவும் பிரதம சிவாச்சாரியாரும்
நகுலேஸ்வரம் கீரிமலை

உலகில் உள்ள உயிர்கள் அனைத்திற்கும் ஆதாரமாக விளங்குபவள் அன்னை பராசக்தி. அருட்பெரும் சக்தியாக பல்வேறு கோலங்கொண்டு அருள்பாலிக்கும் அன்னை குரும்பசிட்டி எனும் பொற்பதியில் அருள்மிகு முத்துமாரி அம்பாளாய் எழுந்தருளி வேண்டுவார் வேண்டுவதை அருளிவருகிறாள். யாழ் மாவட்டத்தில் வலி வடக்குப் பிரதேசத்தில் ஏறத்தாழ 247 சைவ ஆலயங்கள் காணப்படுகின்றன. இவைமட்டுமன்றி வரலாற்றுப் பெருமை பெற்ற கீரிமலை நகுலேஸ்வர ஆலயம் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம் ஆகிய இரு பெரும் ஆலயங்கள் இங்கு அமையப் பெற்றமை வலி வடக்கு பிரதேசத்தின் தனிச் சிறப்பாகும்.

இன்று எமது பிரதேசத்தில் போர்ச் சூழல்களுக்கு உட்பட்டு அழிவுற்ற நிலையில் அனேக ஆலயங்கள் காணப்படுகின்றன. இவ் ஆலயங்களை மீளப் புனரமைப்பு செய்யவேண்டிய பொறுப்பும் கடமையும் சைவ சமயத்தவர் களுக்குண்டு. இப்பணிகளில் சைவசமயம் சார்ந்த நிறுவனங்களும் பெரும் ஆலயங்களும் பங்களித்தல் மேலும் வரவேற்கத்தக்க ஒன்றாக அமையும்.

இத்தகைய ஒரு சூழலில் காணப்பட்ட அருள்மிகு அம்பாள் ஆலயத்தினை அப் பிரதேசத்தில் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட ஒரு சிறு காலப்பகுதிக்குள் புனரமைத்து கும்பாபிஷேகத்தினைக் காணும் நிலை பெருமைப்பட வைக்கும் ஒன்றாகும். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற சம்பிரதாய மொழிக்கு அமைவாக இவ்வூர் மக்கள் தாம் வழிபட்ட தாய்க்கு ஒரு தலம் அமைத்து அவளின் அருள் பார்வையின் கீழ் குடியமர தயாராகுவது நிச்சயம் அவர்கள் வாழ்வுக்கும் கிராமத்துக்கும் நலம்சேர்ப்பதாக அமையும். இந்த வகையில் ஆலயத்தின் திருப்பணிகள் விரைவாக இனிதே நிறைவேறப் பங்களித்த அனைத்து உள்ளங்களுக்கும் ஆசிகூறி ஆலயத்துக்கு மேலும் அருட் பொலிவு கிடைக்கும் வகையில் தேர் மற்றும் கோபுரத் திருப்பணி வேலைகளும் மிக விரைவில் ஆரம்பிக்கப்பட்டு நிறைவடைய வேண்டும். அருள் மிகு முத்துமாரி அம்பாளின் அனுக்கிரகத்தால் கிராமம் மீண்டும் பெருமைபெற்றோங்க பிரார்த்திக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
குகமயம்



# மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
# MAVIDDAPURAM SRI KANTHASWAMY TEMPLE

மஹாராஜஸ்ரீ
து.ஷ.இரத்தினசபாபதிக் குருக்கள்
ஆதீன கர்த்தா - பிரதமகுரு.
மாவையாதீனம்,
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.
ஸ்ரீலங்கா

T.P. 021 3210349

Maharajasri:
D.S.Ratnasabapathy Kurukkal
GoverningAuthority & Chief High priest
Mavai Aadheenam,
Maviddapuram,
Tellippalai.
Sri Lanka.

## அருளாசிச் செய்தி

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில்
மாவை ஆதீனம்
மாவிட்டபுரம்

ஈழத்திருநாட்டின் சிரமெனத் திகழும் யாழ்ப்பாணத்தில் சிறப்புற்று விளங்கிய பதியே குரும்பசிட்டிக் கிராமமாகும். இங்கு இக் கிராமத்தின் எழுச்சிக்கு வழிகாட்டி நிற்கும் அன்னை ஸ்ரீ முத்துமாரி கொலு வீற்றிருக்கும் திவ்விய பதியாகும். ஆனால் என்ன செய்வது? இடர்களும் இடர்ப்பாடுகளும் நிறைந்த அக்காலத்தில் ஊர் விட்டோடிய நாம் இருபத்திரண்டு வருடங்களின் பின் தற்போதே நாட்டு நிலை மாறி தாய்முகம் காணும் பேறு பெற்றோம். ஆகவே மாரி வளம் தரும் மாரியாக மண்ணைக் குளிர வைக்கும் தேவியாக அருள் வழங்கும் அன்னையின் ஆலயம் சாதாரணமாகவே பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறையேனும் நைமித்திய பூசைகளில் கும்பாபிஷேகக் கிரியைகளைக் காணவேண்டியது கட்டாயம் என்ற விதி இருப்பதனாலும் இப்போதே நாம் எம் ஊருக்கு வந்தமையாலும் அன்னையின் அருளால் ஆயிரம் தீபங்கள் சுடர் கூட்ட வேத மந்திர கீதங்கள் ஒலிக்க நிகழும் குடமுழுக்கு விழா 27.3.2013 அன்று நிகழ்வதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

அவ்வாறே வெளியிடப்பெறும் இம்மலரும் மலர்ந்து மணம்தர எல்லாம் வல்ல எம் பெருமான் கஜவல்லி மஹாவல்லி சமேத ஸ்ரீ காங்கேயப் பெருமானின் பாதங்களைப் பணிந்து இம் மலர் சிறந்து மணந்தர அவர் அருளை வேண்டிப் பணிந்து ஆசி கூறுகிறேன்.

டி.இ.ஞானஸ்கந்த சர்மா
மாவை ஆதீன இளவரசு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்


# நாயன்மார்கட்டு அரசடிப்பிள்ளையார் ஆலயம்
# Nayanmarkaddu Arasady Pillaiyar Alayam

பதிவு இல. / Reg. No. HA/5/JA/668

நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.
Nallur, Jaffna, Sri Lanka.

**Governing Authority & Chief Priests**

Sivasri S. Maheswarakurukkal J.P.
Sivasri S. Mahalingasivakurukkal J.P.

தொ.பே. இல. / T.P. No. 021 2219563, 021 2227399, 021 3215590

Website: www.nayanmarkaddu.org


## அன்னையின் அருளால் அமைதி சாந்தி சமாதானம் கிடைக்கட்டும்

சிவபூமி தட்சண கைலாயம் என்றெல்லாம் போற்றப்பட்ட ஈழத்திருநாட்டிலே யாழ்ப்பாணம் வலி வடக்குப் பகுதியிலே குரும்பசிட்டிப் பதியிலே பல நூற்றாண்டு காலமாக கோயில் கொண்டு எழுந்தருளி அருளாட்சி செய்து வருகின்ற அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா நந்தன வருடம் பங்குனி மாத உத்தர நன்நாளில் நடைபெறுவதையிட்டு நாமும் பெருமகிழ்வடைகிறோம்.

இவ் வாலயம் இரண்டு தசாப்தங்களுக்கு முன்பு நாட்டில் நடைபெற்ற அசாதாரண சூழ்நிலையில் முற்றாக சேதமாகியிருந்தது. ஆனால் அன்னையின் திருவருளால் கடந்த வருடம் 2012 பங்குனி மாதம் தொடக்கம் திரும்பவும் பூசை வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டு ஆலயக் குருக்கள் குடும்பத்தினர் அம்பிகையின் மீளா அடியவர்கள் இடம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் இவ்வூர் அடியவர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து ஆலயத்தை புனர் நிர்மாணம் செய்து அழகாகத் திருக்கோயில் மண்டபங்கள் அமைத்து பிள்ளையார், முருகன், நவக்கிரக தேவர்கள், பைரவர், சண்டேஸ்வரி முதலிய தெய்வங்களுக்கு புதிதாக ஆலயம் அமைத்தும் மணிக்கோபுரம், வசந்த மண்டபம், யாகசாலை, கொடிமரம், பாகசாலை, களஞ்சியம் போன்ற ஆலய ஆயாதி சிற்ப சாஸ்திர முறைக்கு அமைவாக அமையப்பெற்று பார்ப்பவர்களையெல்லாம் அதிசயத்தில் ஆழ்த்தும் வண்ணமுள்ளது என்றால் அது அன்னையின் திருவருள் தான் என்பதில் ஐயமில்லை.

மேலும் இப்படிப்பட்ட பெரிய திருப்பணியிலே தங்களை அர்ப்பணித்து பண உதவி பொருள் உதவி சரீர உதவி புரிந்த அன்னையின் மீளா அடியவர்கள் புலம்பெயர்ந்த வெளிநாடுகளில் வாழும் அடியவர்கள் அனைவருக்கும் அன்னையின் திருவருட்கடாட்சம் கிடைக்கட்டும். அத்தோடு மகா கும்பாபிஷேக பெருஞ் சாந்திவிழாவை நடாத்திவைத்த மதிப்பார்ந்த குருமார்கள் அனைவருக்கும் மாரியின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன். கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா நிறைவுபெற்று நாட்டில் அமைதி சாந்தி சமாதானம் சுகவாழ்வு எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்று நாமும் அன்னையைப் பிரார்த்திக்கிறோம்.

**சிவசிறீ. சுதா. மகாலிங்கசிவக் குருக்கள் ஜே.பி**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதமகுருவின் ஆசிச்செய்தி

இலங்கைத் திருநாட்டில் யாழ்ப்பாணம் குரும்பசிட்டிப் பகுதியில் இற்றைக்குப் பல வருடங்களாக அருளாட்சி செய்து வருகின்ற ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம் முற்றிலும் புனருத்தாரணம் செய்யப்பட்டு புதுப் பொலிவுடன் காட்சி கொடுக்கின்றது.

இவ்வாலயத்தின் மகா கும்பாபிஷேகம் 27.03.2013 பங்குனி உத்தர நன்நாளில் நடைபெறுவது புண்ணிய நிகழ்வாகும். இவ்வாலயத்துக்கும் அடியேனுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. எனது மாமனார் சிவஸ்ரீ.ந. தியாகராஜாக்குருக்களும் தமையனார் சிவஸ்ரீ ம.சுப்பிரமணியக்குருக்களும் இவ் வாலயத்தில் மகோற்சவங்களைச் செய்தவர்கள். அந்த வகையில் இவ்வாலயத்தின் பிரதமகுருவான சிவஸ்ரீ.இ.திருக்குமரக் குருக்கள் எனது சிஷ்யனாவார். அவரை ஆலய பிரதமகுருவாக கொண்டு நடைபெறும் அம்பிகையின் கும்பாபிஷேகப் பெரும் சாந்தி விழாவுக்கும் வெளிவர இருக்கும் கும்பாபிஷேக சிறப்பு மலருக்கும் ஆசிச் செய்தி வழங்கும் பெரும்பாக்கியம் அடியேனுக்கு கிடைத்தமையையிட்டு உவகையடைகிறேன்.

இம்மலரானது கும்பாபிஷேக கிரியை நிகழ்வுகள், ஆலயக் கட்டுமானப் பணிகள், அவற்றின் நிழல் பிரதிகள், புத்திஜீவிகளின் ஆக்கங்கள் எனப் பற்பல அறிவுசார்ந்த நூலாக வெளிவரும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இச் சந்தர்ப்பத்தில் இவ்வாலய புனருத்தாரணப் பணிகள் கும்பாபிஷேக கிரியை கால வழிபாடுகள் மற்றும் கும்பாபிஷேக மலர் வெளியிட உறுதுணையாக செயல்புரிந்த அடியவர்கள், குருமார்கள், கட்டடக் கலைஞர்கள் அனைவருக்கும் அம்பிகையின் திருவருள் பூரணமாகக் கிடைக்க வேண்டுமென நல்லாசிகளைக் கூறிக்கொள்வதோடு சிவஸ்ரீ இ.திருக்குமரக் குருக்களின் ஆற்றுப்படுத்தலில் மேலும் இவ்வாலயம் சிறக்கவும் வெளிவரும் மலர் ஓர் ஆவணப் பொக்கிசமாக என்றும் வாடா மலராக திகழ எல்லாம் வல்ல அம்பிகையை பிரார்த்தித்து அமைகின்றேன்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"
"அம்பிகையை சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்"

**சிவஸ்ரீ. சோமாஸ்கந்த தண்டபாணிகதேசிகர்** (ஜே.பி)
இந்துமத குரு பீடாதிபதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உ
தேவி மயம்

## மகாமாரி அம்பாள் தேவஸ்தானம்
## Mahamari Ambal Thevasthanam

Siva Sri S. Sunthararajah Kurukkal
Chief Priest
Vadakkamparai,
Tholpuram,
Chulipuram
Sri Lanka.

சிவஸ்ரீ சு. சுந்தரராஜக்குருக்கள்
பிரதம குருக்கள்
வழக்கம்பரை.
தொல்புரம்,
சுழிபுரம்.
சிறிலங்கா.

Tele Phone No: 0602213302


### சிவசிறீ சு. சுந்தரராஜக்குருக்கள்

மகா மாரி அம்பாள் தேவஸ்தானம்
சுழிபுரம்.

குரும்பசிட்டி முத்துமாரி அம்பாளுக்கு அம்பாளின் அருட்கடாட்சத்தால் பெரும் சாந்தியான கும்பாபிஷேகம் நடைபெறுவது மகமாரித்தாயின் திருவருளே.

குரும்பசிட்டிக் கிராமம் சிறந்த கல்விமான்களும், பெருமைமிக்க பண்டிதர் புலவர்களும், புகழ்பூத்த செல்வந்தர்களும் வாழ்ந்த கிராமம். நாட்டின் அசாதாரண நிலையில் கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக சந்தித்த இடப்பெயர்வு தாங்கொணாத துன்பமாகும். நம் முன்னோர்களும் இன்றைய மக்களும் செய்த புண்ணிய காரியத்தால் இக்கிராம ஆலயங்கள் புதுமை பெற்று கும்பாபிஷேகம் நடைபெறுவது காலத்தின் மிக முக்கிய தேவையாகும். நாம் நமது கிராமத்துக்கு போவதற்கு முன் அங்குள்ள ஆலயங்களிலுள்ள தெய்வங்களை வழிபடுவோம். திருமுருக கிருபானந்த வாரியார் இந்தியாவில் எங்கு பூசைவழிபாடுகள் மற்றும் புனருத்தாரணம் இடம் பெறாத ஆலயங்கள் காணப்படுகின்றனவோ அவற்றைத் தனது பிரசங்க வருமானத்தின் மூலம் சீர்செய்தமையை நாம் அறிவோம். மேற்கண்டவாறு வலி வடக்கு மக்களும் இக் கைங்கரியங்களைச் செய்வது போற்றிப் பாராட்டப் பட வேண்டிய ஒன்றாகும். இவ் வாலயத்தில் தொன்றுதொட்டு ஆலயக்குருமார்களும் பரிபாலன சபையினரும் சிவமும் சக்தியும் போல் ஆலய புனருத்தாரணம் கும்பாபிஷேகம் என்பவற்றை நடத்துவது வியத்தகு கைங்கரியமாகும். ஆகவே குரும்பசிட்டி அம்பாள் குரும்பசிட்டி மற்றும் வலிவடக்கு மக்களையும் காப்பாற்ற இக் கும்பாபிஷேகம் அமையவேண்டுமென எல்லாம் வல்ல தாயை வணங்கி எனது நல்லாசிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

**சிவசிறீ. சுப்பிரமணிய சுந்தரராஜக் குருக்கள்**
"ஆகம கிரியா ஜோதி" "பதி பசு பாசகர்"




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



சின்மயா மிஷன்
9, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்

குரும்பசிட்டி முத்துமாரி அம்மன் ஆலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு மண்டலாபிஷேகப்பூர்த்தியாகிய இன்று 11.05.2013 கும்பாபிஷேக மலர் வெளியிடப்படுவது சிறப்புக்குரியது. ஆலயங்கள் ஆன்மீக மையங்களாகத்திகழ்கின்றன. மிக அண்மையில் மீள் குடியேற்றம் இடம்பெற்ற இந்தக்கிராமத்தில் இவ்வாலயம் மீளக்கட்டப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டிருப்பது கிராம மக்களுடைய பக்தியையும் சமய ஈடுபாட்டையும் எடுத்துக் காட்டுகின்றது. எல்லாம் வல்ல முத்துமாரியம்பிகை எங்கள் அனைவரையும் ஆசீர்வதிக்க வேண்டும் எனப்பிரார்த்திக்கின்றோம்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

ஓம் நமசிவாய!

இறைபணியில்

**ஜாக்ரத் சைதன்யா**

வதிவிட ஆச்சாரியார்,
சின்மயா மிஷன்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேக பிரதம குருவின்

## ஆசிஉரை



ஈழ நாட்டின் யாழ் நகரின் வடபால் வனப்பும் செழிப்பும் பெற்று தெய்வ பக்தியும் இறை நம்பிக்கையும் கொண்ட மக்களையும், சான்றோர்களையும் வர்த்தக பெருமக்களையும் தன்னகத்தே கொண்டு தனித்துவமான பண்பாடுகளைப் பேணிவரும் ஊராம் குரும்பசிட்டியிலே பல்லாண்டு காலமாகப் பெருங் கோயில் கொண்டு எழுந்தருளி அருள் பாலித்து வருபவள் எங்கள் அகில புவன மாதாவாம் முத்துமாரி அம்மன். மக்களின் துயர் தீர்த்தும் வேண்டுவன ஈந்தருளும் தாயாரின் பெருமைகளையும் புதுமைகளையும் அங்கு வாழ்ந்த மக்கள் சீரோடும் சிறப்போடும், புகழோடும் வாழ்ந்து வந்ததை எனது தகப்பனார் சிவலோக நாதக்குருக்கள் அவர்களின் காலத்திலிருந்தே நானறிவேன். அவ்வாறு சிறப்போடு வாழ்ந்து வரும் நாளில் கடந்த கால போர் அனர்த்தமும் இடப்பெயர்வும் எல்லோரையும் துயர் கொள்ளச் செய்தது.

எப்படியாயினும் அம்பிகை அங்கே பரிபூரணமாக வியாபித்திருந்ததன் பயனாக அவளது திருப்பெருங் கருணையினால் குறுகிய காலத்தில் ஊர்மக்களின் பெரு முயற்சியினால் அதே இடத்தில் மீண்டும் நிர்மானிக்கப்பட்டு புதுப் பொலிவோடு காட்சியளிக்கின்றது. முத்துமாரி அம்பாளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் நடைபெறும அஷ்ட பந்தன நவகுண்ட பக்ஷ பிரதிஸ்டா மகா கும்பாபிஷேக கைங்கரியத்தை அம்பிகையின் விருப்புக்கிணங்க அவளது திருவருளோடும் குருஆசியுடனும் நடாத்த கிடைத்ததையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன் கும்பாபிஷேகத்தின் பயனாக இவ்வூர் மீண்டும் செழிப்புற்று ஊர்மக்கள் நன்மைகளையும், நலன்களையும் பெறவேண்டும் என பிரார்த்தித்து எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும். என வேண்டி எல்லாம் வல்ல முத்துமாரி அம்பிகையின் பாதார விந்தங்களைப் பணிந்து ஆசி கூறி அமைகின்றேன்.

**சி. இராஜேந்திரக்குருக்கள்**
திருநெல்வேலி முத்துமாரி அம்மன்
தேவஸ்தான பிரதம குரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரும்பசிட்டி அருள் மிகு முத்துமாரி அம்பாள் தேவஸ்தான பிரதமகுருவின் ஆசிச்செய்தி



"அன்றே தடுத்து என்னை ஆண்டுகொண்டாய்
கொண்டது அல்லவென்கை
நன்றே உனக்கு இனிநான் என்
செயினும் நடுக்கடலுள்
சென்றே விழினும் கரையேற்றுகை
நின் திருவுளமே
ஒன்றே பலவுரு வேயருவே
என் உமையவளே"

உலகம் அனைத்தையும் படைத்துக் காத்து ஊனுக்குள் உயிருக்குள் உணர்வாய் உருவாய் அருவாய் இவ்வுலகனைத்திலும் நீக்கமற நிறைந்து கனியில் சுவையாய் காற்றில் இயக்கமாய் நீருள் நெருப்பாய் நெருப்புள் நீராய் நிறைந்திருக்கும் அன்னை அன்பின் வடிவமுடையாள். ஆதலால் தான் இறைவனை வழிபடும் அடியார்கள் அம்மையே அப்பா என்று அன்னைக்குச் சிறப்பிடம் வழங்கி அழைக்கின்றனர். அவளும் பால் நினைந்தூட்டும் தாயாக இருந்து அடியார்களின் தேவையை அறிந்து ஓடோடி வந்து உதவுகிறாள். கல்லினுள் தேரைக்கும் கருப்பையில் இருக்கும் உயிருக்கும் உணவு அளிப்பவள் அவள். இவ்வுலகின் இயக்கமே அவளால்தான் நடைபெறுகின்றது. சக்தியானவள் இச்சா, கிரியா, ஞானா சக்திகளை உள்ளடக்கியதானவள். உயிர்க் குலம் தழைத்து வளர்வதற்கு சக்தி என்ற ஆற்றலே அடித்தளமாக அமைகிறது. என்ற பொருளினை "அருளது சக்தியாகும்" என்ற சிவஞான சித்தியாரின் வாக்கால் அறியலாம்.

அகிலாண்ட கோடிகளையும் சிருஸ்டித்தும் பின்னையும் பின்னையும் கன்னியென மறைபேசும் ஆனந்த ரூபமமயிலாம் அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தைப் புதிதாகக் கட்டியும் வர்ணம் தீட்டியும் புதுப் பொலிவோடு விளங்கும் திருக்கோவிலின் புனராவர்த்தன பெருஞ்சாந்தி விழா நடைபெறவும் அதனை முன்னிட்டு வெளியிடப்பட விருக்கின்ற கும்பாபிஷேக மலர் சிறப்பாக வெளிவரவும் அம்பாளின் திருவருட் கடாட்சம் கிட்டியுள்ளது. இம் மலருக்கு என் மனமார்ந்த ஆசியைக் கூறுவதுடன் அம்பாளின் அருளாட்சி என்றும் கிடைக்க வேண்டுகின்றேன்.

ஆலயம் என்பது ஆன்மாக்கள் வசப்படும் இடமாகும். உலகிலே பரந்து கிடக்கின்ற சூரியனின் ஒளியில் பஞ்சை வைத்தால் வெதும்பிவிடும். அதே சூரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளியில் காந்தக்கண்ணாடி ஊடாக வருகின்ற ஒளியில் பஞ்சை வைத்தால் எரிந்து சாம்பலாகிவிடும். சூரிய காந்தக் கண்ணாடியில் வரும் ஒளி அதி சக்தி வாய்ந்தது. அதே போல பரந்து விரிந்து இருக்கின்ற இறைவனை ஆலயத்தில் மூலஸ்தானத்தில் யந்திரம் விம்பரூபமாக எழுந்தருளச் செய்து மந்திரங்கள் கிரியைகளினால் கும்பாபிஷேக விழாவாக ஏற்படுத்தி முழுத்திருவருளையும் பெறுவதுதான் கும்பாபிஷேகத்தின் பெருமை.

இப் பூவுலகில் உள்ள அனைத்து மனித சமுதாயத்தினதும் ஆணிவேரான கலை கலாசார பண்பாடுகளின் மேம்பாட்டுக்கு முழுத்தொண்டாற்றி வருவன கோயில்களே. இவ் வழியே எமது முத்துமாரி அம்பாள் ஆலயமும் பல வழிகளில் எமது சமூதாயத்திற்கு கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களை நிலை நாட்டி வருகின்றது. அவ் வழியே தமிழர்களின் பாரம்பரிய கலைகளாம் பண்ணிசை, நாடகம், வில்லுப் பாட்டு போன்றனவற்றை எமது சமுதாயத்தில் வேரூன்றச் செய்து கலை உலகில் பல சாதனையாளர்களை உருவாக்கவும் அம்பாளை உளமார வேண்டி இவ்வாலயத்தை குறுகிய காலத்துள் அமைத்த ஸ்தபதி யினருக்கும் மற்றும் சிற்பவேலை, வர்ணவேலை, மங்கலஇசை, சாமி அலங்காரக் கலைஞர்களுக்கும் பெருஞ்சாந்தி விழா நடத்த பொருளுதவி நிதிஉதவி, சரீர உதவி அனைத்தையும் தந்து உதவிய அனைத்து அன்னையின் அடியார்களுக்கும் எனது நன்றியையும், அம்பாளுடைய அருளும் கிடைக்க அன்னையை வேண்டி ஆசி கூறுகிறேன்.

"லோகா ஸமஸ்தா சுகினோபவந்து"

ஆலய பிரதமகுரு

**தி.இரத்தினசாமி ஐயா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ආණ්ඩුකාර කාර්යාලය
උතුරු පළාත
34, වන සංරක්ෂණ කාර්යාල පටුමග,
චුණ්ඩුක්කුලි, යාපනය

ஆளுநர் செயலகம்
வடமாகாணம்
34, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்

GOVERNOR'S SECRETARIAT
NORTHERN PROVINCE
34, Forest Office Lane,
Chundukkuli, Jaffna

செயலாளர் / Secretary / ලේකම් 021-2220561
பொது / General / සාමාන්‍ය 021-2220660
தொலைநகல் / Fax / ෆැක්ස් 021-2220661

මගේ අංකය / எனது இல. / My No. G/NPC/A4/SG/MSG

Date: 08.04.2013



# MESSAGE FROM THE HON. GOVERNOR, NORTHERN PROVINCE

I am extremely happy to send this felicitating message to the Kumbabhishekam ceremony of Kurumbasiddy Arulmihu Muththumary Ambal Thevasthanam.

After several tears interval, peoples of Kurumbasiddy have been re-settled on the invitation of the Government and they have taken immediate steps to renovate their temple and school. This is good initiative to the revitalization of Kurumbasiddy village and areas and stimulate remain people to return their original places.

I like to wish the people those who have taking hard effort to revitalization of Kurumbasiddy village and also consulate to the Kumbabhisheka ceremony.

I wish all success!

***GA Chandrasiri***
*Governor*
*Northern Province*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ආණ්ඩුකාර කාර්යාලය
උතුරු පළාත
34, වන සංරක්ෂණ කාර්යාල පටුමග,
චුණ්ඩුක්කුලි, යාපනය

ஆளுநர் செயலகம்
வடமாகாணம்
34, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்

GOVERNOR'S SECRETARIAT
NORTHERN PROVINCE
34, Forest Office Lane,
Chundukkuli, Jaffna

செயலாளர் / Secretary / ලේකම් — 021-2220561
பொது / General / පොදු — 021-2220660
தொலைநகல் / Fax / ෆැක්ස් — 021-2220661

මගේ අංකය / எனது இல. / My No. — G/NPC/A4/SG/MSG

Date: 08.04.2013

# கௌரவ ஆளுநரின் செயலாளரின்

# வாழ்த்துச்செய்தி



குரும்பசிட்டி அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலய புனருத்தாரன வேலைகள் நிறைவுற்று பங்குனி உத்தர நன்நாளில் கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்தகால அசாதாரண சூழ்நிலைகளால் முழுமையாகப் பாதிப்படைந்த கிராமம் குரும்பசிட்டி. இக்கிராமத்தின் சகல வளங்களும் அழிவடைந்தன இன்று 22 வருடங்களின் பின்பு இக்கிராம மக்கள் சொந்த இடம் திரும்பியுள்ளனர். இவற்றிற்கு திறவுகோலாக அமைந்தது இவ் அம்பாளின் ஆலய புனரமைப்பாகும். இது மக்களிற்கு நம்பிக்கையை ஊட்டி இக்கிராம மக்கள் சொந்த இடம் திரும்ப வழிவகுக்கும் எனத் திடமாக நம்புகின்றேன். இப்பிரதேச மக்களின் கலை, கலாசார, சமூக, பொருளாதார, பண்பாட்டுக்கோலத்தின் குவி மையமாக விளங்கும் அம்பாளின் மகா கும்பாபிஷேக நிகழ்வு சிறப்புறவும் இதன் மூலம் இக்கிராமத்தின் மறுமலர்ச்சியுடன் இதன் அயல் கிராமங்களின் மீள் குடியேற்றங்கள் நம்பிக்கையுடன் அமையப்பெறவும் வாழ்த்தி நிற்கின்றேன்.

**இ. இளங்கோவன்,**
ஆளுநரின் செயலாளர்,
வட மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary

දුරකථනය / தொலைபேசி / Telephone: 021-222 2235

දුරකථනය පොදු / பொது தொலைபேசி / General Telephone: 021-222 2233, 021-222 2234

ෆැක්ස් / பக்ஸ் / Fax: 021-222 2355


E-mail: gajaffna@sltnet.lk

**දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.**
**மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.**
**District Secretariat, Jaffna.**

මගේ අංකය / எனது எண் / My No.: Message from GA | ඔබේ අංකය / உமது எண் / Your No.: | දිනය / திகதி / Date: 21.03.2013

## அரசாங்க அதிபரின்

# வாழ்த்துச் செய்தி



பல்வேறு சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்ட வலிவடக்குப் பிரதேசத்தில் தனித்துவமிக்க கிராமமாக விளங்கும் குரும்பசிட்டியில் தெய்வீக வரலாறு செப்பிநிற்கும் முத்துமாரி அம்பாளின் மகிமை மகத்தானதாகும். உன்னத வழிபாட்டுத் தலமாக விளங்கிய இவ்வாலயம் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளால் பல இன்னல்களை எதிர்கொண்டபோதும் மீண்டும் எழுந்து நிற்கும் அற்புதத்தை நோக்குமிடத்து முத்துமாரி அம்பாள் குரும்பசிட்டி வாழ் மக்களின் உள்ளக்கோவில்களில் எழுந்தருளியுள்ளாள் எனும் உண்மை வெள்ளிடை மலையாகின்றது.

தன் பெருங்கருணையினால் அவ்வூர் மக்களுக்கு அருள்பாலித்து, அனுக்கிரகித்து வரும் முத்துமாரி அம்பாளுக்கு அவளடியார்கள் மகாகும்பாபிஷேகம் செய்யத் திருவுளம் கொண்ட இத்தினம் மகத்தான திருநாளாகும். அமைதிச் சூழலில் எழுந்தருளி அருள் மழை பொழிந்துவரும் தங்கள் தாய் தெய்வத்தை அலங்காரமானதொரு தேவஸ்தானத்தில் சீரும் சிறப்புமாய் கோயில்கொள்ள வேண்டுமெனும் பேரவாவில் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து புத்தெழிலுடன் இன்று மகாகும்பாபிஷேகம் செய்து மகிழ்கின்றனர்.

இவ்வாறு அருள்பாலித்துவரும் அன்னையின் வரலாற்றையும், அற்புதங்களையும் அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் ஆவணப்படுத்தி எதிர்காலச் சந்ததிக்குக் கையளிக்க வேண்டும் எனும் பெருநோக்கில் வெளியிடப்படும் மலருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், பக்தி பரவசத்தோடு இன்று பக்கதர்கள் கூடிநின்று அம்பாளுக்கு எடுக்கும் இம் மகாகும்பாபிஷேகப் பெருவிழா நிகழ்வுகள் அனைத்தும் சிறப்புற நிகழ்வுறவும், அன்னையின் அருள் அனைவருக்கும் கிட்டவும் தாயவள் தாள்பணிந்து வாழ்த்துகின்றேன்.

**சுந்தரம் அருமைநாயகம்**
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலர்
யாழ் மாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
Department of Hindu Religious and Cultural Affairs

අධ්‍යක්ෂක / பணிப்பாளர் / Director — 2552643
පොදු / பொது / General — 2552641
ෆැක්ස් / தொலைநகல் / Fax — 2552825
ඊමේල් / மின் அஞ்சல் / E-Mail — info@hindudept.gov.lk
වෙබ් අඩවිය / இணையதளம் / Website — www.hindudept.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.
ඔබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி / Date — 19.3.2013

# வாழ்த்துச் செய்தி

இறைவனின் அருட்சக்தியாக விளங்குபவள் சக்தி. இச்சக்தியானவள் பல வடிவங்களில் நின்று உயிர்களுக்கு அருள்பாலிக்கின்றாள். அந்தவகையில் யாழ்ப்பாணம் குரும்பசிட்டிப் பிரதேசத்தில் முத்துமாரி அம்மனாக எழுந்தருளியிருந்து மக்களுக்கு அருள் பாலிக்கின்றாள். அவ்வாறு அம்பாள் எழுந்தருளியுள்ள ஆலயத்தில் நடைபெறவுள்ள மகாகும்பாபிஷேகத்திற்கும் அதனையிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆலயம் என்பது இறைவன் வீற்றிருந்து ஆன்மாக்களுக்கு அருள் பாலிக்கும் இடமாக விளங்குகின்றது. ஒவ்வொரு பிரதேசத்திலும் அமைந்துள்ள ஆலயங்கள் அப்பிரதேச மக்களின் ஆன்மீக வாழ்வுக்கும், சமூகம், கலைகள் சம்பந்தமான வாழ்வியல் வளர்ச்சிக்கும் தளமாக அமைந்துள்ளன. அவ்வகையில் ஆலயங்களின் வரலாற்றிலும் விருத்தியிலும் அப்பிரதேச மக்களின் வரலாறும் விருத்தியும் தங்கியிருந்ததுடன், அவற்றை வெளிக்காட்டும் இடமாகவும் விளங்கின விளங்குகின்றன. இத்தகைய ஆலயங்களை சிறப்பாக புனராவர்த்தனம் செய்து கும்பாபிஷேகம் நடாத்திப் பராமரித்தல் அவசியமானதாகும்.

அந்தவகையில் யாழ்ப்பாணம் குரும்பசிட்டி அருள்மிகு முத்துமாரியம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறவும் ஆலயத்தின் புனருத்தாரண கும்பாபிஷேகத்தை சிறப்புற நடாத்தவுள்ள ஆச்சாரிய பெருமக்களுக்கும், இவ் அரிய பணி செம்மையாக நடைபெற நன்கு ஒழுங்கமைத்த ஆலய பரிபாலன சபையினருக்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எல்லாம் வல்ல குரும்பசிட்டி முத்துமாரி அம்பாளின் அருள்பெற்று அனைவரும் இன்பமாக வாழவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

சாந்தி நாவுக்கரசன்
பணிப்பாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலகம், வலிகாமம் வடக்கு, தெல்லிப்பளை
DIVISIONAL SECRETARIAT, VALI NORTH, TELLIPPALAI
ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය,වලිකාමම් උතුර, තෙල්ලිපලෛයි

பிரதேச செயலர் / Divisional Secretary / ප්‍රාදේශීය ලේකම් – 0213217333
நிர்வாக உத்தியோகத்தர் / Administrative Office / පරිපාලන නිලධාරි – 021 2241726
கணக்காளர் / Accountant / ගණකාධිකාරි – 021 2241723
உதவித் திட்டமிடல் பணிப்பாளர் / Assistant Director of Planning / සහකාර සැලසුම් අධ්‍යක්ෂ – 021 2241722

அலுவலகம் Office කාර්යාලය 021 2241726 தொலைநகல் Fax ෆැක්ස් අංකය 021 2241726 மின்னஞ்சல் Email ඊ-මේල් dstellippalai.@prc.sltnet.lk

எனது இல / My No / මගේ අංකය – DS/VN/Cul/Music Class/2013
உமது இல / Your No / ඔබේ අංකය –
திகதி / Date / දිනය – 21.03.2013

## வலிகாமம் வடக்கு பிரதேச செயலரின்

# வாழ்த்துச் செய்தி

கலைவளமும் தமிழ் மணமும் ஒருங்கே அமையப் பெற்ற வலிகாமம் வடக்கில் குரும்பசிட்டி எனும் கிராமத்தில் வீற்றிருந்து அருளாட்சி செய்யும் அருள்மிகு முத்துமாரி அம்பாளின் கும்பாபிஷேக மலருக்கான வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அகமகிழ்கின்றேன்.

தனக்கென தனித்துவமான பாரம்பரிய பண்பாடுகளைப் பேணிவரும் குரும்பசிட்டிக் கிராமமானது விவசாயத்தையே தனது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளது. இவ்வூரில் பார்க்குமிடமெங்கும் நீக்கமற ஆலயங்கள் காட்சி கொடுத்த வண்ணம் உள்ளமையும் அவ்வூர் மக்கள் சைவ ஆசாரத்தைப் பேணிவருவதும் கண்கூடு. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக ஏறக்குறைய இருபத்தியிரண்டு வருடங்களின் பின்னர் பாரிய புனருத்தரானவேலைகள் பல கண்டு கும்பாபிஷேகம் காண இருப்பது எமக்கெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சியைத் தருவதுடன், ஆலய வரலாற்றையும் அதன் பெருமையையும் ஆவணப்படுத்தி கும்பாபிஷேக மலராக எதிர்கால சந்ததியினருக்கு கையளிக்கும் இம்முயற்சி பாராட்டத்தக்கது.

அந்த வகையில் தொன்மையும் பழமையும் வாய்ந்த இவ்வாலயம் வரலாற்றுப் பெருமையுடன் இயங்குவது யாவரும்அறிந்ததே. இவ்வாலயம் புதுப்பொலிவு பெற்று கும்பாபிஷேகம் காண்பது அவ்வூருக்கும், எம் நாட்டிற்கும் நன்மை பயக்கும்.

ஆகவே இவ்வரிய முயற்சிகளில் ஈடுபட்ட ஆலயபரிபாலன சபையினருக்கும். அவ்வூர் மக்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு எல்லாம் வல்ல முத்துமாரி அம்பாளின் அருளாட்சி எல்லோருக்கும் கிடைக்க அன்னையின் பாதாரவிந்தங்களை வணங்கி நிற்கின்றேன்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

பிரதேச செயலர்
பிரதேச செயலகம்
தெல்லிப்பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை

# Sri Durgadevi Devasthanam

Tellippalai, Sri Lanka

T.P. No : 021-3213151

திகதி..............................

துர்க்கா தேவி துணை

## வாழ்த்துச் செய்தி



"அம்பிகையை சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்"

ஈழத்திருநாட்டின் வரலாற்றில் குரும்பசிட்டிக் கிராமத்துக்கு தனித்துவச் சிறப்புண்டு. அழகிய ஆன்மீகத் திருவூர் குரும்பசிட்டி. இத் திருவூர் மக்களின் உன்னத வாழ்வுக்கு கலங்கரை விளக்காக விளங்கிய அருள் மிகு முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் சிறப்பை அறியாதவர் எவருமில்லை. இக்கோவிலின் திருவிழாச் சிறப்பையும் அன்னதானச் சிறப்பையும் போற்றுவர். போரின் அனர்த்தத்தினால் அற்புதக் கோவில் அடியோடு அழிந்த செய்தி அனைவரையும் வருத்தியது. குரும்பசிட்டிக் கிராமம் குலைந்து புலம் பெயர்ந்து அல்லல் உற்ற வேளையிலும் அம்பாளின் முக்கிய திருவிழா நாட்களை பிற ஊர்களில் ஏற்பாடு செய்து அழுது கும்பிட்ட காட்சிகளை யான் நேரில் கண்டுள்ளேன். மீண்டும் பலவருட இடைவெளியின் பின் குரும்பசிட்டிக்குச் சென்ற மக்கள் தங்கள் வாழ்வை வளப்படுத்திய கோவிலையும் பள்ளித்தலத்தையும் புனர் நிர்மாணம் செய்தமை மெச்சத்தக்க விடயமாகும். பக்தி வைராக்கியம் கொண்ட குரும்பசிட்டி மக்கள் மீண்டும் முத்துமாரி அம்பாளுக்கு திருக்கோவில் அமைத்து பெருஞ்சாந்திவிழா எடுப்பது அறிந்து மிகவும் ஆனந்தமடைகிறேன். அம்பாளின் கும்பாபிஷேகத்தோடு குரும் பசிட்டி வாழ் மக்கள் மீளக் குடியேறி மகிழ்வாக வாழப் பிரார்த்தித்து அமைகிறேன்.

"யாவர்க்குமாம் இன்னுரை தானே"

**கலாநிதி. ஆறு. திருமுருகன் தலைவர்**

துர்க்கா தேவி தேவஸ்தானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிகாமம் வடக்கு பிரதேச சபைத் தவிசாளரின்

# வாழ்த்துச் செய்தி



வலிகாமம் வடக்கு மண்ணின் பழம்பெரும் ஆலயங்களில் ஒன்றான குரும்பசிட்டி கிராமத்தில் அருளாட்சி செய்து வருகின்ற அன்னை முத்துமாரியம்மன் ஆலயம் ஏறத்தாழ 200 ஆண்டு கால வரலாற்றைக் கொண்டதாக விளங்குகின்றது. இரண்டு தசாப்தத்திற்கு மேற்பட்ட காலமாக இடப்பெயர்வுக்குள்ளான மக்கள் தற்போது மீளக்குடியேறியதும் அன்னையின் அருளால் ஆலயத்தினை புனருத்தாரணம் செய்து வேலைகள் யாவும் பூர்த்தியடைந்த நிலையில் மகா கும்பாபிசேகம் நிகழவிருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இடப்பெயர்விற்கு பின்னர் மீண்டும் அன்னையின் அருட்காட்சியைக் காணவிருப்பது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருவதாகும். குரும்பசிட்டி கிராம மக்களுக்கு மட்டுமல்லாது அயல் கிராமங்களில் வாழ்கின்ற மக்களுக்கும் குலதெய்வமாகி முத்துமாரியம்மன் அநுக்கிரகம் வழங்கி வருகிறாள்.

தொன்மைக்கும் வரலாற்றுச் சிறப்பிற்கும் கண்ணியமாக விளங்கும் குரும்பசிட்டி முத்துமாரியம்மனின் நல்லருளால் உலகெங்கும் பரந்து வாழ்கின்ற ஈழத்தமிழர்களின் இடர்கள் நீங்கி நிம்மதியான வாழ்வு கிடைக்க வேண்டுமென எல்லாம் வல்ல அம்பாளை வேண்டுகிறேன்.

**திரு. சோமசுந்தரம் சுகிர்தன்.**
தவிசாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேசசபை,
காங்கேசன்துறை,மல்லாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிபாலன சபைத் தலைவரின் செய்தி



குரும்பசிட்டி அருள் மிகு முத்துமாரி அம்பாள் ஆலயமானது எமது மூதாதையர் வழிவந்த அம்பாளின் அற்புதச் சம்பவங்களுடன் பின்னிப்பிணைந்து நிற்கும் 200 ஆண்டுகால வரலாற்றைக் கொண்டது. முத்து மாரி அம்பாளின் அருள் எமது கிராமத்துக்கு மட்டுமல்ல அயற்கிராம மக்களுக்கும் வியாபித்து நின்றதை யாரும் மறுக்க முடியாது. எமது கிராம மக்களின் வாழ்வுக்கும் வளத்துக்கும் அருள் கூட்டி நின்ற அம்பாளின் ஆலயம் தவிர்க்க முடியாத போர்க்கால சூழலுக்குள் அகப்பட்டு இருதடவைகள் அழிவைச் சந்தித்தது. 1986/87 ஆண்டு காலப் பகுதியில் ஒருதடவையும் பின்னர் 1991 லும் இந்த அனர்த்தங்கள் ஏற்பட்டன.

ஆலயம் முற்றாகவே தரைமட்டமானது. ஆலயத்தின் சொத்துக்களான சித்திரத்தேர் பெறுமதி மிக்க வாகனங்கள் ஆலயத்தின் எழுந்தருளிச் சிலைகள் யாவும் அழிக்கப்பட்டும் சூறையாடப்பட்டும் காணப்பட்டன.

ஏறத்தாழ 22 ஆண்டுகால இடப்பெயர்வு வாழ்வுக்குப்பின்னர் எமது கிராமத்தின் ஒரு பகுதி மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட நிலையில் மக்கள் தாம் குடியமர்வதற்கு முன்னர் அம்பாளை ஒரு சிறு கட்டிடத்தில் எழுந்தருளச் செய்த பின்னர் தமது கைங்கரியங்களை செய்யத் தொடங்கினர். பாதுகாப்புக்கு எந்தவித உத்தரவாதங்களும் அற்ற ஒரு நிலையில் அம்பாளே துணை நமக்கு என்ற ஆதங்கத்துடன் அம்பாளுக்கான ஆலய கட்டிட புனர்நிர்மாண வேலைகளும் கூடவே மேற்கொள்ளப்பட்டன.

இந்தவகையில் நாம் எதிர்பார்த்ததிலும் பார்க்க ஆலயத்திருப்பணிகள் துரிதமாகவும் பெருமெடுப்பிலும் நடைபெற்றது அம்பாளின் அனுக்கிரகமேயன்றி வேறொன்றும் இல்லை. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வதியும் எமது கிராமத்து உறவுகள் மட்டுமன்றி அயற்கிராமத்து அம்பாள் அடியவர்களும் இப்பணிகளுக்காக நிதி உதவி நல்கியும் ஒவ்வொரு திருப்பணி வேலைகளை தாமே பொறுப்பேற்று செய்ததும் நன்றியுணர்வுடன் நினைவு கூர வேண்டிய விடயங்களாகும்.

இந்தவகையில் ஆலயத்தின் ஒவ்வொரு திருப்பணி வேலைகளையும் தம் பணியாக நிறைவேற்றித் தந்தவர்களுக்கு பரிபாலன சபையின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இதே போன்று ஆலய திருப்பணி வேலைகளுக்கு சகல வழிகளிலும் நிதி உதவி, சரீர உதவி வழங்கியோருக்கும் ஆலயப் புனரமைப்பு பணிகளை செவ்வனே நிறைவேற்றித் தந்த ஸ்தபதிகளுக்கும் ஆகமக் கிரியைகளில் பங்குகொண்ட குருமார்களுக்கும் அம்பாளின் அருளும் அனுக்கிரகமும் கைகூடி சகல வளங்களையும் சேர்க்க வேண்டுமென பிரார்த்திக்கிறேன்.

**செ. ஈஸ்வரபாலன்**
பரிபாலனசபைத் தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரும்பசிட்டி அம்பாள்
# திருவூஞ்சல்

**வெண்பா**

பூமாதுறை குரும்பை பொற்பதிவாழ் மாரிதன் மேற்
பாமாலை பாடிப் பணிந்திடவே மாமாது
உமைபரனார் தந்த வொருகோட்டுப் பிள்ளை
கமல வடியிணைகள் காப்பு

**ஊஞ்சல்**

பொன்பூத்த பரவொளியா யேகனாகிப்
புகழ்பூத்த வனாதிமுத்த பதியாய் நின்ற
தென்பூத்த பரசிவனார் சக்தியாகித்
திடம்பூத்த திருக்குரும்பை நகரில் வாழும்
இன்பூத்த மகமாரியம்மை மீதே
எழில்பூத்த வூஞ்சலிசை யினிதுபாட
மண்பூத்த பிரணவத்தின் பொருளாயோங்கும்
மறைபூத்த கணபதி தாள் வணங்குவாமே.

நலனோங்கு நால்வாக்குங் கால்களாக
நயனோங்கு நாதவிந்து விட்டமாகப்
பலனோங்கு வர்ணவின மிளையதாகப்
பரமோங்கு மாகமங்கள் கயிறதாகப்
புலனோங்கு மந்திரங்கள் பலகையாகப்
புகழோங்கு பிரணவமே பீடமாக
வலனோங்கு திருக்குரும்பை நகரின் வாழும்
மகமாரியம்மையே யாடீரூஞ்சல்

திருவளருஞ் செம்பவளக் கால்கனாட்டிச்
சீர்வளரு மரகதநல்விட்ட மூட்டிக்
குருவளரும் பசுங்கனகக் கயிறு பூட்டிக்
குணம்வளரும் வச்சிரத்துப் பலகை மாட்டி
உருவளரு மயனுயர் செம் மணிகளீட்டி
ஒளிவளரும் வகையமைந்த வூஞ்சன் மீதே
மருவளரும் பொழிற் குரும்பை நகரின் வாழும்
மகமாரியம்மையே யாடீரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமேவு மயன் வேதநாத மூட்டப்
பொலன்மேவு நாரணனார் தூபங் காட்ட
நாமேவுங் கலைமகள் பல்லாண்டு நாட்ட
நலமேவுங் கமல மலர் மாரி நீட்ட
வீமேவும் விஞ்சையர்கள் கானமீட்ட
விண்மேவு மரமகளீர் வடந்தொட்டாட்ட
மாமேவுந் திருக்குரும்பை நகரின் வாழும்
மகமாரியம்மையே யாடீரூஞ்சல்

சேண் பொலியுமதிபருதி கவிகை தாங்கத்
திறம்பொலியுஞ் சதாகதி சாமரை கைவாங்க
ஏண் பொலியும் விபுதர்வட்டம் வீசித்தேங்க
இயல்பொலியுந் பூமழை விண்ணின்று தூங்கப்
பூண்பொலியுந் திருமுதலோர் மகிழ்ச்சி வீங்கப்
புடைபொலியு மடியரிரு வினைகளோங்க
மாண்பொலியுந் திருக்குரும்பை நகரின் வாழும்
மகமாரியம்மையே யாடீரூஞ்சல்

மேல் விளங்குங் கந்தருவர் சுருதி கூட
வியன் விளங்கு மிந்திரனார் தாளம் போடப்
பால்விளங்குந் தும்புருநாரதர் பண் பாடப்
பயன்விளங்கு பல்லியநல் லொலி விண்மூட
நூல்விளங்கு மிடைமடவார் நடனமாட
நுவல் விளங்குந் தமிழ் வேத வோசை நீட
மால்விளங்குந் திருக்குரும்பை நகரின் வாழும்
மகமாரியம்மையே யாடீரூஞ்சல்

சொல்லியலுந் தூயவுள மன்புகூரத்
துதியியலுந் நாக்கடிருப் புகழை நேர
வெல்லியலுங் கரங்கள் சிர மீது சேர
வெழிலியலு மானந்தக் கண்ணீர் வார
வில்லியலும் வெண்ணீற்றி னணி நன்கார
மிக்குயலும் பக்தர் குழாம் விரவிச் சார
மல்லியலுந் திருக்குரும்பைநகரின் வாழும்
மகமாரியம்மையே யாடீரூஞ்சல்

பொன்னிலங்கு சிரமௌலி பொலிந்து ஆடப்
பொற்பிலங்கு மிடையினம ராடை யாடத்
தென்னிலங்குங் கொங்கைமிசை மணிப் பூணாடத்
திறமிலங்கு செங்கையிசை வளைகளாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னிலங்குங் குழைவளர் தாடங்க மாட
மிசையிலங்குங் குழலிடைப் பூந்தொடை நின்றாட
மன்னிலங்குந் திருக்குரும்பை நகரின் வாழும்
மகமாரியம்மையே யாடீரூஞ்சல்

சிரஞ் சிறந்த தொடையினரே யாடீரூஞ்சல்
சீர் சிறந்த விடையினரே யாடீரூஞ்சல்
பரஞ்சிறந்த மேன்மையரே யாடீரூஞ்சல்
பயன் சிறந்த பான்மையரே யாடீரூஞ்சல்
சிரஞ் சிறந்த தூய்யவரே யாடீரூஞ்சல்
சிவஞ்சிறந்த மெய்யவரே யாடீரூஞ்சல்
வரஞ் சிறந்த திருக்குரும்பை நகரின் வாழும்
மகமாரியம்மையே யாடீரூஞ்சல்

விண்மருவுஞ் சோதியரே யாடீரூஞ்சல்
வியன் மருவு மோதியரே யாடீரூஞ்சல்
எண் மருவும் விபூதியரே யாடீரூஞ்சல்
இசைமருவு மனாதியரே யாடீரூஞ்சல்
பண்மருவு மொழியினரே யாடீரூஞ்சல்
படைமருவு விழியினரே யாடீரூஞ்சல்
மண் மருவுந் திருக்குரும்பை நகரின் வாழும்
மகமாரியம்மையே யாடீரூஞ்சல்

பூர்த்தி பெறு திருவருளைந் தெழுத்தும் வாழி
புகழ்ச்சிபெறு விபூதியக்கு மணியும் வாழி
கீர்த்திபெறு நிகமமொ டாகமங்கள் வாழி
கிளர்ச்சி பெறு மாதிசைவர் முதலோர் வாழி
மூர்த்திபெறு முளத்தடியார் தொகுதி வாழி
முறைமை பெறு முகிலரசர் சுரபி வாழி
கீர்த்திபெறு திருக்குரும்பை நகரம் வாழி
சிறந்த மகமாரியம்மை வாழி வாழி.

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள் திருப்பதிகம்

(அருட்கவி. சி. விநாசித்தம்பிப் புலவர் அருளியது)

பேர் பரவு செய்யதமிழ் ஆதிகலை யுலகெலாம்
பெருகவரும் அருட்சோ தியே
பிரணவக் கணபதியைச் சரவணக் குருபதியைப்
பெற்ற மங் களகன் னியே
பார்பரவு திருமாலின் பண்பரவு தங்கையெனும்
பத்தரட் சகரூ பியே
பாடுவார் கண்குளிர ஆடுமம் பலவாணர்
பங்கிருக் குங்கெள ரியே
கூர்பரவு கண்ணியே தார்பரவு கனகமுலைக்
குங்குமத் தோளழ கியே
குறை தீர்க்குஞ் செல்வியே நினைவாரின் நெஞ்சிலே
குடியிருக்குந் தெ ய்வமே
சீர்பரவு நின்பாதத் தேன்பரவு கவிமாலை
செப்பநல் லருள் புரிகுவாய்
திருவளர் குரும்பைநகர் திகழ் கருணை வடிவுடைய
ஸ்ரீ ஓம் மகா மாரியே.

நித்தயகல் யாணியருள் நீலிசங் கரிதுாய
நெட்டிலை சூலி ஜனனி
நிர்மலா னந்தசர் வாட்சரி திகம்பரி
நிரஞ்சனி கபாலி ஞான
சத்திமலை மங்கைகலை தருவாணி திருமாது
சாதிமா சுணமா லினி
சதுர்மறைத் தலைவிபர கதியருளுங் கற்பகச்
சௌபாக்ய சுக காரணி
பத்திவலை யிடைநின்ற பகவதி மகாதேவி
பத்மினி பவானி ருத்ரி
பரதநட ராணியெனப் பண்ணொழுகு நாமங்கள்
பலகோடி பெறுமிறை வியே
சித்தத்தி லேநினது திருவடி நிலைக்கின்ற
சிந்தனை யெமக் கருளுவாய்
திருவளர் குரும்பைநகர் திகழ் கருணை வடிவுடைய
ஸ்ரீ ஓம் மகா மாரியே.

வானாட வளியாடத் தீயாடப் புனலாட
மண்டலக் கூட்ட மாட
மருவுகதி ரோனாட மதியொடுசெவ் வாயாட
வளர்கலைப் புதனுமாட
மீனேறு தனுராஜ குருநாத ராடஉயர்
வெள்ளிசனி அதிப ராட
மிகுராகு மிளர்கேது சிரமசைத் தாடவான்
மேவுதா ரகைக ளாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனேறு சிவனாட ஆனைமுக னாராட
ஆறுமுகப் பிள்ளை யாட
அயனாட அரியாட அமரர்முனி வோராட
அன்னைநீ யாடி யாடித்
தேனேறு நின்பாத மெய்யருள் சுரந்தெமது
தீவினை யகற்றி யருள்வாய்
திருவளர் குரும்பைநகர் திகழ்கருணை வடிவுடைய
ஸ்ரீ ஓம் மகா மாரியே.

அங்கிங் கெனாமலே யெங்கும் நிறைந்தசங்
கரனோ டமர்ந்த சிவையே
அகிலாண்ட கோடிகளை இகபரசௌ பாக்யநலம்
ஆக்கியருளூட்டு முமையே
பொங்குமல விருளகலப் புனிதநீ றொளிவீசப்
பொலிசைவ நெறிப டைத்த
புவனநா யகிகனக சபையில்நட மாடிடும்
புகழ்மேவு சிவகா மியே
வெங்கலி யுறுத்தாது முப்பத்தி ரண்டறம்
மிகவுதவு காமாட் சியே
விளையாடல் எண்ணெட்டு மினிதா யியற்றவரும்
விண்மதுரை மீனாட் சியே
செங்கமல நின்பாத பணிபுரிந் தெழுமறிவு
தெளிவுபெறு வாழ்வு தருவாய்
திருவளர் குரும்பைநகர் திகழ்கருணை வடிவுடைய
ஸ்ரீஓம் மகா மாரியே.

நவசத்தி தருவீர இளைஞரொடு வருமுருக
நாயகப் புதல்வ னுக்கு
நவசித்தி வேல்தந்த நாதாந்த யோகாந்த
நளினபார் வதியன் னையே
பவவித்தி லேவருஞ் சும்பன் நிசும்பனைப்
படையோ டழிக்க வலிமை
பயிலவுறுமி ரத்தபீ சன்குருதி பருகிடப்
பரவுசா முண்டி காளி
தவசித்தி னோடுவர அருள்செய்த கன்னியே
சர்வமங் களதே வியே
தக்கசம் மாரத்தி லக்கினிப் படைகொண்ட
சடைவீர மாகா ளியே
சிவசத்தி யேயுனது சிறுசிரிப் புருள்வதன
திவ்யதரி சனை யருளுவாய்
திருவளர் குரும்பைநகர் திகழ்கருணை வடிவுடைய
ஸ்ரீஓம் மகா மாரியே.

ஆதிமறை எழுகோடி மந்திரங் களுமுன்றன்
அமுதவாய் தனில டக்கம்
ஆகமப் பொருள்கூறு மைந்தொழிலு மேயுன்றன்
அங்கைதனி லேய டக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதகலை விந்துதவு நாலுகதி களுமுனது
நடனபா தத்த டக்கம்
நவில்யோனி பேதங்கள் மிளிர்சரா சரமெல்லாம்
நற்கருணை விழிய டக்கம்
ஓதுமைம் பூதமுட னோங்குமண் டலகூட்டம்
உனதுசடை நுனிய டக்கம்
ஓங்கார வட்டமெழு பாங்கான சோதிநின்
ஒண்ணுத லடக்க மம்மா
தீதேது நலமேதென் றுணரொணா நாயேற்குன்
சிவஞானக் கனி யுதவுவாய்
திருவளர் குரும்பைநகர் திகழ்கருணை வடிவுடைய
ஸ்ரீ ஓம் மகா மாரியே.

பிறவியெனும் பேராழி யிடைநீந்திக் கரையேறப்
பெரியதுணை புரிப வள்நீ
பிணிவரிற் பரிவோடு பேணுமா தாவும்நீ
பிரியாத தந்தை யும் நீ
உறவுடைய கிளைஞர்நீ உடனுதவும் துணைவர்நீ
உணர்மைந்தர் செல்வ மும்நீ
உயர்பதவதி மேன்மைநீ பயிலுலக வாழ்வும்நீ
உன்னுகலை இன்ப மும்நீ
துறவுநிலை காட்டிநின் னருள்பெருகு சாயுச்ய
சுகநிலைகள் தருப வள்நீ
சுத்தநிர்க் குணமான நித்தியா னந்தசிவ
சுந்தரியும் நீயல் லவோ
செறியரவு புனையிறைவன் மகிழ்பரா சத்தியே
தியாகதவ வாழ்வு தருவாய்
திருவளர் குரும்பைநகர் திகழ்கருணை வடிவுடைய
ஸ்ரீஓம் மகா மாரியே.

புத்திவரும் அவிரோத ஞானமுயர் பத்திவரும்
புண்ணியவ ளங்க ளுடனே
புத்திரஉற் பத்திவரு மொத்தமனை வாழ்வுவரும்
புகழவரு பதவிகள் வரும்
சுத்திவருந் தானதவ சுத்திவருங் குறையாத
சகலயோ கங்க ளோடு
சர்வகலை யறிவுவரும் சர்தவீக நிலைமைவரும்
"தான் தன" திரண்டு மற்ற
முத்திவரும் முச்சந்தி மத்திவரும் சகஸ்ரார
முடியரச பீட மாக
மொழிகின்ற ஆதார மாறுமொன்றிற்காணும்
முந்துதனி வாழ்வு வருமே
சித்திவரும் நின்கருணை கடைவிழி சுரக்கின்ற
திருவருள் கிடைத்த வர்க்கே
திருவளர் குரும்பைநகர் திகழ்கருணை வடிவுடைய
ஸ்ரீஓம் மகா மாரியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரப் புன்னகை பொலிந்திடுஞ் செய்யவாய்
சோதிமதி வதன மசைய
சுடரொளித் தோடசையப்படர்மணிச் சடையசையத்
தோன்றுநுதல் நீறு மசைய
மந்திரக் கரமசைய வளர்கலசம் வேல்சங்கு
மழுதண்டு வில் சக் கரம்
மருவுதுடி திரசூலம் பரவுபொற் கரகநிரை
வரிசைதரு நெறியி னசைய
சந்தனத் திருமேனிக் குங்குமச் சாந்தசையத்
தத்துவக் கமல பாதத்
தண்டைச் சிலம்பசைய செங்கைக் கரும்பசைய
தழுவுசிங் கத்த மர்ந்து
சிந்துநவ ரத்நமணிச் சித்திரத் தேரேறிச்
சிறியேமைக் காத்த ருளுவாய்
திருவளர் குரும்பைநகர் திகழ்கருணை வடிவுடைய
ஸ்ரீஓம் மகா மாரியே

கம்பத்தி லேறியனற் கரகத்தி னிடைநின்று
கருதுவரம் பெறுமர சியே
கங்குல்பகல் பிரியாத சங்கைமிகு மடியாரைக்
கையணைக் குந்தெய் வமே
வெம்புற்று நோயம்மை கண்மாரி வைசூரி
விலகாத வாத பிணிகள்
வேப்பிலைக் காப்பினால் நீக்குமதி காரியே
மெய்ஞ்ஞானக் கைப்பி ரம்பால்
வம்புற்ற வெண்ணீற்று மாமருந் தூட்டிவெவ்
வஞ்சனைப் பேய்க ளோட்டி
வறுமைதுயர் வாராது பெருமைதரு சிங்கார
வளர்மணிக் கோயில் கொண்டு
செம்பொற் சிலம்பதிரத் துடியதிர நடனமிடும்
சீமாட்டி போற்றி போற்றி
திருவளர் குரும்பைநகர் திகழ்கருணை வடிவுடைய
ஸ்ரீஓம் மகா மாரியே.

பயன்

செல்வப் புனிதர் புகழ்பாடும்
சீரார் குரும்பைப் பதிதன்னில்
வல்விக் கினநோய் அணுகாமல்
வாழ்வும் சுகமும் மணம்வீசக்
கல்விக் கமலத் தொகைமலர
கருணைக் கடலா யுறைகின்ற
சொல்வித் தகமா ரித்தாயைத்
தொழுவார் துயரம் விடுவாரே.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# குரும்பசிட்டி முத்துமாரி அகவல்



திருவும் கல்வியும் சிறப்புற விளங்கும்
குரும்ப சிட்டி குப்பிழான் அடியார்
பத்தியில் உருகிப் பணிந்து வணங்கி
முத்து மாரி முன்னின் றருளும்
காம வல்லி அம்பிகை கௌரி
சாம வேதம் விரும்பும் சத்தி
வேயுறு தோளி வீரி பயிரவி
மாயிரு விண்ணும் மண்ணும் புரக்கும்
இமைய வல்லி இறைவர் இடங்கொள்
உமையே உயிரிற் கலந்த உறவே
ஆரியை பார்பதி அயிராணி அழகிய
கன்னி மாதரி கௌமாரி காரணி
பொன்னி புதுமை கொழிக்கும் பூரணி
தாயே தயாபரி சந்திர மண்டலி
மாயப் பிறவியை அறுக்கும் வயிரவி
அவனியை ஆளும் அபிராம சுந்தரி
கவினார் கடம்ப மாலினி காலனும்
பணியும் சண்டி பாசாங் குசங்களை
அணியும் வராகி ஆதி அன்னையென்(று)
ஏற்றக் கோபுரக் கோயிலில் இனிதே
வீற்றுச் சிங்கா சனத்தில் விளங்கித்
திருட வந்த தீயவன் தன்னைக்
குருட னாக்கியும் குற்றங்கள் போக்கி
ஊரைக் காத்தும் உயர வளர்த்தும்
சீரும் பேரும் திகழத் திருவருள்
பாலித் திருந்த பத்தியும் குன்றக்
கூலிப் படைகள் கோயிலைத் தகர்க்க
அடியவர் வாழ்வில் இடிவிழுந் தன்ன
கொடுமைகள் நிகழ குடிபெயர்ந் தவரும்
தேங்காய்ச் சில்லுகள் சிதறிய தொப்ப
ஆங்காங் கோடி அடங்கிய போதிலும்
எந்தப் பொழுதிலும் எந்தாய் நின்னை
வந்தித்து வந்த வரத்தால் இந்நாள்
அன்புடன் கோயிலை மீண்டும் அமைத்தே
இன்புற நீயும் எழுந்தருள் செய்யக்
குடமுழுக் காட்டிக் கும்பிடக் கூடினர்
விடிவினைக் காட்டினை வித்துவம் மிக்க
குரும்பை நகரை மீண்டும் கொலுவினில்
விரும்பி ஏற்றுக விதியினை மாற்றுக
புதிய கோயிலில் பொலியும்
இதயத் தாயே இடரிலை இனியே!

வி. கந்தவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழூர் நாயகி முத்துமாரி

இலங்கை சிவபூமி
இங்கு பழங்குடிகள் நாகர்
அந் நாகரில் ஒருவன் கேது
கேது வழிபட்ட தலம் கேதீச்சரம்
சோழராட்சியில் அது "இராஜ ராஜ மகாதேவன் கோயில்"
ஏழ் மாடக் கோபுரம் ஏழ்நிலை
வீதிகள் வைப்புத் தலங்கள் பலப்பல

எண்ணாமல் நினையாமால் இலங்கைக்கு
ஒரு கொடு நோய் பதினாறாம் நூற்றாண்டில் பாய்ந்து பரவியது
ஐரோப்பிய பிசாசரின் ஆட்ட வேகத்தால்
ஆதிக் கோயில்கள் அழிந்து சிதைந்தன
ஆரண நெறிமுறை பழுதினையடைந்தது.
முன்னூறாண்டு முனகி முனகி மூலைக்குள்ளே
படலை கட்டி பாடினர் தேவாரம் கற்கோயில் இல்லை
சொற் கோயில்கள் தான்
தொன்மைக் கோயிற் பொன் பொருளெல்லாம்
வெள்ளைப் பாவாடை கறுப்புப் பட்டியுள் முடங்கிட
கருங்கற் சிலைகள் சிலவே கிட்டின.
எஞ்சியவற்றுள் எடுத்த சிலதை
வடக்கு வண்டில் வியாபாரத்தர்
நெல் மூடைகளோடு எடுத்து வந்தனர்.
வந்த சிலைகளுள் மூன்று மூத்த மைந்தன்
மற்ற தொன்று மாரியின் சிலையாம்.
மூவுலகாளும் முன்னவன் முறையே
நீர்வையூரின் வாய்க்காற் தெருவிலும்
புன்னை நகரில் ஆயக்கடவையிலும்
குப்பிழான் கற்கரை பொற்றல மீதிலும்
குடி கொண்டிட
முத்தான நம் அன்னையோ
தென் மயிலைக் குரும்பைநகர் மீதினிலே அமர்ந்தனள்
தலப் பெயரே பின் ஊருக்குமாயிற்று
குப்பிழான் ஏழாலை கட்டுவன் வர்த்தலையோடு
புன்னையூர் வயாவிளான் மயிலிட்டி என்றிணைய
ஏழூர்க்கும் நாயகியாய் அவள் நிற்கின்றாள்.
எண்பத்தேழுவரை ஏழூரவர்களையும்
அதிகாலை நான்கு மணிக்கு அடித் தெழுப்புவது
அம்மையின் ஆலய மணிதான்.
மார்கழி பிறந்து விட்டால் ஏழூரும் திருவிழாதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தித்திக்கும் திருவாசகப் பாக்களும்
மெத்தென்ற மேள தாள கீதங்களும்
மார்கழிக் குளிரை மறப்பிக்கும்.
அம்மன் முழுக்காட அவசரமாய் அதிகாலையில்
பால் தயிர் கொண்டோடுவோர் ஒருபால்
முல்லையாதி நறுமணப் பூக்களை மாலையாக்கி
அம்மைக்கு அணிவிக்க ஓடுவோர் ஒருபால்
கற்கண்டு குங்குமப் பூ ஏலமிட்டுக் காய்ச்சிய
பாற் தீர்த்தம் வாங்கவென்று வருவோர் ஒருபால்
தம்ப பூசையிலே குருக்கள் நிகழ்த்தும்
ருத்திரா தரிசனம் இரசிப்போர் ஒருபால்
வசந்தமண்டபத்திலே இராஜோபசாரமாய் நிகழும்
உபசார பூஜையை தப்பாமல் தரிசிப்போர் ஒருபால்
மூத்த குமாரர் இளைய குமாரர் ஸஹிதமாய்
காலை மாலை குடை வாகன அலங்கார விநோதங்களுடன்
உலாவரக் கண்டு இரசிப்பவர் உருகுபவர் ஒருபால்
கொடியேற்றத்தில் பெரிய சிம்மத்தினில்
பெரிய நாயகி பீடுற வருவள்
ஆறாம் நாளில் சிவபூசைக் கோலத்தில்
கைலாயமேறிக் கவினுற வருவாள்.

எண்டிசை களிக்க எட்டாம் நாளில்
எழுந்தநாயகி சடைநாகந் தாங்கி
விண்தொடு சப்பரமூர்ந்து வருவாள்
ஒன்பதாம் நாளில் செம்பட்டாடை சிறக்க அணிந்து
சிம்மாசனத்தில் சிறக்க ஆடி
சித்திரத் தேரில் சிறப்புற வருவாள்
ஏழூரவரும் ஏற்றவாறு நேர்த்திகள் நிறைப்பர்
காவடி கரகம் அணியாய்ச் சூழும்.
பாற்குட பவனி பண்பாய் நேரும்
கற்பூரச் சட்டி கண்பானை தீபம்
ஏந்திப் பெண்கள் ஏற்றமாய் வருவர்
தலையால் நடக்கும் பெண்களும் பிணியற
உடம்பால் நடக்கும் ஆண்களும்
அலையலையாக வீதியை நிறைப்பர்
புயலே பொழிந்து வெள்ளம் பெருகினும்
சூறாவளியே சுழன்று வீசினும்
உருள்பவர் உருள்வர் நேர்த்தி கலையாது.
பத்தாம் நாளில் தீர்த்தம் நிகழும்
நண்பகல் வேளை யாக கும்பம்
கோவிற் குருவின் தலை மீதேறும்.
அது வலம் வரல் கண்டால் நாத்திகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட நடுங்கித்தொழுவர்
அன்றுதான் அவளின் அற்புதம் காணலாம்.
அவள் "கம்பத்திலேறி அனற்கரத்தின் இடைநின்று
கருது வரம் தரும் அரசி" என்பது விளங்கும்.
இரத்தின ஐயாவுக்கும் அம்மைக்குமிடையான
என்றுமுள இன்ப அன்பை அன்றுதான் காணலாம்.
அது கண்டால் சொல்லொணா இன்பம்.
கண்டு கொண்டோரே அதன் நயத்தை அறிவர்.
அடுத்து அவளின் ஊர்வலம்
ஏழூர்த் தெருவிலும் பறை முழங்க
அம்மை எழுந்தரிய சிறுதேருருட்டி வருவாள்.
மீளா அடியவர் யாவரும் மங்கல மரியாதை செய்து
வேண்டிய வேண்டியாங்கு எய்துவர்.
இன்னும்
தையமவாசைத் தீமிதிப்பும் தாரணி மேற் சிவபுரம் போல்
காட்சிதரும் சிவராத்திரி வழிபாடுகளும்
பங்குனித் திங்களெல்லாம் பாற்பொங்கல் கஞ்சிகளும்
வைகாசி விசாகத்துப் பொங்கலுக்கு வாங்களென்று
ஏழூரும் பறைநிழ்த்தி விழாநிகழ்த்தும் மாண்பும்
இத்தல மகிமை சாற்றுபவாம்.
ஆச்சிக்குப் பொங்கலென்று ஆன்பாலும் முக்கனியும்
தீவுக் கடகத்தில் சுமையேந்திப் பொங்கிடுவோம்.
பொன் விளையும் பூமி பாளமாய் வெடித்து
பொறிபறக்கும் வைகாசி என்றாலும்
ஆயிரம் மடைக்குக் குறையாது அடுக்கடுக்காய் இருக்கும்.
தம்பத்தடி நின்று தருவான வேம்பு மட்டும்
மூலாதானத்தின் நேராக மடை குவிப்பர்.
மடைகாரர் ஏற்றுகிற கற்பூர ஒளியோடு
மாபூசைப் பஞ்சாராத்தியும் கண்டு
"அரகரா அம்மைக்கு அரகரா அரகரா அம்மைக்கு அரகரா" என்று
தாளமமைத்துப் பறைகாரர் பறையடிக்க
ஆட்டம் வராதிருக்குமா?
கிழவியர் பலரும் தம் முடித்தலையைக் குலைத்து
முன் பின்னாய் வளைந்து உருவில் ஆடுவர்.
அற்றைத் தினத்தில் யாரும் யாருக்கம் பிரசாதம் கொடார்
வாங்குவோர் அங்கிருந்தாலன்றோ பிரசாதம் கொடுப்பதற்கு.
இது அம்மையின் விசாகத்திருநாள் மகிமை.
இனி
ஆடிப் பூரத்தில் அம்மைக்க நீராட்டும் ஆலாத்தும்
அன்று அவள் கன்னியாகுமரி
புரட்டாதி எப்ப வரும்?
மகிடாசுர வதம் எப்போது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை சிறு பிள்ளைகளின் வினாக்கள்.
ஒன்பது நாளும் அன்னை கொலுவிருப்பாள்
பத்தாம் நாள் அவள் மகிஷாசுரமர்த்தனி
அடுத்து கௌரி விரதம் களைகட்டும்
தம்பத்தின் முன்னே உரலளவு குற்றியிலே செப்புத் தட்டம்
சிறிய கணபதியும் சிவலிங்கமும் அதன் மேல்
முன்னாலே நவதானியமிட்டு கும்பமும் வைத்திருப்பர்.
பூசைப் பொழுதுகளில் விரதியர் சுற்றிவந்து பூவிடுவர்.
நிறைவு நாளில் வெள்ளிரிஷபத்தில் தேவியும் மகாலிங்கமும் இருக்க
வழமையான சிறிய உடையவருக்கு விரதியர் அர்ச்சித்து அருள்பெறுவர்.
குருமார்கள் காப்பணிந்து விடுவார்கள்.
அடுத்து
ஏழூர்க்கும் பொதுவிலே நிகழும் கந்தசட்டிச் சூரன்போர்
சனவெள்ளம் செந்திலை நினைவிக்கும்.
நாவலர் வழிநின்ற சீலத்தர் பிரசங்கமும்
கானாமிர்த்த புராணம் கர்ணாமித்தமாய்ப் பெருக்கும்.
படன காரர் சிறப்பும் பாங்காக் கண்டுகொண்டோம்.
தூய கதர் வேட்டி துண்டு தூவெள்ளைத் திரிபுண்டரம்
வாயிலே "நமசிவாய வாழ்க"
என்றாங்கு திரும்பத் திரும்பப் பத்துத் தரமேனும் கூறிச் சுவைக்கும் பழக்கம்
இராமலிங்க வாத்தியாராம் சிவபக்தசிரேஷ்டர்.
இதுவன்றோ திருக்கூட்டப் பொலிவழகு என நயந்தோம்.
இவ் வனைத்தும்
இருபத்தைந்தாண்டு எங்கொடிய வினைநோயால் கைநழுவிப் போயகன்று இப்போ
துலையொத்து வந்தவர்க்குத் தூய அருள் தெரிவதுபோல்
தெரிகிறது பழுதில் காட்சி.
பார்த்து நுகர வருமாறு மணியும் ஒலிக்கிறது.
கண்டு தொழுகவென்று கற்பூரம் ஜொலிக்கிறது.
செல்லப்ப குருமணியின் சமாதிக்குப் பின்
சிவயோக குருமணிக்கு ஒரு ஆசை பிறந்ததாம்
"இன்னுமொருதரம் பார்க்கவேண்டும் என்று
கொள்ளை கொள்ளுது என் மனம்" என்று பாடினர்
சிவயோகர். அவ்வாறே முத்துமாரியின் அருள் வளாகமாகிய ஏழூர்களின் வாசிகளும் அவளின் விழாப்பொலிவு காண
ஆசை கிளம்பி அலைந்த சீவர்கள் இனி உவப்படைவர்.

சிவ சிவ

**சைவப் புலவர் ஏ. அனுசாந்தன்**
ஆதீனப் புலவர் திருவாவடுதுறை ஆதீனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுப் பிரார்த்தனை

கூடிப் பாடுவோம் நாங்கள் கூடிப்பாடுவோம்
குவலயத்து நாயகியைக் கூடிப் பாடுவோம்
குலங் காக்கும் நாயகியைக் கூடிப்பாடுவோம் - எங்கள்
குரும்பை நகர் மாரியை நாளும் பாடுவோம். (கூடிப்பாடுவோம்)

தாய் இருக்கும் தலமெங்கும் தேடிப் பாடுவோம்
தாயே மகமாரி யென்று கூவிப்பாடுவோம்
வாயார மனமார வாழ்த்திப் பாடுவோம் - எங்கள்
குரும்பை நகர் மாரியை நாளும் பாடுவோம். (கூடிப்பாடுவோம்)

தேன் சுரக்கும் மலர் தூவி நாளும் பாடுவோம்
அருள் சுரக்கும் ஆலயத்தில் அமர்ந்து பாடுவோம்
ஊன் உருக உளமுருக உரத்துப் பாடுவோம்-எங்கள்
குரும்பை நகர் மாரியை நாளும் பாடுவோம். (கூடிப்பாடுவோம்)

பால் பழங்கள் சாத்தி நிதம் தாயைப் பாடுவோம்
பாசமுடன் எமை வளர்த்த தாயைப் பாடுவோம்
கால் வலிக்க கரம் விறைக்க உருகிப் பாடுவோம்- எங்கள்
குரும்பை நகர் மாரியை நாளும் பாடுவோம். (கூடிப்பாடுவோம்)

தைப் பொங்கல் தைப் பூசம் தாயைப் பாடுவோம்
மாசி மகம் சிவராத்திரி மகிழ்ந்து பாடுவோம்
பங்குனியில் உத்திரத்தில் பணிந்து பாடுவோம்- எங்கள்
குரும்பை நகர் மாரியை நாளும் பாடுவோம் (கூடிப்பாடுவோம்)

சித்திரையில் பௌர்ணமி நாள் தாயைப் பாடுவோம்
வைகாசி விசாகமதில் வணங்கிப் பாடுவோம்
ஆனிதனில் உத்திரத்தில் அவளைப் பாடுவோம்- எங்கள்
குரும்பை நகர் மாரியை நாளும் பாடுவோம். (கூடிப்பாடுவோம்)

ஆடி தனில் பூரத்தினில் அவளைப் பாடுவோம்
ஆவணி நாள்மூல மோணம் அவளைப் பாடுவோம்
புரட்டாதி நவராத்திரிநாள் புகழ்ந்து பாடுவோம்- எங்கள்
குரும்பை நகர் மாரியை நாளும் பாடுவோம். (கூடிப்பாடுவோம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐப்பசியில் கௌரி நோன்பில் உருகிப் பாடுவோம்
கார்த்திகையில் தீப ஒளி ஏற்றிப் பாடுவோம்
மார்கழியில் பாவை நோன்பில் தாயைப் பாடுவோம்-எங்கள்
குரும்பை நகர் மாரியை நாளும் பாடுவோம். (கூடிப்பாடுவோம்)

தாயவளின் அருளாசி வேண்டிப் பாடுவோம்
சாந்தி தரும் வெண்ணீறு பூசிப் பாடுவோம்
அடிதொழுது உருண்டழுது தாயைப் பாடுவோம் - எங்கள்
குரும்பை நகர் மாரியை நாளும் பாடுவோம். (கூடிப்பாடுவோம்)

**அருண். சக்திவேல்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூடி உனைக் கும்பிடுவோம்



கூடி உனைக் கும்பிடுவோம்
குரும்பையூர் மாரி
ஓடி வந்து அணைத்திடம்மா
அன்புடனே வாரி

வீடிழந்து வாடுகிறோம்
வீர முத்து மாரி
விடு கதையை நீக்கிடம்மா
விடைகளை நீ கூறி

நின் புகழை நாமறி வோம்
அன்னை முத்து மாரி
உன் னடிகள் போற்றுகின்றோம்
உவக்கும் மலர் தூவி

ஊர் காக்கும் உத்தமியே
உலக முத்து மாரி
தேரேறி வருவ தென்றோ
சேர்ந்து மகிழ நாமும்

மார்கழியில் மனம் மகிழ்வோம்
மகுடம் சூடும் மாரி
திரு வருளைப் பெறுவதற்கே
திருவெம் பாவை பாடி

வேப்ப மரச் சோலையிலே
வந் துறையும் மாரி
விரும்பியே தான் வந்தனையோ
வேப்ப மரம் தேடி

போ ரெல்லாம் போக வேண்டும்
பொட்டழகி மாரி
ஊர் திரும்பும் நாளெதுவோ
உறவுகள் நாம் கூடி

பூர்வ வினை போக்கி விடும்
புவன மாளும் மாரி
யாரி ழைத்த பாவமிது
கூறு அறிவுத் தேவி

குரும்மை யூரும் அழிந்திடுமா
குல விளக்கே மாரி
வருந்து கிறோம் வந்தெமையும்
வாழ வைப்பாய் தேவி.

குரும்பையூர்
தம்பித்துரை ஐங்கரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரும்பசிட்டி அருள் மிகு முத்துமாரி அம்பாள் தல வரலாறு

### அறிமுகம்

யாழ் மாவட்டத்தின் வடக்குத் திசையில் அமைந்தது வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவு. இப் பிரிவுக்குள் அடங்கும் ஒரு அடக்கமான சிறு கிராமம் குரும்பசிட்டி. யாழ் நகரில் இருந்து சுமார் 15கி.மீட்டர் தொலைவில் அமைந்துள்ள இக்கிராமத்துக்குக் காங்கேசந்துறை வீதி வழியாகவும் பலாலி வீதி வழியாகவும் இலகுவாக வந்தடைய முடியும்.

யாழ் மாவட்டத்தின் கலை கலாசாரப் பாரம்பரியங்களுடன் பின்னிப்பிணைந்து நின்ற எமது கிராமத்தின் பெருமைக்கும் மாண்புக்கும் வளம் சேர்த்தவை பிரதேசத்தின் வளமான செம்பாட்டு மண் மட்டுமல்ல. இச் செம்மண்ணில் செந்தமிழையும் சைவ சமய பாரம்பரியங்களையும் உடலாலும் உள்ளத்தாலும் சுமக்க வைத்து மக்களின் நாடி நரம்புகளில் உணர்வுபூர்வமாக கலந்தோட வைத்து வளம் சேர்த்த பொன் பரமானந்தர் மகாவித்தியாலயம் எனும் அறிவாலயமும் அதனை சூழ்ந்து அருள்பாலித்து நின்ற சைவ ஆலயங்களும் என்றால் அது மிகையாகாது.

இத்தகைய பெருமைக்கும் புனிதத்துக்கும் உரிய சூழலை குரும்பசிட்டியின் மையப் பகுதியிலிருந்து சற்று கிழக்குத் திசையில் சென்றால் நாம் தரிசிக்கமுடியும். நித்தமும் மூன்று தடவைகள் ஆலயங்களில் இருந்து எழும் மணியோசைகள் மந்திர ஒலிகள், கல்விக்கூடத்தில் இருந்து எழும் அரிச்சுவடிச் சத்தங்கள் இவற்றை நிதம் உள்வாங்கி சிலிர்த்து முறுக்கேறிய அந்த அரசமரம் இவைகள் தான் அந்தச் சூழலை அடையாளம் காட்டி நின்ற புனிதமான பொக்கிசங்கள். அந்த அரச மரந்தான் அந்தச் சூழலுக்குள் வருவோரை அன்றும் இன்றும் வரவேற்று நிற்கும் பெரு விருட்சமாகும். இப் பெருவிருட்சம் அமைந்த அரசடி சந்தியில் இருந்து தெற்குப்புறமாக செல்லும் வீதி வரலாற்று பெருமையும் தொன்மையும் மிக்க அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலயத்தை தொடர்புபடுத்தி நிற்கிறது.

தவிர்க்க முடியாத ஒரு இடப்பெயர்வுச் சூழலுக்குள் அகப்பட்ட எமது கிராம மக்கள் தமது இயல் பான வாழ்க்கை முறையிலிருந்தும் விலகி சுமார் 25 வருடங்கள் உருண்டோடி விட்டன. கிராமமோ வெறிச்சோடிய நிலையில் அதிஉயர் பாதுகாப்பு வலயத்துக்குள் அகப்படுத்தப்பட்டு தாம் சுமந்து நின்ற வரலாற்று பெருமைகளை அடையாளப்படுத்தக்கூட முடியாதளவுக்கு சின்னாபின்னப் படுத்தப் பட்டு இன்று காட்சியளிக்கிறது.

இன்று மீண்டும் மீளக்குடியமர்வுக்காக எமது கிராமத்தின் ஒரு பகுதி விடுவிக்கப்பட்டுள்ள இவ்வேளையில் மீளக்குடியமரும் மக்களின் மனதில் மனோவலிமையையும் நம்பிக்கையையும் உத்வேகத்தையும் ஏற்படுத்தும் வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவாலயமான பொன் பரமானந்தர் மகாவித்தியாலயத்தையும் சூழ உள்ள ஆலயங்களையும் கட்டி எழுப்ப வேண்டியதன் அவசியம் உணரப்பட்டு துரிதகதியில் கட்டுமானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இந்தவகையில் எமது கிராமத்தின் வரலாற்றுப் பெருமை மிக்க குரும்பசிட்டி அருள் மிகு முத்து மாரி அம்பாள் ஆலயத் திருப்பணிகளும் துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டுக் கும்பாபிஷேகத்தினைக் கண்டு களிக்கக் கூடியதான ஒரு தெய்வ அனுக்கிரகம் கிட்டியமை யாம் செய்த தவப் பயனேயாகும்.

**ஆலயத்தின் தோற்றம்**

குரும்பசிட்டி அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலயம் பழம் பெருமை வாய்ந்த ஒரு ஆலயமாகும். எமது கிராம மக்கள் மட்டுமன்றி அயலூர் மக்களும் அம்பாளின் அருளாட்சி எல்லைக்குள் வரும் அளவுக்கு ஆலயத்தின் வரலாறும் வளர்ச்சியும் பெருமைப்பட வைக்கும் ஒன்றாகிறது. ஆலயத்தின் தொன்மையை உறுதிப்படுத்தக்கூடிய சான்றுகள் என்னும் போது வழமையாக அயற் கிராமங் களின் ஆலய வரலாறுகளைப் போன்று மூதாதையர் வழிவந்த தகவல்களின் அடிப்படையிலேயே நோக்கப்பட வேண்டியுள்ளது. இவ்வாலயத்தின் தோற்றத்துக்குக் காரணமான அற்புத நிகழ்வுகளுடன் அயற்கிராம மக்களும் தொடர்பு பட்டிருந்தமையும் மற்றும் அயற்கிராமங்களில் அம்பாள் ஆலயங்கள் பெரியளவில் இல்லாதிருந்தமையும் அயற்கிராம மக்கள் இவ்வாலயத்துடன் அதீத ஈடுபாடு கொண்டமைக்கான காரணங்களாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன. இந்த வகையில் ஆலயத்தின் தோற்றம் பற்றிய எமது மூதாதையர் வழிவந்ததும் தற்போதும் பலராலும் ஒருமித்த கருத்தாக ஏற்றுக்கொள்ளப்படுவதுமான விடயத்தை ஆவணப்படுத்தியாக வேண்டும். அயற்கிராமங்களின் சில ஆலயவரலாற்று குறிப்புகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது எமது ஆலயத்தின் தோற்றம் பற்றிய வரலாறும் நம்பகத்தன்மையுடையதாக அமைவதைக் காணலாம். அயற்கிராமமான குப்பிளான் கிராமத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கும் கற்கரை கற்பக விநாயகர் ஆலய வரலாற்றுக்குறிப்பில் தமது மூதாதையர் விவசாய நடவடிக்கைகள் சம்பந்தமாக மன்னார் (மாதோட்டம்) பிரதேசத்துடன் தொடர்பு கொண்டிருந்தனர் எனவும். போக்கு வரத்து வசதிகள் அற்ற அக்காலகட்டத்தில் கால்நடையாக கொழும்புத்துறை சென்று அங்கிருந்து தோணியில் பூநகரி இறங்குதுறையை அடைந்து முழங்காவில் இலுப்பைக்கடவை ஊடாக மாதோட்டம் சென்றுவந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. மேலும் குப்பிளான் கிராமத்தில் இருந்து சென்ற இரு சகோதரர்கள் ஒரு தடைவ வழிப்பறிக்கொள்ளையரிடம் சிக்கி தமது பொருட்களை பாதுகாப்பதற்காக விநாயகரை பிரார்த்தித்தபோது அவர்கள் சுமந்து சென்ற மூட்டையில் இருந்த பொருட்கள் கல்லாக மாறிக் கொள்ளையரை அதிசயிக்க வைத்தது எனவும். இதனால் கொள்ளையர்களே அந்த இடத்தில் விநாயகர் வழிபாட்டுக்கு வழிசமைத்தனர் எனவும் குறிப்பிடப் பட்டுள்ளமை நோக்கத்தக்கதாகும்.

இது போன்று நீர்வேலி கிழக்குப் பகுதியில் எழுந்தருளி அருள்பாலிக்கும் வாய்க்கால் தரவை மூத்த விநாயகர் ஆலய வரலாற்றுக்குறிப்பிலும் சில விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதாவது போத்துக்கீசர் ஆட்சியின் காலகட்டத்தில் விவசாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமித்தம் குரும்பசிட்டி குப்பிளான் புன்னாலைக் கட்டுவன் பகுதியிலிருந்து மக்கள் கால்நடையாக நீர்வேலி பகுதியூடாக பிரயாணித்து வருவது வழக்கமெனவும் அவ்வாறு பிரயாணம் செய்யும்போது மூத்தநயினார் கோயில் வளவு என அழைக்கப்பட்ட தற்போதைய ஆலயப்பகுதியில் காலாறிச் செல்வது வழக்கம் எனவும் குறிப்பிடப்படுகிறது. ஒருதடவை இவ்வாறு பிரயாணம் செய்தவர்கள் நெல்மூட்டையுடன் பிள்ளையார் விக்கிரகம் ஒன்றினையும் கொண்டுவந்திருந்தனர் எனவும் அவர்கள் சற்று இளைப்பாறியபின் புறப்பட ஆயத்தமானபோது அவர்களால் பிள்ளையார் விக்கிரகத்தை நகர்த்த முடியாதிருந்ததாகவும் அவர்கள் இறைவன் திருவுளத்தினை உணர்ந்து அவ்விடத்திலேயே அந்த விக்கிரகத் தினை வழிபாட்டுக்காக வைத்துச் சென்றனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு சம்பவக்குறிப்பே எமது கிராமத்து மூதாதையர் வழிவந்த தகவலாகவும் குறிப்பிடப்படுகிறது. மேற்படி ஆலயங்களின் வரலாற்றுக் குறிப்புகளுடன் ஒப்பிடும்போது குரும்பசிட்டி அருள்மிகு முத்துமாரி அம்பாள் வரலாறும் இக்காலப்பகுதியை ஒட்டிய பெருமைக்குரிய வரலாறாக அமைவதை சான்றுபடுத்தக்கூடியதாக உள்ளது. குப்பிளான் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் சிலர் விவசாய நடவடிக்கை சம்பந்தமாக மாதோட்டம் (மன்னார்) சென்று திரும்பி வரும் போது அம்பாள் விக்கிரம் ஒன்றினை தம்முடன் கொண்டுவந்தனர். அவர்கள் தற்போது அம்பாள் ஆலயம் இருக்கும் பகுதியில் பிரயாணித்தபோது வண்டியை நகர்த்த முடியாத நிலையை எதிர் கொண்டனர் பலவழிகளிலும் முயற்சித்தும் பலன் கிட்டாமையால் தாம் கொண்டு வந்த சிலையை அவ்விடத்தில் வைத்து பிரார்த்தித்ததும் வண்டியை நகர்த்த கூடியதாக இருந்தது. அன்றிலிருந்து தாம் வைத்து வழிபட்ட அந்த இடத்தில் அதீத நாட்டமுடையவர்களாக அம்பாளைப் பூசிக்கத் தொடங்கினர். என மூதாதையர் வழித் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இத்தகவல்கள் ஆளுக்காள் சிறிது மாறுபட்ட விதத்தில் சுட்டிக்காட்டப்பட்டாலும் மேற்படி ஆலயத்தின் வரலாறு மன்னார் மாதோட்டப் பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்ட அம்பாள் திருவுருவச் சிலையுடன் ஒட்டிய வரலாறாக தொட்டு நிற்பதை பொதுவாகக் காணலாம்.

### ஆலய பரிபாலனமும் வளர்ச்சிக்கட்டங்களும்

"குரும்பசிட்டியைச் சேர்ந்த பெரிய சரவணையார் என்ற பெரியவர்தான் இக்கோவிலின் புனருத் தாரண நடவடிக்கைகளில் முக்கிய ஈடுபாடு கொண்டிருந்தார். அவர் காலத்துக்குப்பின் உள்ளூரில் முகாமையாளர்களாக இருந்த க.கதிரேசு மற்றும் க.சரவணமுத்து ஆகியோர் தங்களால் இயன்ற தொண்டுகளைச் செய்து வந்தனர். பின் அவர்கள் வழிவந்த திரு.க.செல்லத்துரை(விதானையார்) அவர்களின் காலத்தில் தான் அதி வேகமான முன்னேற்றம் இக்கோவிலில் ஏற்பட்டதெனலாம்." இவ்வாறு குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரால் அருள் மிகு முத்துமாரி அம்பாள் மீது அருட்கவி. வினாசித்தம்பி புலவர் அவர்களால் இயற்றப்பட் திருப்பதிகத்தினை 1971 ம் ஆண்டு காலப்பகுதியில் வெளியீடு செய்த பொழுது நூலின் முகவுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இம் முகவுரைக் குறிப்பில் திரு. க.செல்லத்துரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்வேறு காலகட்டப் பகுதிகளில் ஆலயத்தின் பதிவுகள்



1985 இற்கு முன்




1987-1990 காலப்பகுதிகளில்
(முதலாவது மீள்குடியமர்வின் போது)



1991 - 2011 காலப்பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் வைத்து வைக்கப்பட்டிருந்த காட்சி
(மீளக்காலடி வைத்தபோது மக்கள் பொங்கி படைத்த காட்சி)



இரு தசாப்தங்களின் பின் மீளக்காலடி வைத்தபோது
ஆலயத்தின் ஒருபகுதி



2013 மார்ச் வரை தற்காலிக கட்டடத்தில்



2013-03-27 இன் பின் தற்போதைய காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதானையார் அவர்களின் பணிகளும் ஆலய சம்பிரதாயங்களும் இவ்வாறு தொடர்கின்றன. "கொடித்தம்பம், சித்திரத்தேர், உள்வீதியை மூடிக் கொட்டகை, சுற்றுப்பிரகாரக் கோவில்கள், மின் விளக்கு, தீர்த்தத்தொட்டி, தண்ணீர்க் குழாய்கள, வாகனங்கள், வெளிமண்டபங்கள் அமைக்கப்பட்டன சென்ற பதினைந்து வருடங்களில் இக்கோவிலில் ஏற்பட்ட முன்னேற்றம் எழுத்தில் அடங்காதது. இறும்பூதெய்தக் கூடியது. இவை மாத்திரமல்ல திருவிழாக்களும் அப்படியே. மாதா மாதம் சோதி நாள் கஞ்சி, பூரத்திருவிழா, நவராத்திரி, திருவெம்பாவை கால விசேட விழாக்கள், குளிர்த்தி தைப் பூசம், பொங்கல், மாசிமகம், சிவராத்திரி, பங்குனி உத்தரம், வருடப்பிறப்பு, சித்திராபூரணை வைகாசி விசாகப்பொங்கல், ஆனி உத்தரம், ஆவணி மூலம், புரட்டாதிச் சனி, ஐப்பசிவெள்ளி கார்த்திகை தீபம், சங்காபிஷேகம் என 65க்கு மேற்பட்ட விழாக்கள் நடப்பது இவ்வாலயத்தின் சிறப்பே"

மேலும் இம்முகவுரைக் குறிப்பில் "இவ்வாலய அபிவிருத்தியிலும் விழாச் சிறப்பிலும் தனிமனிதர் யாரும் உரிமையோ பெருமையோ கொள்ள முடியாது. தொள்ளவும் இல்லை முகாமையாளர் பூசகர் பொதுமக்கள் என்ற முத்திறத்தாரும் ஏகோபித்து இது எங்கள் கடமையென எண்ணி செயல் புரிந்ததனாலேயே இப் பெருமை ஆலயத்துக்குக் கிடைத்தது. முக்கியமாக இறைவனடி யெய்திய சைவத்திரு. சி.சுப்பிரமணிய ஐயரவர்களும் இவ்வாலயத்தின் முதலாவது கொடியேற்று வைபவத்தை ஆரம்பித்து சீவந்தராயிருக்கும் வரை இக் கைங்கரியத்தை தொடர்ந்து செய்து வந்த வருமான சிவத்திரு. ந.தியாகராசக் குருக்கள் அவர்களும் இவ்வாலய வளர்ச்சிக்கு செய்த சேவைகள் குறிப்பிடக் கூடியவை. முகாமையாளரின் ஒத்தாசையோடு சைவத்திரு. சி.சுப்பிரமணிய ஐயரவர்கள் குறிக்கப்பட்ட நேரத்திற்கு தினசரி பூசைகள் சரியான காலத்துக்கு விழாக்கள் என்பவை நடைபெற ஆவன செய்தார். இப்போதும் இவை நடைமுறையில் இருக்கின்றன. இக் கோவிலின் சுத்தத்தையும் அழகையும் ஒழுங்கையும் பலர் வியந்து பாராட்டியுள்ளனர். விடிய நான்கு மணிக்கே அம்பாள் ஆலய அசையா மணி தவறாமல் "டாண் டாண்" என ஒலித்து எமதூரைத் துயிலுணர்த்தலோடு "தாயே ஈஸ்வரி!" என வாய் குளற வைக்கிறது. இது ஐயர் அவர்கள் செய்த அருஞ்செயல். அவரைப் பின்பற்றி அவர் சுற்றத்தார் நன்றாகவே குருத்தொண்டு செய்து வருவது இவ்வூர் செய்த பாக்கியமாகும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இக் குறிப்புரைகள் ஆலயத்தின் வளர்ச்சி தொடர்பான பல விடயங்களை தொட்டு நிற்கின்றன. குறிப்பாக ஆலயத்தின் முகாமைத்துவம் ஆலயத்தின் வளர்ச்சிக் கட்டங்கள் இவற்றில் பங்களித்த பெருமக்கள் ஆலயத்தின் நித்திய பூஜை மற்றும் கிரியா கருமங்களை பேணிவந்த சைவக்குரு மார்கள் எல்லோருமே ஆலயத்தின் வரலாற்று நிகழ்வுகளுடன் இணைத்துக் கொள்ளப்பட வேண்டி யவர்களாவர்.

ஆலயத்தின் முகாமைத்தவம் தொடர்பாக எடுத்துநோக்கும் போது பெரிய சரவணையார் என்ற பெரியவர் ஆரம்ப காலகட்டத்தில் ஆலயத்தின் முகாமைத்துவ நடவடிக்கைகளில் ஈடுபாடு கொண்டவராக இருந்தார். அவர்வழி அமரர் திரு. க.கதிரேசு மற்றும் சரவணமுத்து ஆகியோரும் அதனை அடுத்து அமரர் க.செல்லத்துரை அவர்களும் இப்பணிகளை செவ்வனே நிறைவேற்றி வந்தமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்க விடயங்களாகும். முன்னர் குறிப்பிட்டது போல அமரர் க. செல்லத்துரை (விதானையார்) அவர்களின் முகாமைத்துவத்தின் கீழ் ஆலயமானது பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களை கண்டிருந்தது. ஆலயத்துக்கென எழுந்தருளிச் சிலைகளை அமரர் திரு.சிவசம்பு மற்றும் அமரர் திரு.அ.வைரமுத்து ஆகியோர் செய்து வழங்கினர் இதேபோல் சிறப்பான மகிஷா சுரன் உருவை அமரர் திரு. செல்லத்துரை அவர்களும் முருகப்பெருமான் சூர சங்காரத்துக்கான சூரனை குப்பிளானைச் சேர்ந்த திருநாவுக்கரசு அவர்களும் செய்து வழங்கி இருந்தனர். இவற்றை விட கைலாய வாகனம் கேடகம் சிங்கவாகனம் காமதேனு வாகனம் குதிரை வாகனம் அன்னப் பட்சி வாகனம் என அம்பாள் கொலுவீற்றிருந்து வீதியுலா வந்த வாகனங்கள் ஏராளாம் இவை யாவும் அடியார்களால் தம் வேண்டுதல்கள் நிறைவேறுதலுக்காக செய்து வழங்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அமரர் க.செல்லத்துரைஅவர்கள் ஆலயத்துக்கு அந்தந்தக் காலகட்டத்துக்கு அவசியமான தெனக் கருதப்பட்ட திருப்பணிகளை ஊர்ப் பிரமுகர்களுடனும் அயலவர்களுடனும் கலந்துரையாடி திறம்பட செயற்படுத்தியவர். இவை மட்டுமன்றி தாமாகவே திருப்பணி வேலைகளை செயற் படுத்த முன்வருவேரையும் ஏனையோரையும் கவர்ந்திழுக்கும் சக்தி அவரிடம் காணப்பட்டது முக்கியமாக 1960களில் பல முக்கிய திருப்பணி வேலைகள் இடம்பெற்றன. இக்காலகட்டத்தில் தான் அம்பாள் ஆலயத்துக்கான சித்திர செய்கைத் தேர் உருவாக்கப்பட்டது. சித்திரத் தேர் உருவாக் கத்துக்காக கணிசமான ஒரு நிதி பங்களிப்பை அமரர் திரு. பி.எஸ். நடராசா வழங்கி திருப்ப ணியைத் தொடக்கி வைத்தார். ஊரவர்களின் பங்களிப்புடன் சித்திரத்தேர் மிகவும் அழகாக உருவாக்கப்பட்டது. அமரர் செல்லத்துரையவர்கள் சுகயீனமுற்றிருந்த நிலையிலும் தன்னாலியன்ற பணிகளை நிறைவேற்றுவதில் சலிக்காது பாடுபட்டு வந்தார். ஆலயம் வளர்ச்சி கண்டநிலையில் எதிர்கால நிலைமைகளைக் கருத்தில் கொண்டு 09.04.1979இல் அவர் ஆலயத்தை நிர்வகிப்பதற்கென தர்மகர்த்தா சபை ஒன்றை உருவாக்கி அதனிடம் பரிபாலன விடயங்களை ஒப்படைத்திருந்தார். இதனைத் தொடர்ந்து பரிபாலனசபைக்கான யாப்பு ஒன்று அங்கீகரிக்கப்பட்டு ஆலய பரிபாலன சபையானது 21-03-1995 ந்திகதி HA/5/JA/670 இலக்கத்தின் கீழ் இந்து கலாசார திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆலயத்தின் வளர்ச்சியில் அமரர் திரு.க.செல்லத்துரை அவர்களின் காலமும் பணிகளும் எவ்வாறு முக்கியப்படுத்தப் படுகிறதோ அதே போன்று ஆலயத்தின் வளர்ச்சியில் பிணைந்து நிற்கும் ஆலயக் குருமார்களின் பரம்பரையின் ஊடே சிவத்திரு ஐயாத்துரை ஐயா, வேலாயுதர் ஐயா, சின்னத்துரை ஐயா ஆகியோரின் வரிசையில் சிவத்திரு சி.சுப்பிரமணிய ஐயா அவர்களின் காலமும் சிறப்பாக குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும் சுப்பிரமணிய ஐயா அவர்கள் ஆலயத்தில் சமய ஆசாரங்களை முதல்நிலைப் படுத்தி தனது கிரியா கருமங்களை செய்துவந்தவர். அவர் தனது பார்வையாலும் புன்சிரிப்பாலும் பேசும் சுபாவத் தாலும் சமயக்குருவுக் குரிய பண்புகளுக்கு இலக்கணமாக இருந்தவர். அவர் கற்பூர ஆராத்தி காட்டும் பாவனை திருநீறு வழங்கும் தோரணை இவை தரிசிப்போரின் இதயங்களையும் கண்களையும் கசியவைக்கும் சக்தி படைத்தவை. இவரது வழியில் பின்னர் அமரர் சிவத்திரு திருநாவுக்கரசு ஐயா அவர்களும் தொடர்ந்து மாணிக்கவாசகக் குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களும் ஆலயத்துக்கான குருத்துவப் பணிகளை மேற்கொண்டிருந்தனர். சிவத்திரு சி. சுப்பிரமணிய ஐயா அவர்களின் பூஜை வழிபாட்டு முறைகளைப் பின்பற்றி மீண்டும் ஆலயத்துக்கு அருட்பொலிவூட்டி நின்றவர் மாணிக்கவாசகக் குருக்களாவார். அவரது வாயில் இருந்து ஒலிக்கும் இதமான மந்திர ஒலிக்கும் பூசை செய்யும் பாவனைக்கும் மயங்காதவர்கள் எவருமில்லை என்றே குறிப்பிடவேண்டும். மாணிக்க வாசகக் குருக்கள் அவர்களைத் தொடர்ந்து ஆலயக் குருத்துவப் பணிகளை சிவத்திரு. தி. இரத்தினசாமி ஐயா அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார்.

### போர்சூழலும் ஆலயமும்

ஆலயத்தின் வரலாற்றுப் பாதையில் 1980 கள் குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும். இக்காலப் பகுதிகளில் நிலவிய நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளால் கிராமமே இடம் பெயர்ந்து இயல்பான வாழ்க்கை முறையிலிருந்தும் விலகியிருக்க வேண்டிய தொரு நிலை ஏற்பட்டது. இந்நிலை 1986, 87 களில் ஒரு தடவையும் 1990ல் இருந்து நிரந்தரமான தொன்றாகவும் மாறியிருந்தது எனலாம். இக் காலப்பகுதிக்குள் ஆலயமானது முற்றாக தரைமட்ட மாக்கப்பட்டிருந்தது. ஆலயத்துக்கு உரிய கட்டிடங்கள் மட்டுமன்றி சித்திரத்தேர் வாகனங்கள் எழுந்தருளிச் சிலைகள் யாவுமே அழிக்கப்பட்டும் களவாடப்பட்டும் காணப்பட்டன இக்காலகட்டங்களில் மக்கள் இடம்பெயர்ந்து உடலாலும் உள்ளத்தாலும் தளர்வுற்ற போதெல்லாம் முத்துமாரி அம்பாளை பிரார்த்தித்து அவள் அருட்கடாட்சத்தின் கீழ் பக்தி வைராக்கியத்துடன் தம் வாழ்நாட்களைக் கழித்து வந்தனர் என்றால் அது மிகையாகாது. தாம் இடம் பெயர்ந்து சென்ற இடங்களில் எல்லாம் அம்பாளின் திருவெம்பாவைக் காலத்தை மனத்தில் நிறுத்தி பூசை வழிபாடுகளையும் பிரார்த்தனை நிகழ்வுகளையும் ஆலயக்குருமார்களை கௌரவிக்கும் நிகழ்வுகளையும் தொடர்ந்து நடத்தி வந்தமை இங்கு குறிப்பிடத்தக்க தொன்றாகும். இக்காலப் பகுதியில் அம்பாள் ஆலயத்தின் பிரதம குருவாக சிவத்திரு. தி.இரத்தினசாமி ஐயா அவர்கள் மக்களுடன் மக்களாக இணைந்து செயற்பட்டார். எப்பொழுது கிராமத்துக்கு செல்லச் சந்தர்ப்பம் கிடைக்கிறதோ உடனேயே தான் அயலூர்களில் செய்துவந்த பூசை மற்றும் கிரியை நடவடிக்கைகளை கைவிட்டு அம்பாளின் தலத்துக்கு ஓடிவந்து விடுவேன் என அவர் அடிக்கடி கூறிக்கொள்வார்.

### மீள் குடியேற்றமும் ஆலயமும்

கிராமத்தின் ஒரு சிறு பகுதி மீள் குடியமர்வுக்காக விடுவிக்கப்பட்டிருந்தது. இச் சிறுபகுதியும் குரும்பசிட்டியின் மண்வாசனைக்கு அடித்தளமாக விளங்கிய ஆலயங்கள் கல்விக்கூடம் பயிர்நிலங்களை அடக்கிய பிரதேசப் பகுதியாக கிடைத்தமைதான் எமது கிராமத்தை மீண்டும் மிடுக்குற வைக்க கிடைத்த அம்பாளின் அனுக்கிரகம் என நம்பிக்கை ஒளியை ஊட்டி நின்றது. உண்மையில் இச்சிறுபகுதிக்குள்தான் பல கஸ்டப்பட்டவர்களின் வாழ்விடங்கள் அடங்கியிருந்தன. இதனால் மீண்டும் அவர்களால் கிராமத்துக்கு திரும்பி மீளக்குடியமரக் கூடியதாக அமைந்தது. இந்த வகையிலும் இச்சிறு நிலப்பரப்பு முக்கியத்துவம் பெறுவதாக அமைந்தத எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்துக்குள் பலவருட இடைவெளியின் பின் காலடி வைத்தபோது கிராமத்தை மீளக் கட்டி யெழுப்பும் துணிவை ஏற்படுத்தக் கூடிய தடயங்களைத் தேடி மக்கள் அங்கலாய்த்து நின்றனர். அவர்கள் நடமாடித் திரிந்த பாதைகளை அவர்களாலேயே அடையாளப்படுத்த முடியவில்லை. கிராமத்தின் விதி ரேகையாக இருந்த ஈழகேசரிப் பொன்னையா வீதியே அழியாத அடையாளமாக காட்சியளித்தது. மக்கள் தமது இல்லங்களை தேடித் திரிந்த போது அவர்களை அறியாமலேயே அம்பாள் ஆலயத்தை தேடி நாடிச் செல்ல வைத்தது அந்த அருட்பெரும் சக்தி. அம்பாளின் திருவுருவச்சிலை எவ்வித பாதிப்புமின்றி பூசிக்கக் கூடியநிலையில் காட்சியளித்தமை உறைந்து போன உள்ளங்களுக்கு ஒரு உத்வேகத்தைக் கொடுத்தது. அம்பாள் ஆலயம் இருந்த சூழல் பகுதிகளில் சிறிது சிறிதாக ஒளி பிறக்கத் தொடங்கின. அம்பாளுக்கு ஒரு சிறு ஆலயத்தை அமைத்தபின் தமது கைங்கரியங்ககளைத். தொடங்குவது என்ற மக்களின் பிரார்த்தனையை நிறை வேற்றும் பணியானது குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் அப்போதைய தலைவர் அமரர்.ஆ.சி.நடராசா அவர்களின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது. இந்தவேளையில் நித்திய பூசைகளை நிகழ்த்துவதற்கு சிவத்திரு தி. இரத்தினசாமி ஐயா அவர்களும் தம் பணிகளை அம்பாளுக்கு அர்ப்பணித்து நின்றார். அன்றிலிருந்து அம்பாள் ஆலயத்தை தரிசிக்க ஒருவரும் தவறுவதில்லை. ஆலயத்தில் கூடும் போது மனதில் அம்பாள் ஆலயத்திருப்பணிகள் தொடர்பான எண்ணங்கள் அவளருளாலே இயல் பாகவே உருப்பெறத் தொடங்கின. கிராமத்தவர்களிடமும் புலம்பெயர்ந்து வாழும் கிராமத்து உறவு களிடமும் அயற்கிராமத்து அன்பர்களிடமும் திருப்பணி வேலைகள் தொடர்பாக ஒரு இறுக்கமான பிணைப்பு ஏற்பட்டன. குரும்பசிட்டி கிராமத்தின் இரண்டாவது கட்டமாக விடுவிக்கப்பட்ட நிலப் பகுதிக்குள் அம்பாள் ஆலயம் அமைந்திருந்த பகுதியும் விடுவிக்கப்பட்டமையானது ஆலயப் புனருத்தாரண வேலைகள் தொடர்பான திட்டங்களுக்கு மேலும் வலுச் சேர்ப்பதாக அமைந்ததெனலாம். இந்த நிலையில் ஆலயத்தின் முக்கிய திருப்பணி வேலைகளை அம்பாள் அடியவர்கள் சிலர் தாமாகவே பொறுப்பெடுக்க முன்வந்தமை திருப்பணி வேலைகள் செயற்படுத்துவதற்கு மிகவும் இலகுவாக அமைந்தது. இந்தவகையில் 2012 தைப் பூச நன்நாளில் அம்பாள் ஆலயத் திருப்பணி வேலைகள் அந்தணப் பெரியோரின் ஆகமக் கிரியைகளுடனும் ஆசீர்வாதத்துடனும் ஆரம்பமாயின. அம்பாள் அடியவர்கள் மனமுவந்தளித்த நிதிப்பங்களிப்புடனும் குறிப்பாக ஒவ்வொரு முக்கிய திருப்பணி வேலைகளையும் தாமாக செய்துதர முன்வந்த அடியார்களினது தாராள மனப்பான்மையாலும் ஆலயப் புனருத்தாரண வேலைகள் மிகவும் துரிதகதியில் நிறைவேறத் தொடங்கின. தாமாக முன்வந்து திருப்பணி வேலைகளை பொறுப்பேற்றுக்கொண்ட அடியார்களின் வரிசையில் திரு.அண்ணாமலை குலசிங்கம் அவர்கள் மூலஸ்தானத் திருப்பணியையும், வசந்த மண்டப வேலைகளை திரு.பொ.தவராசா அவர்களும், மேலும் பரிவார மூர்த்திகளுக்கான அமைப்புக்களில் விநாயகருக்கான நிர்மாணப் பணிகளை திரு.செல்லத்துரை விக்கினேஸ்வரன் (ஜேர்மனி) அவர்களும், முருகனுக்கான நிர்மாணப் பணிகளை பொ.வைத்திலிங்கம் குடும்பத்தினரும், சந்தான கோபாலருக்கான நிர்மாண பணிகளை திரு.க.வே.சுப்பிரமணியம் குடும்பத்தினரும், சண்டேஸ்வரிக் கான நிர்மாணப்பணிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச. வெற்றிவேல் குடும்பத்தினரும், பைரவருக்கான நிர்மாணப் பணிகளை திருமதி. செல்வலட்சுமி இராசரத்தினம் அவர்களும் நவக்கிரக மூர்த்திகளுக்கான நிர்மாணப் பணிகளை திரு.இ.கருணாமூர்த்தி குடும்பத்தினரும் பொறுப்பேற்று நிறைவேற்றி உதவினர். இதேபோல திரு. நவரத்தினம் குடும்பத்தினர் (மணிக்கூட்டுக் கோபுரம்) திரு. சி.குகராசா குடும்பத் தினர் (யாகசாலை அமைப்பு) திரு. இ.ஜெயக்குமார் (டென்மார்க்) (தண்ணீர் தொட்டி அமைப்பு) திருமதி கெங்கையம்மா சண்முகம் அவர்கள் (உட்புறத் தூண்கள்) திரு. சண்முகம் ஸ்ரீ ரஞ்சன் அவர்கள் (வெளிப்புறத் தூண்கள்) திரு. க.இளையதம்பி (களஞ்சிய அறை) அவர்கள் திரு. இ.சிவச்செல்வம் குடும்பம் (பலிபீடம்) (கொடித்தம்பம்) திருமதி சாந்தினி நவரட்ணம்(சுற்றுப்புற மதிலுடன்கூடிய மடப்பள்ளி வேலைகள்) திரு. தர்மலிங்கம் யோகநாதன் (நில வேலைகள்) ஆகியோரின் திருப்பணி உதவிகளும் நன்றியுணர்வுடன் நினைவு கூரத்தக்க விடயங்களாகும். இதேபோல காலத்தின் தேவையறிந்து ஆலயத்தின் திருப்பணி வேலைகளுக்கு நிதி உதவி வழங்கிய அனைத்து உள்ளங்களும் நன்றிக்குரியவர்களாக நினைவு கூரப்பட வேண்டியவர்களாவர்.

மேலும் ஆலயத் திருப்பணி வேலைகளில் பரிபாலன சபையினருடன் கைகோத்து நின்று செயற்பட்ட அனைவரும் அம்பாளின் திருவருள் பேறு பெற்றவர்களாவர். ஆலய பரிபாலன சபையும் (திரு. செ.ஈஸ்வரபாலன் (தலைவர்) திரு. வ.கிருஷ்ணசாமி (செயலாளர்) திரு. கு.இராசநாயகம் (பொருளாளர்) திரு. ம.சபாரத்தினம் (உபதலைவர்) திரு. க.சிவதாசன் (உப செயலாளர்) ஆலய பிரதமகுருமார் களான சிவஸ்ரீ தி.இரத்தினசாமிக்குருக்கள் அவர்வழி சிவஸ்ரீ இரத்தின திருக்குமரக்குருக்கள் ஆகியோரும் ஒன்றிணைந்து மேற்கொண்ட கைங்கரியங்களின் பயனாக சிவாச்சார்ய ஞானபானு சிவஸ்ரீ சிவ. இராஜேந்திரக்குருக்கள் கும்பாபிஷேக பிரதமகுருவின் கீழ் அந்தணப் பெரியோர்களின் ஆசீர்வாதத்துடன் 27.03.2013 அன்று கும்பாபிஷேக நிகழ்வுகள் இனிது கைகூடியமையானது அம்பாளின் அனுக்கிரகமேயாகும். இந்தவகையில் எமது கிராமத்துக்கும் மக்களுக்கும் அம்பாளின் அருட்காற்று வீசும்படியான ஒரு புனிதச் சூழலை அம்பாள் ஆலயம் ஏற்படுத்தி மீண்டும் வரலாறு படைத்து நிற்பதில் பங்களிப்பு செய்தோம் என்றவகையில் நாம் எல்லோரும் பெருமையும் பாக்கியமும் பெற்றவர்களாவோம் .

பரிபாலன சபையினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாள் துணை

# குரும்பசிட்டி அருள்மிகு முத்துமாரி அம்பாள் "அன்றும் உருவாகினாள் இன்றும் உருவாகின்றாள்"

"சிங்கத்திலே வருவாய் முத்துமாரியம்மா
சீராரும் குரும்பை நகர் முத்துமாரியம்மா
சங்கத் தமிழ்தந் திடுவாய் முத்துமாரியம்மா
சகல கலை நாயகியே முத்துமாரியம்மா"

நாம் இடப்பெயர்வை சந்தித்து சுமார் 20 வருடங்களுக்கு மேலாக ஆகியும் காலடி படாத எம் குரும்பசிட்டி மண் நிரந்தரமாகவே மறைந்து போகுமோ? என்று மனம் பேதலித்துக் கொண்டிருந்த வேளையில் இன்று எமது குரும்பசிட்டி அருள்மிகு முத்துமாரி அம்பாளுக்கு கும்பாபிஷேகம் செய்யும் காலம் கனிந்திருப்பதைக் கண்டு மனம் பூரிக்கின்றோம். இதுவும் மாரி அம்மனின் கருணை என்றே நம்புகின்றோம். எமது கிராமத்தின் அச்சாய் அமைந்து எம்மை இயக்கியதும், காத்ததும் இரு பெரும் ஆலயங்களாகிய அம்பாள் ஆலயமும், விநாயகர் ஆலயமுமே ஆகும். இன்று இவை இரண்டும் மீண்டும் புனருத்தாரணப் பணிகளால் எழுந்து வருவது எமது ஊரின் எழுச்சிக்கான, வளர்ச்சிக்கான முதல் படியாகவே அமைகின்றது. என்னை ஒத்த வயதினர்க்கு அதிக வாழ்க்கைக் காலத்தை எமது மண்ணில் அனுபவிக்கவில்லை என்ற ஆதங்கம் இருந்தாலும், பசுமையாய் சிறிய வயது நினைவுகளில் பதிந்து அடிக்கடி மனதில் வந்து போகும் ஒன்று அம்பாளின் திருவெம்பாவை காலத்தில் வருகின்ற திருவிழாக்காலமாகும். மீண்டும் அந்த பக்தி பரவசம் மிக்க இனிய உணர்வுகளை பகிர்ந்து கொள்ளும் காலத்துக்காகக் காத்திருக்கலாம் என்ற நம்பிக்கை விதை தான் இந்த கும்பாபிஷேகம் என கருதுகிறோம். அன்றும் அம்பாள் தானே தன்னை உருவாக்கினாள், இன்றும் அம்பாள் தானே தன்னை உருவாக்குகின்றாள் என்பது அவளின் சக்திக்குச் சான்றாகும். அம்பாளின் வரலாறு நோக்கிய என் தேடலில் கிடைத்த சில விடயங்களை இம் மலரின் மூலம் பகிர்வது பொருத்தமானதாக இருக்கும் என நினைக்கின்றேன். பல ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆலய வரலாறாக இதை அறிய முடிகிறது. நொத்தாரிசு திரு சின்னையா அவர்களின் (திரு மனோரஞ்சிதத்தின் தகப்பனார்) சகோதர உறவு முறையாகிய திரு நல்லையா அவர்களின் மகன் ஆகிய அப்புக்காத்து (சட்டத்தரணி) என்று அவரின் பதவி குறித்து அழைக்கப்படும் திரு துரையப்பா என்பவர் குரும்பசிட்டியில் பல காணிகளுக்குச் சொந்தக்காரராக இருந்துள்ளார். அவர் தனது காணிகள் பலவற்றை பலருக்கும் நன்கொடையாகக் கொடுத்து உதவியிருந்தாரம். அவரால் வழங்கப்பட்ட காணிகளில் ஒன்று தான் இன்று அம்பாள் ஆலயம் அமைந்துள்ள இடம். இவரால் தான் முன்னைய நாட்களில் வேம்படிச்சந்தை என்று எப்போதும் கூடி மகிழ்கின்ற மாலை நேரச் சந்தைக்கும் இரண்டு பரப்புக் காணி வழங்கப்பட்டதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு வழங்கப்பட்ட காணியிலே ஆரம்பத்தில் எமது ஊரவர்கள் ஒன்று சேர்ந்து சிறிதாக ஒரு அம்பாள் சிலையை வைத்து வழிபட்டு வந்திருக்கிறார்கள். அதே காணியில் வசித்து வந்த குருக்கள் ஸ்ரீ சின்னத்துரை அய்யா அவர்கள் அயலில் இருந்தமையால் அந்த அம்பாளை ஆராதித்து பூஜை வழிபாடுகளைச் செய்து வந்துள்ளார். இது இவ்வாறு இருக்க அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் வன்னிப்பகுதிக்கு வயல் வேலைக்குக் சென்றிருந்த சமயம் அங்கே வைக்கோல் போர்வை ஒன்றினை அகற்றுகின்ற போது அதற்குள் ஒரு அம்பாள் சிலை கிடைக்கப்பெற்றது. அதனை எடுத்துக் கொண்டு வந்து சேர்ந்த அவர்கள் ஸ்ரீ சின்னத்துரை குருக்களிடம் சேர்ப்பித்தார்களாம். அவர் அவ் அம்பாள் சிலையினை கிரியை பிரகாரம் கிணறு ஒன்றினுள் நாற்பது நாட்கள் நீருள் முழ்க வைத்து பின்பு அதனை ஆதிமூல அம்பாளாய் பிரதிஷ்டை செய்தாராம். இதன் பின்பு அம்பாளின் அற்புத வருகை அறிந்த எமது ஊாரவர்கள், அயல் ஊாரவர்கள் அனைவரும் பக்தியோடு சக்தியைத் தேடிவர, ஆலயம் ஒன்று உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் உருவாகியது. அனைத்துக்கும் கருவாய் அம்பாளே நின்றாள் என்பது தான் அற்புத உண்மை. காணியை வழங்கியவரும், கல்விமானுமாகிய திரு துரையப்பா அவர்களின் தலைமையில் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. குரும்பசிட்டியில் அன்றைய நாட்களில் பலர் வியாபார தொழில்களிலும், விவசாயத்திலுமே ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். அதிலும் குறிப்பாக புகையிலை உற்பத்தியில் பலர் ஈடுபட்டுச் செல்வம் சேர்ந்தவர்களாகத் திகழ்ந்தார்கள். அதனால் சுருட்டு முதலாளிகள் கணிசமான தொகையினை வழங்குவதுடன் ஏனைய ஊர் மக்களும் தமக்கு விரும்பிய தொகையினை வழங்கி ஆலயத்தை நிர்மாணிப்பது என முடிவு செய்யப்பட்டது. திரு சிவசம்பு அவர்கள் (இரத்தினம் ஆசிரியரின் தந்தை) தனது பங்கிற்கு ரூ.100.00 (முன்னைய காலத்திலே அதன் பெறுமதி மிகப் பெரியது) வழங்குவதாக கூற அனைத்து முதலாளிகளும் அத்தொகையினையே தாமும் வழங்கினார்கள். இதனை நிர்வகிக்கின்ற பொறுப்பு திரு. சரவணை, திரு. கதிரேசு (திரு. க.செல்லத்துரை - விதானையார் அவர்களின் தந்தையார்) ஆகியோரிடம் வழங்கப்பட்டது.

அனைவரது முயற்சியினாலும் ஆலயம் படிப்படியாக நிர்மாணிக்கப்பட்டு எதிர்பார்த்ததைவிட சிறப்பாக அமைந்ததாம். பிள்ளையார் முருகன் என தனித்தனி சந்நிதிகள் இல்லாதவிடத்தும் ஒரு ஆலய கட்டமைப்பை ஏற்படுத்தினார்கள். 1929ம் ஆண்டளவில் ஒரு சிறந்த ஆலயக் கட்டமைப்போடு அம்பாள் காட்சி தந்துள்ளார் என்பது அந்தக் காலத்தில் வாழ்ந்தவர்களின் அனுபவக் கருத்தாகும்.

ஆரம்பத்தில் அலங்காரத் திருவிழாக்கள் மட்டுமே நடைபெற்று வந்தன. அக் காலத்திலும் பக்தியால் கூடுபவர்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே இருந்தன. பின்பு ஸ்ரீ சின்னத்துரை குருக்கள் அவர்களின் மகனான ஸ்ரீ சுப்பிரமணியக்குருக்கள் அவர்கள் ஆலய குருவாக இருந்து பக்தியுடன் பூஜை வழிபாடுகளை மேற்கொண்டார். அவர் மிகுந்த பக்தியும் அம்பாள் மீது அதிக ஈடுபாடும் கொண்டவர். அவருடை வாக்கிலே அம்பாள் குடிகொண்டு தனக்குரியதைத் தானே உருவாக்கினாள் என்று மெய் உருகிச் சொல்கிறார்கள் எம் ஊரவர்கள். "குழந்தைகளுக்கு கோயில் கஞ்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்க வேண்டும்" என்றும், "திருவெம்பாவை தினங்களைப் பூஜிக்க வேண்டும்" என்றும் கனவிலும் வாக்கிலும் அம்பாளே தெரிவிக்க ஆலய விழாக்கள் மிகச்சிறப்பாக நடந்தேறின. திருவெம்பாவை காலத்தில் அம்பாளின் திருவிழாவும் பொருத்தமாக அமைந்து எம் தாய்க்குச் செய்யும் கடனாய் ஊரே கூடி விழா எடுக்கும் அந்த நாட்கள் எந்த ஒன்றுக்கும் நிகராகாது. பல அன்பர்கள் நேர்த்திக்கடனாகவும், அன்பளிப்பாகவும் அன்னைக்குத் தம்மால் இயன்றதை அள்ளி வழங்கினார்கள். திரு.சரவணை அவர்களினால் தீர்த்தக் கொட்டு கட்டிக்கொடுக்கப்பட்டது. ஆரம்பத்தில் தேர் இருக்கவில்லை. ஆனால் திருவிழாக் காலங்களில் தேர் மிக அழகாய் வலம் வந்தது என்றால் அதற்கு காரணமாக இருந்தவர் திரு பத்தமேனி கணபதிபிள்ளை அவர்கள். கட்டுத் தேரினை மிகக் கச்சிதமாக வடிமைத்து அம்பாளை தேரில் ஏற்றி அழகு பார்த்த ஒருவர். அவ்வாறே அந்த தேரிற்குரிய மணிகளை வாங்குவதற்கு மக்களிடம் இருந்து பணம் சேர்த்து பரிபாலனசபைக்கு வழங்கியவர்கள் திருமதி நல்லம்மா, கனகசெந்திநாதன், திருமதி, ஞானம்மா சுப்பிரமணியம் போன்றவர்கள். இவ்வாறே அம்பாளிற்கு முதன் முதலாக சிங்கவாகனம் ஒன்றை திரு சின்னப்பு அவர்கள் (ஞானம்மாவின் கணவராகிய சுப்பிரமணியத்தின் தந்தை) செய்து வழங்கினார். அந்த வாகனம் மிக கச்சிதமாகப் பொருந்தி உண்மைச் சிங்கம் போல் காட்சிதரும் என்று அனுபவித்துக் கூறுகின்றார்கள். பின்பு அன்னவாகனம், காமதேனு வாகனம், கைலாய வாகனம், குதிரை வாகனம் போன்றன இருந்தன. எமது ஆலயத்தின் இன்னொரு சிறப்பு அழகிய ஐனரஞ்சகம் மிக்க சிற்பத்தேர் ஆகும். அது பெரும் கொடையாக எமக்கு அமைந்திருந்தது. (இன்று இழப்புகளின் பட்டியலில் அதுவும் சேர்ந்துவிட்டது). அற்புதமான தனது கைவண்ணத்தாலும், கலை எண்ணத்தாலும் மனம் வைத்து மாரி அம்பாளுக்கு அந்த தேர் வடிவமைக்கப்பட்டிருந்தது. தேரினது வெள்ளோட்டம் சுமார் 1965ம் ஆண்டளவில் நடைபெற்றதாக அறியமுடிகின்றது. எமது மதிப்புக்குரிய கலாகேசரி ஆறுமுகம் தம்பித்துரை அவர்களின் குழுவினர் அதனை வடிவமைத்திருந்தார்கள். இதற்கு திரு.பி.எஸ். நடராஜா போன்ற பல அன்பர்களும் ஊர் மக்களும் சேர்ந்து நிதி உதவி வழங்கியிருந்தார்கள்.

அவ்வாறே எமது ஆலயத்தின் இன்னொரு சிறப்பு 1940ம் ஆண்டளவில் சுழலுகின்ற பொறிமுறையுடனான சூரன் உருவாக்கி வழங்கியமையாகும். மிகவும் அருமையாக திரு பொன்னம்பலம் அவர்களால் வடிவமைக்கப்பட்டிருந்தது. அந்தக் காலத்திலேயே அவரால் மிகச்சிறப்பாக வடிவமைக்கப்பட்டிருந்தது. தலைகளை ஆட்டுவதற்கும், வயிற்றினைத் திறப்பதற்கும், சூரனை சுழல வைப்பதற்குமாக அவர் மேற்கொண்ட பொறிமுறை அமைப்புக்கள் அற்புதமானவை. வேறு ஒரு இடத்தில் இப்படி ஒரு சூரன் இருந்திருக்குமோ என்பது சந்தேகம் தான். முதலில் மூன்று தலைகளுடன் சற்று உயரம் அதிகமாக இருந்த சூரன் பின்பு சற்று சீரமைக்கப்பட்டு மேலும் இரு தலைகள் சேர்க்கப்பட்டன இதனை திரு ஆறுமுகம் அவர்கள் (கலாகேசரி தம்பித்துரை அவர்களுடைய தந்தையார்) மேற்கொண்டிருந்தார். இதனை திரு செல்லத்துரை அவர்கள் தனது நேர்த்திக் கடனாக செய்து வழங்கியிருந்தார். (திருமதி.தேவி சுப்பிரமணியம் அவர்களின் தந்தையார்). சூரன் போர் நாட்களில் நாம் பார்த்து பரவசம் அடையுமளவிற்கு மிகச்சிறப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தத்திருவிழா நடைபெறும். திரு பொன்னம்பலம், திரு சிங்கராசா போன்றவர்கள் திறமையாகச் சூரனை கையாள்வதை அப்போது கண்டு நயந்தவர்கள் இன்றும் கூறி வியக்கின்றார்கள்.

எழுந்தருளியாக இருந்த ஐம்பொன்னாலான அம்பாளின் உருவம் இன்றும் எமது கண்களில் இருந்து கொண்டே இருக்கின்றது. அதிலும் நின்றபடியே அருள்பாலிக்கின்ற அம்பாளின் எழுந்தருளி உருவான கதையும் அற்புதமானது. திரு.சிவசம்பு அவர்களிற்கு நீண்ட நாட்காளக பிள்ளைகள் இல்லை என்று அம்பாளை வேண்டினார். தனக்கு பிள்ளை கிடைத்தால் அதன் அளவிலேயே அம்பாள் உருவம் செய்து தருவாதாக நேர்த்தி வைத்தார். அவ்வாறே பெண் குழந்தை கிடைத்தது. உடனேயே குழந்தையின் அளவிலேயே அம்பாள் உருவம் செய்ய ஒழுங்கு செய்யப்பட்டது. அந்த உருவத்தை செய்த பொற்கொல்லர் வியந்து சொன்னாராம் அம்பாளின் இடுப்புப் பகுதியிலே ஒரு மறை ஏற்பட்டுள்ளது. அந்தக் குழந்தையின் இடுப்புப் பகுதியில் மச்சம் ஏதாவது உண்டா என பார்க்குமாறு. அவ்வாறு பார்த்த போது மச்சம் இருந்ததைக் கண்டு ஆச்சரியம் அடைந்தார்களாம். அந்தக் குழந்தை இன்றும் இருக்கின்றார். அவர் தான் திருமதி ஞானம்மா சுப்பிரமணியம் அவர்கள். மேலும், வசந்த மண்டபத்துக்குள் இந்த அம்பாளை எடுத்துச் செல்ல முடியாதளவிற்கு உயரம் அதிகமாக உள்ளது என பலர் கூறிய போதும் எல்லாம் சரியாக வரும் சஞ்சலப்படாமல் எடுத்துச் செல்லுங்கள் என்று பொற்கொல்லர் கூறினாராம். அவ்வாறே வசந்த மண்டபத்துக்குள் மட்டும் அல்லாமல் எங்கள் மனங்களுக்குள்ளும் அன்னை விரும்பி வந்து எளிதாக உறைந்தாள். அமர்ந்து அருளுகின்ற அம்பாளின் உருவத்தினை திரு வைரமுத்து அவர்கள் (திரு சொர்ணலிங்கம் அவர்களின் தந்தை) செய்து வழங்கியிருந்தார். மேலும், கள்வர் கூட்டம் ஒன்று எமது ஆலயத்திற்குள் நுழைந்த போது அவர்களின் திருட்டை தடுக்கும் முகமாக அம்பாள் குளவி வடிவில் வந்து அவர்களை விரட்டி விரட்டி குற்றியதால் ஓடினார்களாம். அந்தக் காட்சி ஸ்ரீ சுப்பிரமணிய குருக்களின் கனவில் தோன்றியதால் ஊர் மக்கள் அனைவரும் அதை அறிந்திருந்தார்களாம். அருட்கவி திரு விநாசித்தம்பி புலவர் அவர்கள் எமது அம்பாள் மீது பாடிய தனது பாடலில்,

"களவுகள் செய்து வந்த கல்நெஞ்சனைக் கலைத்திடவே
குளவியாய் வந்தாய் அம்மா" என்று இந்த அற்புதத்தை குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் திரு அருளம்பலம் (திரு. இந்துதாசன் அவர்களின் தந்தை) அவர்கள் தனக்கு ஒரு பெண் குழந்தை வேண்டும் என்று அம்பாளிடம் வேண்டி கேட்டதன் பயனாக அவருக்கு ஒரு பெண் குழந்தை கிடைத்தது. அக் குழந்தைக்கு அம்பாளின் பெயரான "ஈஸ்வரி" என்ற பெயரையே வைத்து மகிழ்ந்தார்.

திரு. கந்தசாமி மனோன்மணி தம்பதியினர்க்கு வெகுகாலமாக பிள்ளைப்பேறு இல்லாமையால் அம்பாளை வேண்டி வணங்கி தேர்த்திருவிழாவின் போது முள் மிதியடியில் காவடி எடுத்து நேர்த்திக் கடன் செய்ததன் பயனாக ஒரு பெண் குழந்தையினை பெற்றெடுத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறே எமது அயல் ஊரான கட்டுவனைச் சேர்ந்த திரு சின்னத்துரை (பத்தாயிரம்) அவர்கள் மனம் உருகி மாரியை மனதிலே நினைத்து வருடாவருடம் பெரிய குளிர்த்தி செய்ததுடன் தேர்ப்பணிக்கும் தன்னாலான உதவியைச் செய்தார்.

இதுமட்டுமல்லாமல், அயல் கிராமமான குப்பிழான் வாழ் மக்களின் பக்தியையும், பங்களிப்பையும் நாம் குறிப்பிட்டாக வேண்டும். அவர்கள் அன்னையுடன் நெருங்கிய பக்தி உறவு மிக்கவர்கள். இன்று வரை அவர்கள் அம்பாளின் அருட் தொடர்பைப் பேணி வருகின்றார்கள். குப்பிழான் கிராமத்தைச் சேர்ந்த அன்பர் ஒருவரின் தீரத நோயினை அம்பாள் தீர்த்து வைத்து அருள் பாலித்தாள். அதன் பொருட்டு 8ம் திருவிழாவாகிய சப்பரத்திருவிழா அவ் அன்பராலேயே மேற்கொள்ளப்பட்டது. தன் கருணையினால் காத்து நின்ற குரும்பசிட்டி அம்பாளின் அறியாத தெரியாத அற்புதங்கள் இன்னும் பல எமது அறிவுக்கு எட்டாமல் இருக்கும். இவை எல்லாம் அறிய முடிந்தவைகளின் தொகுப்பு. பின்பும் அன்னையின் ஆலய விழாக்கள் எத்துணை சிறப்பாய் நடந்தேறின. மெதுவாக கண்களை மூடி அந்த அம்பாள் ஆலய முன்றலுக்கு ஒரு கணம் சென்று பாருங்கள். உறவுகள் கூடி எம் அன்னைக்கு எடுக்கின்ற பெருவிழா எங்கும் பக்தி மயம் அரோகரா ஒலி. திரு இராசரத்தினம் ஆசிரியர் அவர்களின் கணீரென்ற குரல் இப்போதும் எமது காதுகளில் ஒலிக்கும். "கோபுர தரிசனம் கோடி புண்ணியம் அரோகரா அரோகரா". ஸ்ரீ மாணிக்க குருக்களின் மனம் உருக வைக்கும் பூஜை வழிபாடுகள். குடை பிடிக்க பந்தம் ஏந்த மேள வாத்தியங்களோடு மேனி சிலிர்க்க, கற்பூரச்சட்டியென்ன, பிரதட்டைகள் என்ன, பெண்கள் அடியழிக்க, காவடிகள் அலங்கரிக்க எங்கும் பக்தி பரவசம். பிள்ளைகளின் குதூகலம், பக்தர்களின் ஆனந்தம், ஊரே ஓர் இடத்தில் திரண்டிருக்கும் அந்த ரம்மியமான நினைவுகள் மனதை இன்றும் ஏதோ செய்கிறது. கசக்கிப் பிழிகிறது. நாம் பெற்றவைகள் இப் பூமியிலே பலவாக இருந்தாலும் இந்த உணர்வு ஒன்றை இழந்தமையால் நாம் ஒன்றையுமே பெற்றுவிடவில்லை என்பது போல் இருக்கிறது.

சுப்பிரமணிய குருக்களின் சகோதரர்களான சிவாநந்தக்குருக்கள், திருநாவு குருக்கள் ஆகியோர்களில் திருநாவுக் குருக்களின் மகனான மாணிக்க குருக்களே தொடர்ந்து பல காலம் அம்பாள் ஆலயத்தின் பிரதான குருவாக இருந்து வந்தார். அவருடைய பக்தி மிக்க பூசை வழிபாடுகள் மனம் உருகச் செய்வன. ஆலயம் மேலும் மேலும் வளர்ச்சியடைந்து இப்போது பிரபல்யமாக இருக்கின்ற ஆலயங்களை விட அப்போது எமது அம்பாள் ஆலயம் பெரியதாக இருந்தது எனக் கூறுகின்றார்கள். திரு வைத்திலிங்கம் குடும்பத்தினர் முருகன் சந்நிதியை நிர்மாணித்து வழங்கியிருந்தார்கள், திரு.விக்கினேஸ்வரன் குடும்பத்தினர் பிள்ளையார் சந்நிதியை நிர்மாணித்து வழங்கியிருந்தார்கள். அனைவரது பங்களிப்புடன் அம்பாளின் எழில் மிகு ஆலயம் வளர்ந்து நின்றது. பெரும் பெரும் சைவப்பெரியார்கள் எல்லாம் எமது ஆலயத்தில் சைவச் சொற்பொழிவுகளை ஆற்றி வந்திருக்கின்றார்கள். இரசிகமணி கனக செந்தில் நாதன் அவர்களால் அருட்கவி திரு விநாசித்தம்பி புலவர் அவர்கள் அழைக்கப்பட்டு சைவப்பிரசங்கங்கள் நடாத்தப்பட்டன. அவ்வாறே செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சொற்பொழிவுகளும் தொடர்ந்து பல ஆண்டுகள் நடைபெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. செல்லத்துரை விதானையார் அவர்களின் பரிபாலனத்தின் கீழ் திரு. இராசரத்தினம் ஆசிரியர் மற்றும் பல அம்பாளின் அன்பர்கள் சேர்ந்து செயலாற்றி ஆலய நிர்வாகத்தைச் சிறப்பாக நடாத்தி வந்தார்கள். திரு. சபாரத்தினம், திரு. காசிப்பிள்ளை. திரு. தனபால் திரு. சுந்தரமூர்த்தி போன்றவர்கள் பக்தியோடு அம்பாளை வாகனத்தில் வைத்து காவி வருகின்ற காட்சி இன்னும் என் கண்களில் நிழலாடுகின்றது. திரு. சிவபாதம் அவர்கள் பந்தம் பிடிக்க திரு. இந்துதாசன் அவர்களின் காவடி அப்பப்பா எதைச் சொல்வது எமது இழப்புக்களில் பெரும் இழப்பாய் நாம் நினைப்பது அம்மன் வாழும் எம் ஊரையும் உறவுகளையும் தொலைத்தது தான்.

இனி மெல்ல எமது ஊர் உருவாகிவிடும் என்ற நம்பிக்கையை அம்பாள் உருவாக்கியுள்ளாள். அன்னையை இருத்தினால் அவள் ஆட்களை இருத்துவாள் என்ற நம்பிக்கையுடன் மிகப் பிரயத்தனத்தோடு இன்றைய பரிபாலன சபையினர் பெரும் முயற்சி எடுத்து ஆலயப் புனருத்தாரணப்பணிகளை மேற்கொண்டு இன்று கும்பாபிஷேக ஏற்பாடு வரை வந்திருக்கிறார்கள். சேவைக்கு என்று தெய்வம் சிலரை தானே தேர்ந்தெடுக்கின்றது. அதற்குள் அகப்படுவதற்கும் புண்ணியம் செய்திருக்க வேண்டும். இன்று வெளிநாடுகளிலும், உள்நாட்டிலேயே இடம் பெயர்ந்தும் இருக்கின்ற எமது ஊர், அயலூர் அன்பர்களின் பங்களிப்போடு அம்பாள் மீண்டும் எம்மண்ணிலே அருளாட்சி செய்யப் போகின்றாள் என்று நினைக்கின்ற போது மனம் பூரிப்படைகின்றது. ஆனாலும் அவர்களால் இந்நிகழ்வுகளில் நேரடியாக வந்து கலந்து அருளை பகிர்ந்து கொள்ள முடியவில்லை என்ற ஆதங்கம் இருக்கும். ஊரே இல்லாமல் ஊர்க்காற்று வீசியது போல் அம்பாளின் அருட்காற்றும் எங்கும் வீசும். எல்லோரும் நலமடைவோம். இனி எம் மண் வளம் பெறும்.

"மாரி என்று சொல்லச் சொல்ல மனம் குளிரும் மெல்ல மெல்ல"
(என் தேடலில் கிடைத்தவற்றை தொகுத்துள்ளேன் இன்னும் எத்தனையோ அன்பர்கள்? எத்தனையோ அற்புதங்கள்? ஆலயத்துக்குள் புதைந்திருக்கலாம். தெரிந்ததையாவது தெரிவிக்க வேண்டும் என்ற நோக்கில் மிகக் குறுகிய காலத்தில் தேடியவைகள் தான் இவைகள். தகவல்களை தந்துதவிய திருமதி ஞானம்மா சுப்பிரமணியம்- வயது 84, திரு. இராமநாதன் - வயது 81, திரு. சிவசம்பு தம்பித்துரை, வயது 80, திருமதி. தேவி சுப்பிரமணியம் -வயது 71 ஆகிய அனைவருக்கும் நன்றிகள். அழிந்தவைகளை நினைப்பதைவிட ஆக்கத்திற்கு வழி சமைப்போம்.)

**கவிஞர் குரும்பையூர் தம்பித்துரை ஐங்கரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரி அருள் பெருவாரி

குறுகிய காலத்துள் (1962 - 1987 ) பாரிய வளர்ச்சி கண்ட ஊர் குரும்பசிட்டி.

பொதுவாக "நல்ல ஊர்" "நல்ல மனிதர்" என்றோ பொருள் அடிப்படையில் "இன்னொரு சிங்கப்பூர்" என்றோ கலை இலக்கிய ரீதியாக "இலக்கியப் பூங்கா" என்றோ சிலாகித்து பேசப்பட்ட ஊர்.

மாரியின் அருளால் இசைவாத்தியம், நடனம், சங்கீதம், பண்ணிசை, பஜனை, சமயச் சொற்பொழிவுகள், புராணப்படிப்பு, காவடி, தாளக்காவடி, பறவைக்காவடி கரகம், கும்மி, வசந்தன் கோலாட்டம், பொம்மலாட்டடம், பொய்க்காலாட்டம், ஒப்பனை, நாட்டுக்கூத்து, நாடகம், நாவன்மை, சிறுகதை, நாவல். கவிதை, கட்டுரை, விமர்சனம், சிற்பம், சித்திரம், புகைப்படம், புளொக் வடிவமைப்பு, அச்சுப்பதிப்பு, செய்திப்பத்திரிகை, அறிவிப்புக் கலை, அரங்க அமைப்பு, திரைப்படம், அரும்பொருள்-தொல்பொருள் சேகரித்தல், வரலாற்றுப்பதிவுகள் ஆவணப்படுத்தல் முதலிய பலவேறு கலைகள் வேர்விட்டுத் தழைத்தோங்கிய கலைப்பூமி கவின்மிகு கிராமம் எம்மூர் குரும்பசிட்டி.

குரும்பசிட்டியில் மட்டுமே குரும்பசிட்டி இரா. கனகரத்தினம், குரும்பசிட்டியூர் மாயெழு வேல் அமுதன், குரும்பசிட்டி இ.இராசரத்தினம், குரும்பசிட்டி ஐயாத்துரை ஜெகதீஸ்வரன், குரும்பையூர் செ.சிவபாதம், குரும்பையூர் தம்பித்துரை ஐங்கரன், என அனேகர் ஊர் அபிமானத்துடன் கலை இலக்கிய ஊழியம் செய்கிறார்கள்.
அமரர் மு.திருநாவுக்கரசு அவர்களும் இக்குழாமைச் சேர்ந்த ஒருவர் என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

குரும்பசிட்டியின் மேன்மைக்கு குரும்பசிட்டி அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலயத்ததின் பங்களிப்பைக் காய்தல் உவத்தல் இன்றி மனப்பதிவு அடிப்படையில் வழங்கு வதே இக்கட்டுரையின் ஒரே நோக்கம்.

குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள் ஆலயம் சம்பந்தமான பூர்வீகம் பதிவு செய்யப் படாத ஒன்று. ஐதீகம் கூட ஆளுக்காள் சற்று வேறுபட்ட விதத்தில் பேசப்பட்டு வருகிறது. என்னைப் பொறுத்தவரை நாற்பதின் முற்பகுதியில் குரும்பசிட்டியில் மூத்தோர் வாய்மொழியாக கேள்விப்பட்டதை அப்படியே பதிவு செய்ய ஆசைப் படுகின்றேன். வைக்கோல் வாங்கிவர வன்னி சென்ற குப்பிளான் ஊரைச் சேர்ந்த கமக்காரர் வழியில் மறைத்து வைத்திருந்த அம்மன் சொரூபம் ஒன்றினை தமது வைக்கோலுடன் வைக்கோலாக கொண்டு வந்ததாகவும் இன்றைய குரும்பசிட்டி அம்பாள் ஆலய முன்றிலுக்கு மேல் வண்டி நகர மறுத்ததாகவும் பல வழிகளிலும் பயணத்தை தொடர முயன்றபோதும் பயனளிக்காத நிலையில் அவ்விடத்திலேயே அம்பாள் குடிகொண்டிருக்க வழிசெய்ததாகவும் சொல்லப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று தொட்டு குப்பிளான் கிராம மக்கள் குரும்பசிட்டி அம்பாள் மீது அளவுமீறிய பக்தி சிரத்தையோடு ஆதரித்து வருவது கண்கூடு.

என்னைப் பொறுத்தவரையில் முத்துமாரி அம்பாள் தானாக எமது மண்ணில் குடி யமர்ந்தது நாம் பெற்ற பெரும்பேறு. கிடைத்தற்கரிய வரப்பிரசாதம். அம்பாள் அருளால் வளம் பெருகும், நலம் பெருகும், வாழ்வு மலரும் நம்புகிறேன்.

"தொல்லை யிரும் பிறிவி சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்த மாக்கியதே
எல்லை மறுவா நெறி அளிக்கும்
வாதவூரன் என்கோன் திருவாசகம் என்னும் தேன்"

அருளாளர் மாணிக்கவாசகரின் அமிழ்தினும் இனிய அரும் பாடல் போன்ற எத்தனையோ பாடல்கள் என்போன்றோருக்கு மனப்பாடம். அது எப்படி முடியுமென்றால் குரும்பசிட்டி அம்பாள் ஆலய சூழலுக்கு ஐம்பதிற்கும் முற்பட்ட கால கட்டத்திற்கு நாம் போகவேண்டும். அம்பாள் வீதி உலா வரும் வேளைகளில் சுவாமியைப் பின்தொடர்ந்து பக்தி சிரத்தையோடு பக்திப்பாடல்களைப் பாடிவரும் பக்தகோடிகளைக் காண்பீர்கள். அவர்களுள் ஒருவனாக நானும் இருந்தமையால் மனனம் சாத்தியமானது.

அக்காலத்து பஜனைக்கோஷ்டிகளுக்கு விரும்பித் தலைமை தாங்குபவர் நமது அபிமான ஆசிரியர் இரசிகமணி கனக செந்தில்நாதன் அவர்கள்.

சித்திரைக் கஞ்சியா? புராண படனமா? நமது இலக்கணப் புலி பண்டிதர்.வ.நடராசா அவர்களையும் பாடசாலை அதிபர் சி.கணபதிப்பிள்ளை அவர்களையும் காணலாம்.

மார்கழித் திருவெம்பாவையா? வைகறைப் பொழுதில் ஊரின் குறுக்குமறுக்காக உள்ள குச்சு ஒழுங்கைகளிலுள்ள வீட்டாரை தட்டி எழுப்பி இழுத்துவரும் வீதிப் பாடகர்களைக் காணலாம்.

இப்படியான இதமான பின்புலம் திருப்பாக்களை மனனம் செய்ய வைக்காதா? என்ன. முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் முத்தான இன்னொரு விடயம் நடைபெற்றது. அது தான் தரமான சமயச்சொற்பொழிவுகள்.

தென்னிந்தியா சிதம்பர நடராச பெருமானின் மார்கழி மாத உற்சவ காலமே ஈழத்தில் குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள் உற்சவகாலம். அவ் உற்சவ காலத்தில் காத்திரமான சமயச் சொற்பொழிவுகள் அம்பாள் ஆலயத்தில் நடைபெறும். அருட்கவி. வினாசித்தம்பி பண்டிதர், செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி, பண்டிதர் வே.சங்கரப்பிள்ளை, பண்டிதர் உமா மகேஸ்வரன், இலக்கண வித்தகர் இ.நமசிவாயம், கவிஞர் செ.கதிரேசர் பிள்ளை, பல்கலைக்கழக விரிவுரையாளர் ச.விநாயகமூர்த்தி, சமயப்போதனாசிரியர் சின்னத்துரை, கு.குருசுவாமி முதலிய சமய அறிஞர்கள் அம்பாள் ஆலயத்தில் அருமையாக உரையாற்றுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச் சொற்பொழிவுகளுக்கு பக்தர்கள் பெருக்கெடுப்பார்கள். ஆலய முன் மண்டபம் நிறைந்து தீர்த்தத்தொட்டி இராசர் மடம் வரை ஜனவெள்ளம் நிரம்பி வழியும். இவ்வொழுங்குக்கு இன்னொரு சிறப்பும் உண்டு நிர்வாக ஒழுங்குதான் அது. நிர்வாக ஒழுங்கு என்றால் என்ன என நீங்கள் கேட்பீர்கள். அதாவது இந் நிகழ்ச்சிகளைத் திறம்பட நடத்திடும் திறனே அது. குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரே இந் நிகழ்ச்சித் தயாரிப்பு. தம்பிப்பிள்ளை இராசரத்தினம் ஆசிரியர் (சன்மார்க்க சபை கௌரவ செயலாளர்) அவர்களே சிறப்பாகச் செயற்பட்டவர்.

சன்மார்க்க சபையின் திறன் பற்றி அன்றைய பேச்சாளர் ஒருவரை நேர்கண்டபோது அவர் கூறியதை அப்படியே பதிவு செய்கிறேன். "எங்களை வாத்தியார் மூன்று முறை சந்திப்பார். முதற் தடவை சம்மதம் பெறுதல் இரண்டாம் தடவை ஞாபகமூட்டலும் போக்கு வரத்து வசதி பற்றியதும். மூன்றாம் தடவை உறுதிசெய்தல்"

அம்பாள் ஆலயக் குருக்கள் குரும்பசிட்டியிலேயே குடியமர்த் தப்பட்டிருந்தார். அவரே ஊரின் புரோகிதரும் சோதிடரும் . அவர் வேதாரணியத்திலிருந்து வரவழைக்கப்பட்டவர் என்பதால் ஊர் மக்களால் "வேதாரணியக் குருக்கள்" என அழைக்கப் பட்டார்.

கலியாணமா? சடங்கா? எதுவாயினும் ஒரு சங்கடமும் அன்று எங்களுக்கு இருந்த தில்லை.

மேள தாளமா? சூடாமணி வாத்தியக் கோஷ்டி ஊருக்கென இருந்தது. சூடாமணி வாத்தியக் கோஷ்டியினர் அம்பாள் ஆலயத்துக்குக் கூப்பிடு தூரத்தில் வடக்குப் புன்னாலைக்கட்டுவன் சந்தியில் வசித்து வந்தனர். ஊராரின் மங்கள வாத்தியத் தேவை திருப்திகரமாக நிறைவாகியது.

விசேட நாட்களில் அளவெட்டி இணுவில் மாவிட்டபுரம் போன்ற ஊர்களிலிருந்து கலைஞர்கள் உருத்திராவதி பத்மநாதன் தட்சணாமூர்த்தி ஆகியோர் அழைக்கப் படுவதுண்டு.

இந்த இடத்தில் இன்னொன்றையும் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். ஈழத்து சிறந்த கதாப்பிரசங்க விற்பன்னர் மணிபகவதர் இடைக்கிடை வருகைதந்து ஆடல் பாடலுடன் கலைத்துவமாக கதாப்பிரசங்கம் செய்வதும் உண்டு. இன்னொன்றும் குறிப்பிட்டேயாகவேண்டும் குரும்பசிட்டி மகுடா அசுர வாகனம் தனித்துவமானது. அன்றைய அயலூர் வாகனங்கள் நிலையானதாகச் செய்யப்பட்டு இருக்க நமது அம்பாள் ஆலய சூரன் நாலா திசையும் திரும்பக்கூடியதாக இரும்பு வளையத்தினாலான சுழற்றும் பொறிமுறையுடன் அமைக்கப்பட்டிருந்தது. சூரன் களமாடலைக் கண்டுகளிக்க பெருந்தொகையான கலை ஆர்வலரும் வருவதுண்டு.
அந்நாள் அந்த கலைநுட்பத்துடன் கூடிய சூரனை அமைத்து அம்பாள் ஆலயத் துக்கு தந்தவர் குரும்பசிட்டி கிழக்கை சேர்ந்த பொன்னம்பலம் ஆசாரியார் ஆவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரும்பசிட்டி அம்பாள் ஆலய பூசை உரிமை ஆலய அருகில் வாழ்ந்த சைவக் குடும்பத்தவருக்கே உரியது. நானறிய அமரர் சிவத்திரு.சி.சுப்பிரமணியம் ஐயர் தி.மாணிக்கவாசகர் ஐயர் பூசகராக கடமையாற்றியவர்கள். தற்சமயம் ஆலய அருகில் புதுமனை அமைத்து வாழும் தி.இரத்தினசாமி ஐயர் அவர்கள் அர்ச்ச கராக கடமையாற்றுகின்றார்.

கோவில் தர்மகர்த்தாவாகக் கடமை ஆற்றியவர் திருவாளர் சரவணை ஆறுமுகம் செல்லத்துரை ஆகியோர். தற்சமயம் தர்மகர்த்தா செல்லத்துரை அவர்களின் மகன் ஆலயத்தின் பரிபாலன சபைத் தலைவராகக் கடமையாற்றி வருவது குறிப்பிடத் தக்கது.

குரும்பசிட்டி இரு பெரும் பிரிவுகளைக் கொண்ட சிற்றூர் ஒன்று குரும்பசிட்டி கிழக்கு மற்றையது குரும்பசிட்டி மேற்கு. குரும்பசிட்டி கிழக்கில் அம்பாள் குடி கொண்ட குறிச்சியே குரும்பசிட்டி என்னும் பெயரைத் தாங்கி நின்ற பிரதேசமாகும். அம்பாளின் அருளினால் காலகதியில் கிழக்கும் மேற்கும் ஒன்று சேர்ந்து என்றுமே பிரிக்க முடியாத ஒன்றாகி ஒரு தனிக்கிராமமாகத் திகழ்கிறது.

சூர சம்காரத்தின் அடுத்த நாள் வெற்றி வாகை சூடிய அம்பாள் வெற்றிவிழாவை விமரிசையாகப் பெருவிழாவாகக் கொண்டாடும் நோக்கில் வெள்ளைக் குதிரை வாகனம் ஏறி குரும்பசிட்டி மேற்கில் அமைந்துள்ள மாயெழு புளியடி வைரவர் கோவிலுக்கு வருவது வழக்கம்.

அக் கண்கொள்ளாக் காட்சியை மீண்டும் கண்டு மகிழ அதற்கான சூழல் உருவாக அன்னை முத்துமாரி அம்பாள் அருள்பாலிக்க வேண்டும் என அம்பாளை இறைஞ்சி வேண்டுகிறேன்.

குரும்பசிட்டி எனும் பொற்பதி தன்னில்
விரும்பி அமர்ந்து இன்னருள் சுரந்து
கருணை பொழிந்திடும் மாரி அம்பிகை
திருவடி நிழலே தஞ்சம் எமக்கு.

**வேல் அமுதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரி அம்மையின் திருக்குடமுழுக்கும் மக்கள் நற்பணி மன்றங்களின் செயற்பாடுகளும்

**மகாகும்பாபிஷேகம்**

மகாகும்பாபிஷேகம் அல்லது திருக்குடமுழுக்கு என்பது ஒரு இந்துமத வழிபாட்டு மையத்தின் ஆலயத்தின் வரலாற்றில் ஓர் முக்கிய மைற்கல்லாக கருதப்படுகின்றது. கும்பாபிஷேகம் செய்யப்பட வேண்டுமென வலியுறுத்துகிறன.

தெய்வச்சிலைகளில் இருந்து சக்தியை பிரதானகும்பத்திற்கு மாற்றி இக்கும்பம் கிரியைகள், பூஜைகள், ஹோமங்களால், பரிசுத்தப்படுத்தப்பட்டு, சக்தியூட்டப்பட்டு புதுப்பிக்கப்பட்டபின் இருக்கும் நீரினால் அபிஷேகம் செய்யப்படுவதையே கும்பாபிஷேகம் என்றழைப்பரென டொரோண்டோ யோக - வேதாந்த அமைப்பைச்சேர்ந்த சுவாமி பரமாத்மானந்தா அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆலய கும்பாபிஷேகங்கள் சாந்தி, வளம், ஆரோக்கியம், சிறப்பு என்பவற்றை அதிகரிக்கச் செய்யும் என்பது ஆலய வழிபாடாற்றுவோரின் நம்பிக்கையாக இருக்கின்றது.

எது எவ்வாறு இருந்த போதிலும் ஒரு வழிபாட்டு மையம் ஒரு குறித்த சமூகத்தின் அடையாளச்சின்னமாக, கலாச்சாரக்குறியீடாக, வரலாற்றை வாழவைக்கும் சின்னமாக விளங்குகின்றதென்பதை யாரும் மறுக்கமுடியாது.

இந்த வகையில் குரும்பசிட்டி அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் மீளெழுச்சியையும், திருக்குடமுழுக்கு வைபவத்தினையும் நாம் நோக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

**குரும்பசிட்டி அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலயம்**

ஏறத்தாழ 200 ஆண்டுகால வரலாற்றை கொண்ட இவ்வாலயம் யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் அடங்கும் குரும்பசிட்டி கிராமத்தில் அமைந்திருக்கிறது.

சுமார் ஒன்றரை சதுரக் கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்ட இக்கிராமம் 1970 - 80 காலப்பகுதியில் 730 குடும்பங்களோடு 5 சனசமூக நிலையங்களைக் கொண்டு செழிப்புற்று விளங்கியது.

முத்துமாரி அம்பாள் ஆலயம் மிகப் பொலிவு பெற்று அருளாட்சி செலுத்திய காலப்பொழுதுகள் அவை 1960 களில் வலிகாமம் வடக்கு பிரிவிலேயே முதன்மை பெற்ற (மாதிரி) மாரியம்மை ஆலயமாக "துர்க்கா துரந்தரி" செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் விதந்து பேசப்பட்டது.

**மூலக் கருவறையின் முதற்சிலை**

1800களின் பிற்பாதியில் அயற்கிராமத்து விவசாயப்பெருமக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதோட்டத்திலிருந்து கொணர்ந்து எமக்களித்த பெருமாட்டி மாரியம்மையே மூலக்கருவறையை அணிசெய்தாள்.

பிரபல சரித்திர ஆசிரியரும் கல்வியாளருமான கலாநிதி போல் இ பீரிஸ் அவர்களின் கூற்றுப்படி 275 பாடல் பெற்ற ஸ்தலங்களுள் ஒன்றாகவும், இலங்கைத்தீவின் 5 ஈஸ்வரங்களுள் ஒன்றாகவும் விளங்குவது திருக்கேதீஸ்வரம் என்பது நாம் அனைவரும் அறிந்ததே.

1505 இல் போர்த்துக்கேயரினால் அழிக்கப்பட்ட இவ்வாலயத்து இடிபாடுகள் 1589 அளிவில் மன்னார் கோட்டையை அமைப்பதற்கும் கத்தோலிக்க தேவாலயம் அமைப்பதற்கும் பாவிக்கக் பட்டிருக்கின்றன.

இக்காலப்பகுதிகளில் திருக்கேதீஸ்வர ஆலயத்து விக்கிரங்களை பாதுகாக்க எண்ணிய இந்துமத விசுவாசிகள் அருகிலிருந்து மரப்பொந்துகளிலும், விவசாயக் காணிகளிலும் அவற்றைப் பதுக்கிவைத்தனர்.

ஏறத்தாழ 450 ஆண்டு காலமாக அந்நிய அடக்கு முறைகளுக்குள் சிக்குண்டிருந்த சுதேசிய மதங்கள் மெல்ல மெல்ல புத்துணர்ச்சி பெற்று செயற்படத் தொடங்கிய காலம் சைவ மறுமலர்ச்சி காண விழைந்த மகான் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் காலமாகும்

இந்தக் காலகட்டத்தில்தான் புராதன ஆலயங்கள் புனரமைக்கப்பட்டதும், புதிய ஆலயங்கள் தோற்றம் பெற்றதும் பெருமளவில் நிகழ்ந்தேறின. இக்காலப்பகுதியே குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள் தோற்றம் பெற்ற காலமாகும்.

1940-50 களில் சுற்றுபிரகார மூர்த்திகள், கொடிதம்பம் போன்றவற்றோடு அன்னையின் ஆலயம் வளர்ச்சி கண்டிருந்தது. இக்காலப்பகுதியிலேயே வருடாந்த உற்சவமாக திருவெம்பாவை திருவிழா கொடியேற்ற வைபவத்தோடு ஆரம்பித்து பத்துத்தினங்கள் நடைபெற அம்மையின் அருட்பிரவாகம் கிட்டியது.

**நற்பணி மன்றங்களின் நடவடிக்கைகள்**

மகாதேவ வித்தியாசாலையை நிறுவிய பெரிய வாத்தியார் பொன். பரமானந்தர் அவர்கள் முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் திருவாதவூரடிகள் புராணத்துக்குப் பயன் சொல்லும் வழக்கத்தினை ஆரம்பித்து வைத்தார்கள். இவர் இந்து வாலிபர் சங்கத்தினை நிறுவி அதன் தலைவராக இருந்து மாதந்தோறும் பௌர்ணமி தினத்தில் சங்கரசுப்பையர் போன்ற பெரியார்களை அழைத்து சைவப்பிரசங்கங்கள் செய்வித்து சமய அறிவினையூட்டிவந்தமையை இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

நற்பணி மன்றங்கள் அம்பாள் ஆலயத்துடன் சேர்ந்து செயற்படத் தொடங்கிய நடவடிக்கையில் முதல் அம்சமாக பெரியவாத்தியாரின் புராணபடனத்தை குறிப்பிடலாம்.

இதனைத் தொடர்ந்து 1951 இலிருந்து தொடர்ச்சியாக 33 ஆண்டுகள் குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் நடாத்திவந்த சமயப்பிரசங்கங்கள் காலத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழியாதவை. திருவெம்பாவை உற்சவ காலங்களின் போது மாலை நேரப் பூஜைகளின் பின் இரவு 7 மணியிலிருந்து 8 மணிவரையான காலப்பகுதி அம்பாள் ஆலய புற மண்டபத்தை நிறைத்து நிற்கும் அடியார் கூட்டமே சபையினரின் மிக நேர்த்தியாகத் திட்டமிடப்பட்ட இப்பிரசங்கங்களுக்கு கட்டியம் கூறி நிற்கும்.

மிகப் பழமையிலிருந்து தனி நபர் முகாமைத்துவத்திலேயே பராமரிக்கப்பட்டு வந்த இவ்வாலயம் குறிப்பிடத்தக்க அளவிற்கு வளர்ச்சி கண்டிருந்தது. 1979 ஏப்பிரல் 9இல் முதன் முறையாக உருவாக்கப்பட்ட தர்மகர்த்தா சபையிடம் ஆலய பரிபாலனம் அன்றைய முகாமையாளர் கிராமசேவகர் க.செல்லத்துரை அவர்களால் கையளிக்கப்பட்டிருந்தது.

1983 இலிருந்து நிகழ்ந்த ஆயுதப்போராட்டங்களின் விளைவாக அழிக்கப்பட்ட பகுதிகளுள் எமது கிராமமான குரும்பசிட்டியும் அடங்குகிறது. 1986-87 காலப்பகுதியில் படிப்படியாக இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்ட கிராமம் 1987 மார்ச் 26 இல் முற்றாக சுவீகரிக்கப்பட்டிருந்தது. மக்கள் நடமாற்ற சூனியப்பிரதேசமாக மாறியது. இந்திய இலங்கைச்சமாதான ஒப்பந்தத்தை தொடர்ந்து 1987 ஒகஸ்ட் 10 இல் குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள் கிராமத்து நிலைமைகளைப் பார்வையிட்ட போது எம் கிராமத்தின் இதயநாதமாக விளங்கிய அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலயம் தரைமட்டமாக்கப்பட்டிருப்பதைக் கண்டு நெஞ்சம் பதறினர்.

முதலாவது இடம்பெயர்வின் பின் மீள் குடியேறிய எமதூர் மக்கள் அம்பாள் ஆலயக் கர்ப்பக்கிரகத்தை புனரமைக்கத் தொடங்கியிருந்த நிலையில் 1990 ஜுனில் இரண்டாவது தடவையாக முற்று முழுதாக இடம்பெயர நேரிட்டது.

இடைவிடாத தனது தன்னலம் அற்ற உழைப்பினாலும் தலைமைத்துவப் பண்பினாலும் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவராக இருந்த அமரர் ஆ.சி. நடராசா அவர்களின் முயற்சியினால் இருபது ஆண்டுகளாக ஆளரவற்ற இடுகாடாக பற்றையும் புதருமாக இருந்த எம்மண்ணில் எம்மக்கள் கால் பதிக்க 2011 ஜனவரியில் அரசு அனுமதித்தது.

இவ்விடைப்பட்ட காலப்பகுதியில் இடம்பெயர்ந்து பல்வேறு கிராமங்களில் பலதரப்பட்ட துன்ப, துயரங்களோடு வாழ்ந்த மக்களுக்கு ஒரு ஆறுதலையும் மாறுதலையும் தரும் விதத்தில் குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலையத்தினர் செயற்பட்டு வந்தனர். திருவெம்பாவை உற்சவகாலத்தை ஒட்டி கிராம மக்கள் செறிந்து வாழ்ந்த பகுதிகளில் 1992 இலிருந்து 2010 வரை பூசை வழிபாடுகளையும், கூட்டுப்பிரார்த்தனைகளையும், சைவப்பிரசங்களையும் நடாத்திவந்தனர். ஏழாலை தெற்குவசந்த நாகபூசணி அம்பாள்ஆலயம், சாவகச்சேரி இராமாவில் பிள்ளையார் ஆலயம் உரும்பிராய் அண்ணமார் மற்றும் காளி கோவில்களிலும் பூசைகள் இடம்பெற்றன.

**வருவோம் மீண்டுமென வாஞ்சையுடனிருந்த மாரி**

மீளவும் 2011 ஜனவரியில் கிராமத்தில் முதன் முதலாய் கால் பதித்த வேளை அம்பாள் ஆலயச்சுற்றாடலிலிருந்து தெற்குப்புறமாக சிறு தொலைவில் ஓர் அரசமரத்தின் கீழ் இருந்த விக்கிரகம் கவனத்தை ஈர்த்தது. எம்மூர் அம்பாள் ஆலய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கிரகம் தானா எனத் தெரியாத நிலையிலும் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினராக திரு. அம்பலம் யோகநாதன் 2011 தைப்பொங்கல் தினத்தில் அவ்விடத்திலேயே பொங்கல் செய்து படைத்துள்ளார்.

இவ்விக்கிரகம் போரசிரியர்கள் ப. கோபாலகிருஷ்ணஐயர். எஸ் வேதநாதன் ஆகியோர் மூலம் அம்பாள் திருச்சொரூபந்தானெனவும் ஆலயத்தில் வைத்துப் பூசிக்கத் தகுந்ததெனவும் உறுதிப்படுத்தப்பட்டது.

இச்சொரூபமே அன்றிருந்த உயர் பாதுகாப்பு வலய வேலிக்கு வெளியே அமைந்த சிறு நிலப்பரப்பில் தற்காலிக கொட்டகை அமைக்கப்பட்டு 2011 ஏப்பிரல் 4ந் திகதிகளில் கிராம அபிவிருத்திச்சங்கத்தினரால் பிரதிஸ்டை செய்துவைக்கப்பட்ட அம்பாள் ஆலயமாகும்.

ஆலய பரிபாலன சபையினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க நிரந்தர இடத்திற்குப் போகும் வரை கிராம அபிவிருத்திச் சங்கமே பொதுமக்களின் நிதிப்பங்களிப்போடு அம்பாள் ஆலயத்தை நிர்வகித்து வந்துள்ளது.

பிரதம குருவான சிவத்திரு. தி.இரத்தினசாமிக்குருக்கள், திரு. செ.ஈஸ்வரபாலன், திரு. ம. சபாரத்தினம், திரு. வ.கிருஷ்ணசாமி திரு. கு. இராசநாயகம். திரு. க. சிவதாசன் ஆகியோர் உள்ளடங்கிய பரிபாலன சபையினரால் முன்பிருந்த அதே இடத்தில் எம்மூர், அயலூர் மக்களின் பேராதரவுடன் நிரந்தர ஆலயம் மிகக் குறுகிய காலத்தில் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எம் அன்னை மாரியம்மையுடன் பரிவார மூர்த்திகளும் 2013 மார்ச் 27 புதன்கிழமை நவகுண்டயாகசாலையில் இனிதே நிகழ்ந்தேறிய மகா கும்பாபிஷேக வைபவத்தில் பிரதிஷ்டை செய்யப் பெற்று கோவில் கொண்டனர்.

திருநெல்வேலி முத்துமாரி அம்பாள் ஆலய பிரதம குருவாகவிருந்த சிவாகம கிரியாமணி சிவத்திரு. சிவலோகக்குருக்கள் அவர்களே 1980 களில் நிகழ்தேறிய கும்பாபிஷேகத்தை சிறப்புற நிகழ்த்திவைத்தார்கள். தற்போது ஏறத்தாழ 30 ஆண்டுகளின் பின்னால் அவரின் புத்திரனார் சிவாசாரிய ஞானபானு, சிவத்திரு இராஜேந்திரக்குருக்கள் அவர்கள் தலைமைக்குருவாக இருந்து நிகழ்த்திய இத்திருக்குடமுழக்கு எங்கள் கிராமத்திற்கு மட்டுமன்றி அனைத்து சீவராசிகளுக்கும் நன்மை பயப்பதாக.

மாரியம்மையின் குடமுழுக்கை காணும்வகை செய்த நற்பணி மன்றங்களுக்கும், பரிபாலன சபையினருக்கும், பெருநிதி வழங்கி நிர்மூலமாயிருந்த ஆலயத்தை உருப்பெறச் செய்த உள்ளங்களுக்கும். சிவாச்சார்ய பெருமக்களுக்கும் தொண்டர்சபையினருக்கும் என் தாழ்மையான நன்றிகளையும் வணக்கத்தினையும் தெரிவித்து நிறைவு செய்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரும் நினைவுகள்

இந்து சமுத்திரத்தின் முத்து என வர்ணிக்கப்படும் அழகிய இலங்கைத் தீவின் மகுடமாக விளங்கும் யாழ் குடாநாட்டின் வலிகாமம் வடக்குப் பகுதி காங்கேசன்துறை தேர்தல் தொகுதியின் தென்கிழக்கு பகுதியாக அமைந்துள்ள சிறியதோர் கிராமமே குரும்பசிட்டி ஆகும். சிறிய கிராமம் என்றாலும் பல வளங்களையும் தன்னகத்தே கொண்டு பலதரப்பட்ட மக்களும் சமத்துவமாக வாழ்ந்து சமரசம் உலாவும் கிராமமாக குரும்பசிட்டி விளங்கியது.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" மூதாட்டி ஔவைப் பிராட்டடியாரது கூற்று இது. இதற்கமைய குரும்பசிட்டி கிராமத்தில் பல கோயில்கள் கட்டப்பட்டுக் கிரமமாக பூசைகள் நடைபெற்று வந்தன. காவல் தெய்வமாம் வைரவருக்கென ஆங்காங்கே கோயில்கள் காவல் அரண் ஆக திகழ்ந்தன.

குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள் ஆலயம் குரும்பசிட்டி மக்களுக்கு மட்டுமல்ல அயல் கிராமத்தவர்களுக்கும் அருள் பொழியும் அன்னையின் ஆலயமாக திகழ்ந்தது. மார்கழி திருவெம்பாவை காலத்தில் பண்டிதர் சங்கரப்பிள்ளையின் பிரசங்கத்துடன் தொடர்ந்து தினமும் நடைபெறும் சைவப் பிரசங்கங்கள் சிறுவர் முதல் முதியோர் வரை யாவரையும் கவர்ந்தது. இன்னும் சப்பரத்திருவிழா இரதோற்சவம், தீர்த்தோற்சவம் போன்ற உற்சவங்கள் நீங்காத நினைவுகளாக உள்ளன. இரதோற்சவ தினத்தன்று மாயெழு புளியடி கோயிலடியிலிருந்து அம்பாள் ஆலயத்திற்கு கூட்டமாக செல்லும் காட்சி நம் கிராமத்தை பக்திமயமாக்கிவிடும். சரித்திர பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் வருடாந்த உற்சவத்தின் 23ஆம் நாள் இரவு எமது அம்பாள் ஆலயத்திலிருந்து அம்பாள் அடியவரான காலம் சென்ற திரு. த. பொன்னுத்துரை அவர்கள் ஒவ்வொரு வருடமும் மேற்கொண்டு வந்த அங்கப்பிரதட்டை எவராலும் முறியடிக்க முடியாத தெய்வீக சாதனையாக ஏனைய கிராம மக்கள் பலராலும் மதிக்கப்பட்டும் போற்றப்பட்டும் வந்தது. மாவிட்டபுரம் கார்த்திகைதிருவிழாவன்று குரும்பசிட்டிஅம்பாள் ஆலயத்திலிருந்து கூட்டமாகச் செல்லும் காவடிகள் மத்தியிலே காலம் சென்ற தம்பிமுத்து முள்ளு மிருதடி அணிந்து காவடி எடுத்துச் செல்வது முற்றிய பக்தியின் பலமே என வியந்தவர்கள் பலர். காலம் சென்றவர்களான திரு. தா.சபாரத்தினம் திரு. மு. தம்பிராசா திரு. அ. இந்துதாசன் ஆகிய அம்பாள் அடியவர்களின் தூக்குக்காவடி, பறவைக்காவடி போன்ற மெய் சிலிர்க்கும் நிகழ்வுகளைக் கண்டு பக்திப் பரவசத்தில் மூழ்கிடும் பக்தர்கள் எழுப்பும் "அரோகரா" ஒலி வானைப் பிளக்கும். அம்பாளின் பக்தைகளின் பஞ்சாங்க நமஸ்காரம், கற்பூரக் காவடி, பாற்காவடி ஆகிய நேர்த்திகளை நிறைவேற்றி அம்பாள் அருள்வேண்டி நிற்கும் காட்சிகளை மீண்டும் காணத் துடிக்கிறோம்.

நவராத்திரி காலங்களில் நடைபெறும் சூரன்போர் அயல் கிராமத்தவர் களையும் கவர்ந்த நிகழ்வாகும். இப் புனித நிகழ்வில் பயன்படுத்தப்பட்ட மகுடாசூரன் சுழலும் வகையிலும் சூரனின் தலை பின் புறமாக சரியும் வகையிலும் உரிய பொறிமுறைகளுடன் வடிவமைத்த பெருமை குரும்பசிட்டி ஆச்சாரிகளைச் சேரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மற்றும் விஜயதசமி அன்று நடைபெறும் "மானம்பூ" என்று அழைக்கப்படும் திருவிழா என்றும் எப்பொழுதும் மனதில் பசுமை நிறைந்த நினைவாக இருந்து வருகிறது. எங்கள் அம்பாள் ஆலயத்திலிருந்து குதிரை வாகனத்தில் அம்பாள் அம்பு வில்லுடன் வீராவேசமாக மாயெழு புளியடி வைரவர் கோயிலை நோக்கிச் செல்லும் காட்சியும் அங்கு வாழை வெட்டு நிகழ்ச்சியை நிறைவேற்றி வெற்றி பெருமிதத்துடன் மீண்டும் அம்பாள் தனது ஆலயத்திற்கு பவனி செல்லும் காட்சியும் இனியும் தாமதமின்றி நாமும் எமது சந்ததியினரும் கண்டு மகிழும் காலம் மீண்டும் உதயமாக வேண்டுமென்பது எல்லோருடைய எதிர்பார்ப்பும் வேண்டுதலும் ஆகும்.

இந்தக் கனவு நனவாக முன்னின்று உழைத்த திரு. அ. குலசிங்கம் திரு. பொ. தவராசா ஆகியோர் உட்பட, இப்புனித பணியில் பங்களிப்பு செய்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள் ஆலய குடமுழுக்கு வைபவம் இனிதே நடைபெற்று அம்பாள் அருள் எங்கும் எப்பொழுதும் வியாபித்திருக்க வேண்டுவோமாக.

உலக மகா சக்தியாம் அன்னை பராசக்தியின் சக்தி எங்கும் பரவட்டும்.

வணக்கம்.

**க. வே. மகாதேவன்**
சட்டத்தரணியும பிரசித்தநொத்தாரிசும்
சத்தியப்பிரமாண ஆணையாளர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையும் தமிழும் சைவமும் வளர்ந்த மண் மீண்டும் புத்துயிர் பெறுகிறது.

## 1) குரும்பசிட்டி கிராமமும் அம்பாள் ஆலயமும்

யாழ் மாவட்டத்தின் வலி வடக்குப் பிரதேசத்தில் சைவமும், தமிழும், கலையும் சிறப்புற்று வளர்ந்திருந்த கிராமங்களில் குரும்பசிட்டி முதன்மையிடம் பெற்றிருந்தது. அறிஞர்கள், ஆன்மீக ஞானிகள் கலைஞர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், நல்லாசிரியர்கள், சமூகப் பணியாளர்கள் எனப் பலதரப்பட்டவர்கள் வாழ்ந்த புண்ணிய பூமியாகவே குரும்பசிட்டிக் கிராமம் மிளிர்ந்தது. கலைமகளும், திருமகளும் ஒருங்கே வாசம் செய்த புனிதமான கிராமத்தில் வாழ்ந்த மக்களின் குலதெய்வமாக முத்துமாரி அம்பாள் ஆலயம் திகழ்ந்தது. தயைப் பிரகாஜினியாகிய அன்னையின் அருளாட்சியினால் மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் வாழ்ந்து வந்தார்கள். அம்பாளின் திருவருள் வீச்சினைக் குரும்பசிட்டி கிராம மக்கள் மாத்திரமல்லது அயற்கிராம மக்களும் பெற்றிருந்தார்கள். குப்பிளான், கட்டுவன், ஊரங்குணை, புன்னாலைக்கட்டுவன், வசாவிளான் ஆகிய அயற் கிராம மக்களும் அம்பாளை ஆராமையோடு வணங்கிவந்தார்கள். நமது நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தத்தில் 1987 ஆம் ஆண்டு குரும்பசிட்டி கிராமத்தின் மக்களின் இடம்பெயர்வோடு அம்பாளின் ஆலயமும் முற்றாகத் தரைமட்டமாக்கப்பட்டது. ஆலயச் சொத்துக்கள் அனைத்தும் சூறையாடப்பட்டன. அம்பாளின் ஆலய அழிப்பினை அறிந்த அடியார்கள் அனைவரும் வேதனையால் வாடினார்கள். இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக அம்பாளை மானசீகமாக வழிபட்ட அடியவர்கள் அனைவரினதும் பிரார்த்தனையின் பயனாக அம்பாளின் ஆலயம் மீண்டும் அமைக்கப்பட்டு மகா கும்பாபிஷேகமும் சிறப்பாக நடைபெற்றுள்ளது. அழிவடைந்த அம்பாள் ஆலயத்தில் நித்திய நைமித்திய கிரியைகள் ஒழுங்காக நடைபெற்று வந்தன. சைவக் குருக்கள் பரம்பரையினரே இவ் ஆலயத்தின் பூசாகாரியங்களைச் செய்து வந்தார்கள். இன்றும் இவர்கள் வழிவந்தவர்கள் மிகுந்த பயபக்தியுடன் ஆலயக் கிரியைகளை பக்திபூர்வமாகச் செய்து வருகிறார்கள்.

## 2) கூட்டுப்பிரார்த்தனையின் சிறப்பினை உணர்த்திய ஆலயம்

வெறும் கிரியைகள் நடைபெறும் இடமாக மட்டுமல்லாது சைவப் பண்பாட்டினைப் பேணி வளர்க்கும் கேந்திர நிலயமாகவும் அம்பாள் ஆலயம் மிளிர்ந்தது. மார்கழித் திருவெம்பாவைக் காலத்திலேயே இங்கு மகோற்சவம் நடைபெற்று வந்தது. சின்ன மேளம், சிறுகளியாட்டம், வண்ணவான் சிகரம், வானவேடிக்கை என்பவற்றுக்கு முதன்மை கொடுக்காமல் பக்தி பூர்வமான செயற்பாடுகளே இங்கு இடம் பெற்று வந்தன. மகோற்சவ காலத்தில் வசந்த மண்டபத்திலிருந்து அம்பாள் வீதியுலாப்புறப்பட ஆரம்பித்ததும் நாடறிந்த எழுத்தாளர் இரசிகமணி கனகசெந்தினாதன் சுவாமிக்குப் பின்னால் நமச்சிவாய வாழ்க என்று ஆரம்பித்துச் சிவபுராணத்தைச் சொல்லிக் கொடுப்பார். சிறுவனாக மூன்றாம் வகுப்பு மாணவனாக இருந்த காலத்திலேயே அவருடைய பஜனையிலே கலந்து கொண்ட பசுமையான நினைவுகளை நினைத்துப் பார்க்கிறேன். சுவாமி வெளி வீதி வந்ததும் "முத்தி நெறி அறியாத" என்ற அச்சோப் பதிகத்தைச் சொல்லித் தருவார். அம்பாளுடைய அனுக்கிரகத்தினாலும் கனக செந்திநாதனின் வழிகாட்டலினாலும் சிறிய வயதிலேயே சிவபுராணம். அச்சோப் பதிகம் என்பவற்றை மனப்பாடம் செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேற்றினைப் பெற்றிருந்தேன். தெய்வத் தமிழாகிய திருமுறைகளில் பிற்காலத்தில் ஈடுபாடு கொள்வதற்கும், தெய்வ வாசகமாகிய திருவாசகத்தை உணர்ந்து கற்பதற்கும் உணர்ந்தவற்றை மற்றவர்களுக்கு எடுத்துரைக்கும் அறிவினைப் பெற்றமைக்கும் குரும்பசிட்டி அம்பாள் ஆலயமே எங்களைப் போன்றவர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்தது.

## 3) சைவப் பிரசங்க மரபைப் பேணிய தலம்

மகோற்சவ காலத்தில் மாலை நேரத்தில் அம்பாளின் சபாமண்டபத்தில் சைவப் பிரசங்கங்கள் இடம் பெற்று வந்தன. குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் இந் நிகழ்வினைப் பொறுப்பேற்று நடாத்தி வந்தார்கள் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, அருட்கவி விநாசித்தம்பி, திருமறைச் செல்வர் விநாயக மூர்த்தி போன்ற அறிஞர் பெருமக்கள் பலருடைய சொற்பொழிவுகள் இடம் பெற்று வந்தன. சிறுவனாக, இளைஞனாக இருக்கும் காலங்கத்தில் இச் சொற்பொழிவுகளைத் தவறாது கேட்கும் வாய்ப்பினை அடியேன் பெற்றிருந்தேன். செவிநுகர் கனிகளாகப் பெற்ற இந்த அறிவின் தாக்கம் அடியேனையும் இத் துறையில் ஈடுபட வைத்தது. அம்பாள் ஆலயத்தில் சொற்பொழிவு செய்யும் வாய்ப்பினைச் சன்மார்க்க சபையின் செயலாளராக இருந்த இராஜரத்தினம் (சீனிக்குட்டி) ஆசிரியர் மிக இளம் வயதில் எனக்குத் தந்திருந்தார். குப்பிளான் கற்பக விநாயகராலயத்தில் சமயச் சொற்பொழிவுகளை நாம் ஆரம்பித்து நடாத்துவதற்கு அம்பாள் ஆலயத்தில் நடைபெற்ற நிகழ்வுகளே நமக்கு வழிகாட்டிகளாக அமைந்திருந்தது.

## 4) புராண படனம்

திருவெம்பாவை காலத்தில் பகல் திருவிழா நடைபெற்றதும் ஆலயத்தின் மகா மண்டபத்தில் புராண படனம் நடைபெறும். தெய்வ வாசகமாகிய திருவாசகத்தை தந்த திருவாதவூரடிகளின் வரலாறு படித்துப் பயன் சொல்லப்படும். இராமலிங்கம் ஆசிரியர் சிவப் பொலிவோடு வீற்றிருந்து பயன் சொல்லும் காட்சி அற்புதமாக இருக்கும் பல அடியார்கள் பக்தி சிரத்தையுடன் இந்நிகழ்விற் பங்குபற்றிப் பயன்பெற்றார்கள்.

## 5) கலையழகு ததும்பிய எழுந்தருள் விக்கிரகம், தேர், சப்பற, வாகனங்கள்

அற்புதமான கலை வடிவமும், தெய்வீகப் பொலிவும்கொண்டதாக அம்பாளின் எழுந்தருளி விக்கிரகம் அமைந்திருந்தது. தாயே தஞ்சம் என வரும் அடியார்களுக்கு அபயம் அளித்து அருள் செய்யும் அம்பிகையின் வடிவம் அற்புதமானது. ஆலய அழிவோடு அம்பாளின் அருள் ஒழுகும் விக்கிரகமும் காணாமல் போனமை அடியார்கள் அனைவருடைய உள்ளத்திலும் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. எங்களுடைய சூழலில் முதல் முதலில் அழகிய சிற்பங்களுடன் கூடிய இரதம் (செய்கைத் தேர்) அம்பாள் ஆலயத்திலேயே ஓடியது. மகோற்சவ காலத்தில் சப்பறத் திருவிழாவை எங்கள் கிராமத்தில் இருந்த பிரபல வர்த்தகர் ஆலியெல்லைக் கந்தையா அவர்களே செய்து வந்தார். இவர் அழகிய சப்பறம் ஒன்றினை அம்பாளுக்கு செய்து கொடுத்திருந்தார். கலையம்சம் நிரம்பிய பல்வேறு வாகனங்களும் ஆலயத்தில் இருந்தன. யுத்த சன்னதம் அனைத்தையும் காவுகொண்டுவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6) தல விருட்சம்

ஆம்பாளின் தல விருட்சமாக இருந்த வேம்பினை அம்பாள் வீற்றிருந்து அருள் புரியும் இடமாகவே மக்கள் அனைவரும் நம்பினார்கள். வேப்பமர அடியிலே கற்பூரம் கொளுத்தி சுற்றி வலம் வந்து வணங்கினால் எல்லாப்பிணியும் நீங்கி சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு கிடைக்கும் என்று அடியார்கள் அனைவரும் கருதினார்கள். இந்த வேப்பமரத்தின் இலை பிணிகளையும் நீக்கும். காரிய சித்திக்கும் வாழ்வின் வெற்றிக்கும் துணையாக இருக்கும் என்ற நம்பிக்கை அடியார்களிடம் இருந்தது. தல விருட்சம் அழிந்ததும் அம்பாளின் எழுந்தருளி விக்கிரகம் காணாமல் போனதும் அடியார்களின் மனதில் மீள முடியாத வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

## 7) ஆலயத்தின் சிதைவும் அடியார்களின் வேதனையும்.

சீரோடும் சிறப்போடும் செழிப்போடும் இருந்த குரும்பசிட்டிக் கிராமம் உள் நாட்டு போரினால் முற்றாகச் சிதைக்கப்பட்டது. பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த தமது மண்ணையும் இருப்பிடங்களையும் விட்டு மக்கள் அனைவரும் அகதிகளாய் வெளியேறினார்கள். உள்நாட்டிலும் புலம் பெயர் பிரதேசங்களிலும் வாழ்ந்து வரும் அம்பாளின் அடியவர்கள் அனைவரும் மானசீகமாக அம்பாளைத் தமது மனக் கண்ணிலே இருத்தி வழிபட்டு வந்தார்கள். கட்டிடங்களை அழிக்கலாம். சொத்துக்களைச்சூறையாடலாம், அமைதியாக வாழ்ந்த மக்களின் வாழ்வினைச் சிதைக்கலாம் ஆனால் அடியார்களின் ஆழ்மனதில் பதிந்திருக்கும் அம்பாள் மீது கொண்ட பக்தி உணர்வினை யாராலும் அழிக்க முடியாது.

## 8) ஆலயத்தின் மீள் உருவாக்கம்

மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்ற மகாகவி உருத்திர மூர்த்தியின் வாக்கிற்கு அமைய அம்பாளின் அடியார்கள் அனைவரினதும் கூட்டு முயற்சியினால் பல இலட்சக்கணக்காக பணத்தினைச் செலவு செய்து மீண்டும் ஆலயத்தைப் புணர்நிர்மானம் செய்துள்ளார்கள். அம்பாளின் ஆலயம் கட்டியெழுப்பப்பட்டு பங்குனி உத்திர தினத்தில் மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

## 9) அம்பிகை இம்மை மறுமைப் பயன் அனைத்தையும் தருவாள்

அம்பாள் அருட் கதிர் வீச்சு ஆரம்பித்ததும் அடியார்களின் வாழ்வில் மீண்டும் ஒளி பிரகாசிக்கும். குரும்பசிட்டிக் கிராமம் மீண்டும் புத்துயிர் பெறும். புதுப் பொலிவுடன் காட்சிதரும். விடுவிக்கப்படாது உயர் பாதுகாப்பு வலயமாக இருக்கும் குரும்சிட்டிக் கிராமத்தின் ஏனைய பகுதிகளும் அம்பாளின் அருட்பார்வையால் விடுவிக்கப்படும். தாயுள்ளம்கொண்ட அன்னை முத்துமாரி அம்பாள் தனது அடியார்களை என்றும் தாழ்வடைய விடமாட்டாள். உயர்த்தியே விடுவாள். நீண்ட நாட்களாக அம்பாளின் அடியார்கள் விட்ட கண்ணீரைத்துடைத்து அவர்களுக்கு மலர்ச்சியான வாழ்வைத் தருவாள்.

"அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்" என்பது மகாகவி பாரதியின் வாக்காகும். நோயின்மை, கல்வி, தனம், தானியம், அழகு, புகழ், பெருமை, சந்தானம், வலிமை, துணிவு வாழ்நாள் வெற்றி ஆகிய சகல சம்பத்துக்களும் அம்பாளின் அருட்பார்வையால் இம்மையிலே கிடைக்கும். இம்மைப் பலன் மாத்திரமல்லாது மறுமைப் பலனையும் அம்பாள் தருவாள் "முக்திப் பிரகாஜில்" என்ற வேதங்கள் கூறும் அன்னை பராசக்தி பிறவி நோயை நீக்கி ஆன்ம விடுதலையான முத்திப் பேற்றினையும்தருவாள்.

**சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்** (குப்பிளான்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயத்தின் முன்னைய அடையாளச் சின்னங்கள்



மகிஷாசூரன்



சித்திரத்தேர்



முன்னைய எழுந்தருளிகள்



அம்பாள் திருவுலாக் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் இருந்து அகலாத நிகழ்வுகள்

குரும்பசிட்டி அருள் மிகு முத்துமாரி அம்பாளின் வரலாறு அம்பாளின் அற்புத நிகழ்வு பற்றிய கர்ணபரம்பரைக் கதையுடன் இணைந்த ஒன்று. இக்கதையானது எமது முன்னோர் வழி எமது கிராமமக்கள் மத்தியிலும் அதேபோன்று அயற்கிராம மக்களிடையேயும் அம்பாளை குலதெய்வமாக பக்தி சிரத்தையோடு ஆதரிக்கும் மனப்பக்குவத்தையும் பழக்கத்தையும் ஏற்படுத்தி நிற்கிறது.

அம்பாள் எமது கிராமத்துக்கு மட்டுமன்றி அயற்கிராமங்களுக்கும் அருள்பாலிக்கும் தெய்வமாக அடியார்மனங்களில் இடம்பிடித்திருந்தமைக்கு இன்னுமோர் எடுத்துக்காட்டாக அமைவது அம்பாள் திருவீதியுலா வரும் நிகழ்வாகும். அம்பாள் திருவீதியுலாவானது எமது கிராமத்தில் இருந்து வடக்குப் புன்னாலைக்கட்டுவன் குப்பிளான் ஊரங்குணை கட்டுவன் ஆகிய கிராமங்களின் ஊடாக வருடந்தோறும் மேற்கொள்ளப்பட்டு வருவது வழக்கம். இவ்வீதியுலாவின் போது ஒவ்வொரு கிராம மக்களும் அம்பாளை தோளில் சுமந்து சென்று அடுத்த கிராம மக்களிடம் ஒப்படைப்பது விசேடமான ஒன்றாகும். இதுமட்டுமன்றி அம்பாள் வீதியுலா செல்லும் ஒவ்வொரு கிராமமும் நிறைகுடம் தோரணங்களால் புனிதப்படுத்தப்பட்டு காட்சியளிக்கும். வீதியுலா செல்லும் அடியவர்களுக்கு பிரசாதங்கள் வழங்கப்படும். இந்நிகழ்வுகள் அம்பாள் மீது அயற்கிராம மக்கள் வைத்திருந்த அளவற்ற பக்தியை மட்டும் பிரதிபலிக்கும் ஒன்றாக இல்லாது அயற்கிராமத்தவருடன் ஒற்றுமை அன்பு சகோதரத்துவம் இவற்றை பேண வழிசமைக்கும் அம்பாளின் கடாட்சமென்றே சொல்ல வேண்டும். இந்தியாவில் சிதம்பர நடேசர் மற்றும் ஈழத்து சிதம்பரம் எனப்போற்றப்படும் காரைநகர் சிவன் கோயில் ஆகிய ஆலயங்களில் மார்கழி திருவெம்பா ஆரம்பமாகும் நாளே குரும்பசிட்டி அருள்மிகு முத்துமாரி அம்பாள் கொடியேற்ற திருவிழாவின் ஆரம்பநாளாகும். கொடியேற்றத் திருவிழாவைத் தொடர்ந்து பத்து நாட்கள் திருவிழா நடைபெறும். ஒன்பதாம் நாள் தேர்த்திருவிழாவும் பத்தாம்நாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். இக்கொடியேற்றத் திருவிழாவில் குறிப்பிடக் கூடிய விசேட அம்சங்களாக அதிகாலையில் இளைஞர்கள் திருப்பள்ளி எழுச்சிப்பாடல்களைப் பாடி சங்கு சேமக்கலம் அடித்து ஊர்மக்களைத் துயிலெழச்செய்வதும் குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரின் அனுசரணையுடன் பத்து நாட்களும் இரவுத் திருவிழாவின் போது சைவப் பிரசங்கங்கள் நடத்தப்படுவதையும் குறிப்பிடலாம். இதற்குரிய விளம்பரம் சுண்ணாகம் திருமகள் அழுத்தகத்தினரால் பெரியளவில் அச்சிடப்பட்டு கிராமத்திலும் அயற்கிராமங்களிலும் வெளியிடப்பட்டிருக்கும். மதிப்புக்குரிய அமரர் கனகசெந்தில்நாதன் அவர்களினால் வரவேற்புரையும் மதிப்புக்குரிய அமரர் த.இராசரத்தினம் ஆசிரியர் அவர்களினால் நன்றியுரையும் ஆற்றப்படும். இச் சொற்பொழிவுகளை ஆற்றிச் சிறப்பித்தவர்களுள் முக்கியமானவர்களாக பண்டிதை செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி சைவப்புலவர். சு. செல்லத்துரை, பண்டிதர் வே.சங்கரப்பிள்ளை பண்டிதர் இ. நமசிவாயம், கவிஞர் கதிரேசம்பிள்ளை, அருட்கவி. விநாசித்தம்பி, சமயப்போதனாசிரியர் சின்னத்துரை, பண்டிதர் நாகலிங்கம் பண்டிதர் சச்சிதானந்தன ஆகியோரைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இதே போன்று அம்பாள் வீதியுலா வரும்போது பத்துநாட்களும் மதிப்புக்குரிய அமரர் கனகசெந்தில்நாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களினால் நமசிவாயப் பதிகம் ஓதப்படும். சிறியோர் முதல் பெரியோர் வரை அவரைப் பின் தொடர்வர்.

அம்பாள் ஆலய சித்திரத்தேர் தொடர்பாகவும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். கிட்டத்தட்ட 1960- 1962 காலப்பகுதியில் எமது கிராம மக்களினதும் அயற்கிராம மக்களினதும் பாரிய உதவிகள் மூலம் இச் சித்திரத்தேர் உருவாக்கப்பட்டது. இது இன்றும் குரும்பசிட்டி மக்களின் நினைவில் இருந்து அகலாது உள்ளத்தை உருக்கிக் கொண்டு இருக்கிறது. திருநெல்வேலி அமரர் ஆறுமுகம் சிற்பாசாரியாரின் தலைமையில் அவரது சகல புதல்வர்களும் உறவினர்களும் ஒன்று சேர்ந்து அவர்களின் கைவண்ணத்தில் உருவானதே இந்த அழகிய சித்திரத்தேர். (இதன் பின்பு இவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு தேர் ரதத்தினை உருவாக்கும் சந்தர்ப்பம் கிடைக்க வில்லை என்பது மிகவும் மனவருத்தத்துக்குரியது) இதில் முக்கியமான பங்கு வகித்தவர்களாக அமரர் கலாகேசரி தம்பித்துரை அமரர்.ஆ. சீவரத்தினம் சிற்பாசாரியார், திரு. இராசரத்தினம் சிற்பாசாரியார் ஆகியோரைக் குறிப்பிடலாம். இத்தேருக்கு சிற்பத் திறமைகளுடன் அமரர் கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்களின் சித்திரவேலைப்பாடுகள் மேலும் ஓர் புதுமெருகினை ஊட்டியது எனின் அது மிகையாகாது. நயினாதீவு நாகபூசணி அம்பாள் நல்லூர் கந்தசாமி கோவில் ஆகியவற்றின் தேர்களுக்கு இணையானதாக குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள் தேரும் அமைந்திருந்தது எனில் மிகையாகாது. இதன் பின்பு பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அமரர் கலாகேசரி ஆ.தம்பித்துரை அவர்களினால் தெல்லிப்பளை துர்க்காதேவி அம்பாள் தேவஸ்தானத்துக்கான சித்திரத்தேர் வடிவமைக்கப்பட்டது என்பது விசேடமாக குறிப்பிடக் கூடியதாகும். அந்தளவுக்கு குரும்பசிட்டி அம்பாள் ஆலயத்தேர் கச்சிதமாக வடிவமைக்கப் பட்டிருந்தது எனலாம்.

மேலும் தீர்த்தோற்சவத்து அன்றும் குளிர்த்தித் திருவிழாவின் போதும் அம்பாள் ஆலயத்தில் வழங்கப்படும் அன்னதானம் பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும். அந்தக் காலத்தில் எந்த ஆலயத்திலும் வழங்கப்படாத அளவுக்கு குளைசாதமாக மிகவும் புனிதமாகவும் சுவையாகவும் பெரியளவில் அன்னதானம் வழங்கப்பட்டது. சிறியோர் பெரியோர் ஏழை பணக்காரன் என்ற வேறுபாடின்றி யாவரும் கோவில் வீதியில் அமர்ந்து யாவரும் பிரசாதத்தினைப் பெற்றுச் செல்லும் காட்சி மறக்க முடியாத ஒன்றாகும்.

நினைவில் நின்று அகலாத அடுத்த முக்கிய நிகழ்வு முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் மகுடாசுர சிலையைப் பற்றிய விடயமாகும். அமரர் பொன்னம்பலம் ஆசாரியாரினால் வடிவமைக்கப்பட்டதே இம்மகுடாசுரச் சிலையாகும். அது மிகவும் கம்பீரமான அழகான வினோதமான மிகவும் மதிநுட்பமாக அமைக்கப்பட்ட சிலையாகும். இம்மகுடாசுர சிலையின் அடிப்பீடத்தில் ஒருவர் கைப் பிடியினைச் சுழற்றும் போது சூரன் நான்கு பக்கமும் சுழன்று சுழன்று விளையாடும் காட்சி மிகவும் அற்புதமாக இருக்கும். இதுவரை இலங்கையின் எப்பகுதியிலும் இப்படியான ஒரு மகுடா சுரச்சிலையை நான் கண்டதில்லை. இது இற்றைக்கு 65 வருடங்களுக்கு முன்பு எமது கிராமத்தில் வளர்ந்திருந்த சித்திர சிற்பக் கலையின் அறிவையும் தொழில் நுட்ப அறிவையும் வெளிக்காட்டி நிற்கிறது எனலாம். மகுடாசுர சங்காரத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தநாள் குரும்பசிட்டி மேற்கில் எழுந்தருளி இருக்கின்ற புளியடி வைரவர் கோவிலுக்கு அம்பாள் வீதியுலா வருவது ஒரு சிறப்பு நிகழ்வாகும். வீதி உலா வரும் போது வீட்டுக்கு வீடு பிரசாதம் படைக்கப்பட்டு அவை வீதியுலாவில் பங்குகொள்ளும் அனைவருக்கும் வழங்கப்படும். அந்தநாள் சிறுவர்களுக்கு ஓர் இனிய நாளாகும். அத்துடன் ஊர் மக்களிடையே உறவுப் பாலத்தை வளர்ப்பதாகவும் அன்பு பாசத்தை பரிமாறும் நாளாகவும் திகழ்ந்தது.

இதேபோன்று ஆனி உத்தரம் குரும்பசிட்டி விவசாயிகளினால் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டுவந்த அலங்கார உற்சவமாகும். அது பல நிகழ்ச்சிகளைக் கொண்ட ஓர் இரவு நேர அலங்கார உற்சவமெனலாம். இவ்வாறான நினைவில் நின்று அகலாத நிகழ்வுகள் யாவும் மீண்டும் குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் நிகழ அம்பாளை வேண்டுகிறேன்.

**திரு. சு. சிவபாதம்**
சட்டத்தரணி

## ஆலயத்தின் பொற்காலம்

குரும்பசிட்டி அருள் மிகு முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் பெருமை ஆலயத்தின் தோற்றம் தொடர்பான பூர்வீக வரலாற்றுச் சிறப்புடன் இணைந்த ஒன்றாகும். எமக்குத் தெரிந்த காலத்தில் சிவத்திரு.சி. சுப்பிரமணிய ஐயர் மற்றும் ஆலய முகாமையாளர் அமரர் க. செல்லத்துரை (விதானையார்) காலப்பகுதி சிறப்பானதொரு பொற்காலம் என்றே சொல்ல வேண்டும். இவர்களின் காலப்பகுதியில்தான் சுற்றுப்பிரகாரக் கோயில்கள் உள் மண்டபங்கள் நவக்கிரக கோயில் தேர் தேர் மண்டபம் கொடித்தம்பம் என்பன வெகு சிறப்பாக அமைக்கப்பட்டன. நமது நாட்டில் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக ஆலயம் தரை மட்டம் ஆக்கப்பட்ட பின்பும் ஆலயம் வளர்ச்சி காண்பது எல்லாம் அன்னை பராசக்தியின் திருவருளே அன்றி வேறு எதுவுமாக இருக்க முடியாது. அன்றும் இன்றும் எங்கள் குலதெய்வமாக விளங்கும் முத்து மாரியம்மன் யாவருக்கும் திருவருள் பாலிப்பாராக.

**திரு. க. இளையதம்பி**
தீர்த்தோற்சவ அன்பர்சபை உறுப்பினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் துணை இருப்பாள் எங்கள் முத்துமாரி

ஆயிரங்கோடிக்கும் அப்பாற்பட்ட அண்ட சராசரங்களையும் நியதி தவறாமல் இயக்குகின்ற ஒரு மகாசக்தி உளது. அது எங்கும் நிறைந்த சக்தி: எல்லாம் வல்ல சக்தி. அதுவே எம்மை வாழ் வித்துக்கொண்டிருக்கிறது. அது அன்பர் உள்ளத்தின் உள்ளேயும் உள்ளத்தைக் கடந்தும் இருக் கிறது. அதனால் கடவுள் என்கிறோம். எம்மை வாழவைக்கும் அந்த மகாசக்தியை வழிபட்டால் எமக்கு வழிபிறக்கும்.

குணங்குறிகள் எல்லாம் கடந்த கடவுள் எனும் அந்த மகாசக்தி ஆன்மகோடி களை வாழ்விப்பதற் காக இப்புவியில் பல வடிவங்களில் எழுந்தருகின்றாள்.

"பற்பல கடவுளர் வடிவினிலே
பாருளர் பக்குவ நிலைக்கேற்ப
அற்புத வடிவம் பல கொண்டு
அன்பர்க் கருள வந்திடுவாள்"

சைவத்தமிழ் பண்பாட்டின் ஊற்றுக்கண்ணாகத் திகழ்ந்த எங்கள் ஊர் குரும்பசிட்டியில் அந்த மகா சக்தி அன்னை முத்துமாரியாக எழுந்தருளி இருந்து எம்மை வாழ்வித்தது. நம் முன்னோர் எல்லா நலமும் பெற்று இனிதே வாழ்ந்தனர்.

போர் தொடங்கியது நம்வாழ்வும் வளமும் பொய்யாய் கனவாய் பழங்கதையாய் மெல்லப் போயின. பிறந்த மண்ணும் பறிபோய் குலதெய்வத்தின் கோயிலும் அழிக்கப்பட்டது. மக்கள் இடம் பெயர்ந்தும் புலம் பெயர்ந்தும் நிலைகுலைந்தனர்.

எனினும் எங்கள் குல தெய்வம் எம்மவர் உள்ளத்துள் அருவமாயிருந்து வாழ்வித்துக் கொண்டிருந்தது. ஒரு தலைமுறை காலம் கடந்தது. மக்கள் உள்ளத்தில் "எங்கள் சொந்த மண்ணுக்கு எப்போது போவோம் எங்கள் குலதெய்வ தரிசனம் எப்போ கிடைக்கும்" என்ற மனத்தவிப்பு வளர்ந்து கொண்டே இருந்தது. மீளக்குடியேற அனுமதிக்கப்பட்ட போதும் குலதெய்வத்துக்கு கோயிலின்றிக் குலதெய்வ வழி பாடின்றி மக்கள் மட்டும் எப்படிக்குடியிருக்க முடியும்? கோயில் இல்லா ஊரில் குடியிருக்க முடியாதே.

எங்கள் குலதெய்வம் முத்துமாரி அம்பாளுக்கு எப்போது கோயில் எடுத்து மகா கும்பாபிஷேகம் காண்போம் எனத் தவம் கிடந்த நம்மவர் தவமும் நோன்பும் பலித்தன. அம்பாள் அருள் பாலித்தாள். கோயில் எழுந்தது. மகாகும்பாபிஷேகம் நிகழ்ந்தது. அம்பாள் மீண்டும் வந்து கொலுவிருந்தாள். குல தெய்வமான தாய்த் தெய்வ வழிபாட்டுக்கு வழி பிறந்தது. மீண்டும் முன்போல் தினமும் பூசை வழிபாடும் அம்பாள் தரிசனமும் கிடைக்கிறது. அம்பாள் அருளால் மக்கள் குடியேற்றம் மனநிறைவுடன் தொடர்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் குரும்பசிட்டி மண்ணில் மீண்டும் சைவமும் தமிழும் கலையும் பண்பாடும் தொழிலும் செல்வ வளமும் செழித்தோங்க வேண்டும்.

பண்டைய பெருமையை அறிய வாய்ப்பில்லாத இன்றைய தலைமுறை யினர்க்கு அன்றைய பெருமைகளை ஆவணப்படுத்தி உணர்த்த வேண்டியது எமது தலையாய கடமை.

மீண்டும் முன்போல் நல்லறிஞர்களும் சான்றோரும் கலைஞர்களும் செல்வந்தர்களும் கூடிக் குலாவி மகிழும் நாள் வெகு தொலைவில் இல்லை. அன்னை முத்துமாரி அம்பாளை வேண்டுவோம். முயல்வோம். மீண்டும் தழைத்திடுவோம். 1960 காலப்பகுதிகளில் எனது தந்தையார் அமரர். சின்னையா மனோறஞ்சிதன் அவர்கள் அம்பாளின் அனுக்கிரகம் வேண்டி அவ்வப்போது பாடிய பல பாடல்களில் ஒன்று.

ராகம்: சண்முகப்பிரியா தாளம்: ஆதி

**பல்லவி**

தாயே பராசக்தி நீ இந்த
நாயேன் படும் பொல்லா
இடர்தனைக் களைந்தருள்
தவத்தினை எனக்கருள்
(தாயே பராசக்தி நீ)

**அனுபல்லவி**

மாயா விகார மனம்
ஓயாதொரு ஷணமும்
பேய் போலும் புயல் போலும்
பிடித்தலைத் தமிழ்த்துது
துடித்த தென் றலற்றிறேன்
(தாயே பராசக்தி நீ)

**சரணம்**

அபயம் கொடுக்கும் அருள்
இதயம் படைத்தவள் நீ
எதையும் முடித்திடும் உன்
வலிமை மிகும் சக்தி
அகில உலகும் உந்தன்
அருட்கையில் பொம்மையாம்
அடிமை படும் துயர் கண்டகற்றிட
நினைத்திட உனக்கென்ன மனக்குறை
(தாயே பராசக்தி நீ)

**திரு. மனோ ஸ்ரீதரன் (சட்டத்தரணி,**
ஓய்வு நிலை நீதிபதி,
வீடமைப்பு ஆணையாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயத்தொண்டே இவர்கள் தம் மாண்பு

ஆலயத்துக்கு அருட்பொலிவூட்டி நிற்கும் அம்சங்களில் தொண்டர்கள் பங்கும் ஒன்றாகும். சைவ சமயத்தவர்களாகிய எமக்கு சமயக்குரவர்களது வாழ்க்கையும் வழிகாட்டுதல்களும் தொண்டின் மகத்துவத்தை பல்வேறு வழிகளில் உணர்த்தி நிற்கின்றன. தம் வாழ்நாளில் பெரும்பகுதியை ஆலயத் தொண்டில் ஈடுபடுத்தி வாழ்பவர்களின் மாண்பை அருட்பொலிவு பெற்று விளங்கும் ஒரு ஆலயச் சூழலில் இருந்து நாம் அடையாளம் கண்டு கொள்ளலாம். இத்தகைய ஒரு பின்னணியில் குரும்பசிட்டி அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலயத்துடன் தம் தொண்டுப்பணிகளால் இரண்டறக்கலந்து நின்ற பெரியோர்களையும் அவர்தம் மாண்புகளையும் நாம் நினைவில் கொள்வதும் அவர்கள்தம் பெருமையை எடுத்துரைப்பதும் பெருமைக்குரிய ஒரு செயலாகும்.

இந்தவகையில் எத்தனையோ தொண்டர்களை ஆலயம் கண்டிருப்பினும் தம் தொண்டின் மகத்துவத்தால் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக விளங்கக் கூடியவர்களாக அமைந்த ஒரு சிலரின் மாண்புகளை இங்கு குறிப்பிடுதல் ஆலயத்தின் வரலாற்றுப்பதிவில் முக்கியமானதாகக் கருதுகி றேன்.



எமக்கு விபரம் தெரிந்த காலம் முதலாக ஆலயவளர்ச்சியில் தம்மை அர்ப்பணித்து நின்றவர்களில் சிவாச்சாரியார் சி. சிவசுப்பிரமணிய ஐயா அவர்கள் முதன்மையானவர். ஐயா அவர்கள் அம்பாளோடு இரண்டறக்கலந்தவர். அவர் வேறு அம்பாள் வேறு என்று பிரிக்க முடியாதபடி பிணைந்து வாழ்ந்தவர். பக்குவமான பரிசுத்தமான தெய்வீகமான வாழ்க்கை வாழ்ந்தவர். தெய்வீகம் ஆலயத்திலும் சுற்றாடல் முழுவதும் பரவச்செய்தவர். அம்பாளை நடமாடும் தெய்வமாக்கி யவர். அடியார்கள் அம்பாளை அவரில் கண்டனர். அவரிலே அம்பாளைத் தரிசித்தனர். அவர்தம் வாழ்வு இரவும் பகலும் கோவிலிற்தான். அதிகாலை துயிலெழுந்து நீராடி துவைத்த வெண்ணிற ஆடை அணிந்து சந்தியா வந்தனமும் சிவபூசையும் முடித்து மயிலிட்டி தெற்கு கட்டுவன் குப்பிளான் புன்னாலைக்கட்டுவன் எல்லைவரை நாத ஒலி கேட்கும் காண்டாமணியை முதலாம் தடவையாக அதிகாலை நான்கு மணிக்கு நேரம் தப்பாது அசைத்து அதிரச்செய்வார். மணி ஓசை கேட்டதும் "அம்மாளாச்சி" "அரோகரா" என வாய்மலர்ந்து துயில் எழும் மக்களை நம்பிக்கையுடனும் துணிவுடனும் அவரவர் கடமைகளிலும் விவசாயக் கூட்டுழைப்பிலும் ஈடுபடவைப்பது நாட் பொழுதில் அவருடைய முதற்பணியாகும்.

தானே வளர்த்தெடுத்த பூமரங்களிலிருந்து உகந்த மலர்களைத் தேர்ந்தெடுத்துக் கொய்து தூய் மைப்படுத்தி அம்பாளின் திரு உருவம் துளங்காமற் சூட்டி மகிழ்ந்து நெகிழ்ந்து மெய்யுருகிக் காதலாகிக் கசிந்து சிந்தி அம்பாளை நடமாடும் தெய்வமாக்கும் அழகும் அற்புதமும் ஆனந்தக் கூத்தாட்டும் தெய்வீக நிகழ்வாகும். அடுத்த பணியாக தூய்மையாக வரும் பக்தர்களிடம் இருந்து பூக்கள் மற்றும் பூசைப் பொருட்களை அன்போடு பெற்றுப் பயபக்தியுடன் பூசைக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தி அவர்களுடைய வேண்டுதல்களை எல்லாம் அம்பாளுக்கு அருள்மழை பொழியச் சமர்ப்பித்து மந்திர உச்சாடனம் செய்து அவர்களின் நல்வாழ்வுக்காக வேண்டுதல் செய்து தீப ஆராதனை மூலம் பக்தர்களின் மனமாசு போக்கி அவர்தம் உள்ளொளி பெருக்கி அம்பாளை ஒளிவடிவாக்குதலாகும். சத்தியத்தின் வடிவமாக தூய்மையின் சின்னமாக அன்பின் ஊற்றாக தீமையை சுட்டெரிக்கும் தணல் தெறிக்கும் கண்ணோடு தண்ணொளி பாய்ச்சும் தெய்வீகப் பொலிவோடு அசைந்தாடி நடம் வந்து வீபூதி பிரசாதம் வழங்கும் பாங்கும் பக்தர்கள் வீபூதிப் பிரசாதம் பெற்று நெற்றியிலும் அங்கம் எல்லாம் இட்டு மனமாசு நீங்கி மன வைராக்கியத்துடன் வாழத்தொடங்குவது நாளாந்த நிகழ்ச்சியாகும்.



இதேபோன்று அருள்சுரக்கும் தெய்வீகத் தலமாக அம்பாள் ஆலயத்தை வளர்த்தெடுத்தவர் விதானையார் கதிரேசு செல்லத்துரை ஆவார். நாளும் பொழுதும் ஆலய வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாகி சிந்தனை வேறு ஏதுமின்றி தனது உடல் பொருள் ஆவி அத்தனையையும் ஈந்து மரண பரியந்தம் பாடுகள் பல பட்டவர். இவர் மக்கள் ஒவ்வொருவருடைய வீட்டு படலைகளையும் திறந்து அவரவர்களிடமிருந்து ஆலயத்துக்கு பெறக்கூடிய உதவிகளைப் பெற்றுக் கொண்டு குறுகிய ஒரு காலப் பகுதிக்குள் ஆலயத்தின் பெருவளர்ச்சியை துரித கதியில் ஏற்படுத்தியவர். தத்துவார்த்த ரீதியில் ஊர் இரண்டுபட்டிருந்த வேளையில் ஒரு பிரிவினரின் முன்னணித் தலைவராக இருந்துகொண்டே கோவில் வளர்ச்சியை முன்னிலைப்படுத்தி மறு பிரிவினர் வீடுகளுக்கும் சென்று அவர்களின் அன்பையும் ஆதரவையும் உதவிகளையும் பெற்ற ஆளுமை கொண்டவராக விளங்கினார். வருடந்தோறும் திருவெம்பாவை பெருந்திருவிழாவுக்கு முன்னதாக ஆலய மண்டபங்களுக்கும் வாகனங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பொருட்களுக்கும் வர்ணம் தீட்டி அழகுபடுத்தித் தூய்மைப் படுத்துவதுடன் சுற்றாடல் கிராமம் எங்கணும் பக்தி பரவசம் அமைதி ஆனந்தம் தெய்வீகச் சூழல் திகழ்வதற்கான செயற்பாடுகளில் சுறுசுறுப்பாகத் தானும் செயற்பட்டு தொண்டர்களையும் செயற் படுத்தும் பாங்கு மக்கள் மனங்களில் என்றென்றும் நிழலாடிக் கொண்டே இருக்கும்.

அன்னதானம், தீமிதித்தல், அங்கப் பிரதட்சணம், சுவாமி வீதி உலா ஒழுங்கு, காவடி கரகங்களை ஒழுங்கு படுத்துதல் வெப்பம் தொடர்பான அம்பாளுடன் தொடர்புபட்ட நோய்களைத் தடுப்பதற்கும் தணிப்பதற்குமான நம்பிக்கையை ஊட்டும் பொருட்டும் அம்பாளின் அருட்கடாட்சம் அயலூர் மக்களுக்கெல்லாம் கிடைக்க வேண்டுமென்ற பெரு நோக்கத்தோடு நடத்தப்படும் ஊர் பிரதட்சணை ஒழுங்கு, மானம் பூ ஒழுங்கு என ஆலயத்தோடு சம்பந்தப்பட்ட சகல விடயங்களையும் தொண் டர்களுடன் இணைந்து கச்சிதமாக நிறைவேற்றும் திறன் பக்தர்களால் வியந்து பாராட்டப் படுபவையாகும்.

வருடந்தோறும் சங்காபிஷேகத்தினையொட்டி வருடாந்த வரவு செலவு அறிக்கை வெளியீடு செய்யப்படுவதை சின்னஞ் சிறு வயதிலிருந்தே நான் அறிவேன். சதக் கணக்கிற் கூட வரவு செலவு விபரம் தரப்பட்டிருக்கும். வெளிப்படுத்துகை பொறுப்புக்கூறல் கணக்குக் காட்டுதல் எனப்படும் நல்லாட்சியின் பிரதான மூலக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகளை எமதூர் தனி நபர்களும் சமூக நிறுவனங்களும் பின் பற்றுவதற்கும் அது தொடர்பான போராட்டங்களில் ஈடுபடுவதற்கும் வழிகாட்டியவரும் அவரே.

அவருடைய இறுதிக்காலத்தில் மக்கள் கோபுர தரிசனம் செய்து கோடி புண்ணியம் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு சக்கர நாற்காலியில் ஊர்ந்து கொண்டு மரண மூச்சினை இழுத்துக்கொண்டு சகல இடங்களுக்கும் அலைந்து திரிந்து உதவிகளைப் பெற்றுக் கோபுரத்துக்கான அத்திபாரக் கட்டுமான வேலைகளை நில மட்டம் வரை நிறைவு செய்தமை மக்கள் மனங்களில் நீக்கமற நிறைந்திருப்பவை ஆகும்.



அடுத்து ஆலயத்தின் தற்போதைய பிரதம குருவாக விளங்கும் சிவாச்சாரியார் திரு.இரத்தினசாமி ஐயா அவர்களின் தொண்டினையும் மாண்பினையும் குறிப்பிடுவதில் பெருமையடைகிறேன். காலஞ் சென்ற சிவாச்சாரியார் சி.சுப்பிரமணிய ஐயா அவர்களின் சகோதரர் சிவாச்சாரியார் திருநாவுக்கரசு ஐயா அவர்களின் புதல்வரே இரத்தினசாமி ஐயா அவர்கள். இடரினும் தளரினும் சதாகாலமும் அம்பாளையே சிந்தித்து உபாசித்து மீண்டும் குரும்பசிட்டியில் அம்பாள் ஆலயத்தில் அர்ச்சனை பூசை செய்யாது தனக்கு இறப்பில்லை என்ற பக்தி வைராக்கியத்துடன் வாழ்ந்தவர் இரத்தினசாமி ஐயா அவர்கள். குரும்பசிட்டியில் ஒரு பகுதி விடுவிக்கப்பட்டு அம்பாள் ஆலயத்துக்குச் செல்ல முடியும் என்று கேள்விப்பட்ட உடனேயே பக்தி தலைக்கேறி உன்மத்தராகி பட்டணத்திலே வசதி வாய்ப்புக்களுடனிருந்த "மூத்த விநாயகர்" ஆலய பூசைத் தொண்டினைக் கைவிட்டு உடனடி யாகவே காட்டுக்குள் இருந்த அம்பாளைத் தேடி ஓடிவந்தவர். பல் வேறு துன்ப துயரங்கள் இடர்ப் பாடுகளுக்கு முகங்கொடுத்து மழையில் நனைந்து வெயிலில் வாடி ஒற்றையடிப் பாதையில் சறுக்கி விழுந்தும் எழுந்தும் வந்து அம்பாளோடு ஒன்றித்திருந்து சுப்பிரமணிய ஐயா அவர்களின் வழி முறைகளிலிருந்து அணுவளவும் பிசகாது அருட்பணி புரிந்து வருகின்றார். ஆலயத்தின் பிரதம குருவாக விளங்கும் காலத்திலேயே ஆலய புனருத்தாரண புனராவர்த்தன பணிகள் நடை பெற்று கும்பாபிஷேகம் இனிது நிறைவு பெற்றுள்ளமை அருந்தவப்பேறே ஆகும்.



ஆலயத்தில் ஆதித் தொண்டராக இருந்து இன்றும் எம்முடன் தொண்டு சேவையில் கைகோர்த்து நிற்பவர் திரு.ம.சபாரத்தினம் அவர்கள். பத்துவயது முதல் இன்றுவரை கோயில் தொண்டு செய்து வருபவர். தீப்பந்தம் பிடித்தல் சிவாச்சாரியர்களின் பணிகளுக்கு உதவுதல் போன்ற சிறிய வேலைகள் அவரது ஆரம்ப காலத் தொண்டுகளாக இருந்தன.

சுவாமி வீதியுலா வரும்போது கொம்புகளின் இரு முனைகளையும் இரு கைகளாலும் பிடித்துக் கொண்டு ஒரே சீரில் உலாவருவதைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பார். சூரன் அம்பாளுடன் போரிடும்போது ஆக்கிரோஷமடைந்து அடவாடித்தனங்கள் செய்ய முற்பட்டு அங்கும் இங்கும் சுழன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுழன்று ஓடும்போதெல்லாம் சுதந்திரமாக ஓடித்திரிவதற்கு இடம் விட்டும் அடக்க வேண்டிய இடத்தில் அடக்குவதற்குமாக நடந்தும் ஓடியும் முழங்கால் மடித்துத் தாழ்ந்தும் எழுந்தும் கொம்புமுனைப் பிடியை தளரவிடாமல் விளையாடும் விளையாட்டு கண்கொள்ளாக் காட்சியாகும்.

அம்பாள் உலா பிரதட்சணத்தின் போது அயலூர் மக்களுடன் மிகுந்த அன்போடு பழகி அவர்களுடன் சகோதர சமரச சன்மார்க்க நெறியினைக் கடைப்பிடிப் பதனால் "எங்கடை அம்மன்" "எங்கடை சபான்" என்று உரிமை பாராட்டுவதனைக் கேள்விப்பட்டுள்ளேன்.

இன்றும் தள்ளாத வயதிலும் திருவெம்பாவைத் திருவிழாக் காலத்தில் இளநீர் வாழையிலை போன்ற பொருட்களுடன் அதிகாலைப் பொழுதிலேயே தவறாது கோவிலுக்கு வந்து பூசைகளும் அன்னதானமும் ஒழுங்காகவும் சிறப்பாகவும் நடைபெற விசுவாசத்துடன் உழைத்து வருகின்றார்.கோவில் புனருத்தாரண திருப்பணி வேலைகளில் அயராது பாடுபட்டு கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நிறை வெய்தியமை கண்டு பூரிப்படைந்துள்ளார். மண்டலாபிஷேக நிகழ்வுகளில் கலந்து கொண்டு சுவாமி தூக்குவதற்கு தோள் கொடுத்து நிற்பதையும் காண்கின்றோம். அன்றும் இன்றும் தொண்டர்களின் நட்புரீதியான தலைவராக விளங்குகின்றார்.

இவ்வாறாக ஆலயத்தொண்டுகளுக்கு தம்மை அர்ப்பணித்து நின்ற தொண்டர் தம் பெருமைகளும் வழிகாட்டுதல்களும் இன்று ஆலயப்பணிகளில் கைகோர்த்து நிற்கும் பரிபாலன சபையினருக்கும் இளந் தொண்டர்களுக்கும் அடியார்களுக்கும் என்றென்றும் பக்கபலமாக விளங்க எல்லாம் வல்ல எம் பெருமாட்டியைப் பிரார்த்திக்கிறேன்.

**திரு. வ. கிருஷ்ணசாமி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரியின் மகோற்சவம்

"ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதியை" தித்திக்கும் திருவெம்பாவை பாடல்கள் வீதிகள் தோறும் மக்களைத் துயிலெழுப்பும் காலம்தான் எம்கிராமம் திருவிழாக் கோலம் காணும் காலமாகும் . மார்கழி மாதம் அந்தக் குளிர்மையான இதமான பனிகலந்த காலம்தான் குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் பெருந்திருவிழாக் காலமாகும். அடக்கமான எமது சிறு கிராமத்தில் அம்பாள் ஆலயக் கொடியேற்றம் என்றால் அது கிராமத்தின் கொடியேற்றம் என்றளவுக்கு கிராம மக்கள் மனத்தில் ஒரு உணர்வை ஏற்படுத்தி நிற்கும்.

அதிகாலை வேளையிலே வீதிதோறும் துயிலெழுப்பி நிற்கும் திருவெம்பாவைப் பாடல்கள், ஊரவரையும் அயலவரையும் அழைத்து நிற்கும் ஆலயத்தின் மணியோசை, சைவத்தையும் தமிழையும் சங்கமிக்க வைத்து நிற்கும் சைவப் பிரசங்கங்கள் இவற்றை எல்லாம் கேட்காத செவி என்ன செவியோ என்ற மனநிலையில் மார்கழி மாதத்தை மக்களின் மனம் நிறைந்த மாதமாக்கி அருள் பாலித்து நின்றது முத்துமாரி அம்பாள் ஆலயம்.

ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு மேலாக இம் மகோற்சவ நிகழ்வுகளை அனுபவித்தவர்கள் கிராம மக்கள். மார்கழி மாதம் என்றாலே கிராமத்தவர்கள் தங்கள் கடமைகளையும் வேலைகளையும் ஒதுக்கிவிட்டு ஊரில் சங்கமிக்க முன்னேற் பாடுகளைச் செய்யத் தொடங்கி விடுவார்கள் . தொழில் நிமித்தம் கிராமத்துக்கு வெளியில் வாழ்ந்த மக்களுக்கு கிராம உறவுகளுடன் கலந்துறவாட இது ஒரு வாய்ப்பான காலமாகும். இக்காலப்பகுதி பெரும் பாலும் பாடசாலை விடுமுறை நாட்களை அண்டி வருவதும் சிறுவர் சிறுமிகளுக்கு ஒரு வித குதூகலத்தை ஏற்படுத்தி நிற்கும்.

வழமையாக வரும் மிட்டாய் கடைக்காரர்களும் ஐஸ்பழ வண்டிக் காரரும் கச்சான் விற்பனையாளர்களும் ஆலயச் சூழலில் வியாபாரத்தைத் தொடங்கி திருவிழாக் காலத்தை களைகட்ட செய்வார்கள். அதிகாலை வேளையிலே கையில் சங்குடனும் சேமக் கலத்துடனும் திருவெம்பாவை பாடல்களை பாடுவதில் இளைஞர் களும் சிறுவர் சிறுமிகளும் வயோதிபர்களும் மார்கழி மாதக் குளிருடன் போட்டி போட்டுக் கொள்வார்கள்.

அதிகாலை துயிலெழுப்பும் ஆலய மணியோசசையுடன் இல்லங்கள் ஒளிபெறத் தொடங்கி விடும். மக்களின் மனத்தில் ஒரு விதமான பூரிப்பும் புத்துணர்வும் குடிகொண்டுவிடும். திருவெம்பாவைப் பூசையையும் தொடர்ந்து அம்பாள் திருவீதி உலா வரும் காட்சியையும் காண்பதற்கு மக்கள் சிறிது சிறிதாக ஆலய மண்டபத்தில் கூடத்தொடங்குவார்கள் திருவெம்பாவைகாலத்தில் பத்து நாட்களும் கிராமத்தில் வழக்கமாக கிரமமாக நடைபெறும் நிகழ்வுகள் இவை.

முதலாம் நாளான கொடியேற்றத் திருவிழாவும் எட்டாம் நாளான சப்பறத்திருவிழாவும் தொடர்ந்து வரும் தேர்த் திருவிழா தீர்த்தோற்சவம் பூங்காவனம் என்பனவும் அதிகளவான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தர்களைக் கவர்ந்திழுக்கும் விழாக்களாகும். முதலாம் நாளான கொடியேற்ற உற்சவ கால உபயகாரர்களாக திரு.நாகலிங்கம் (மூளாய்) குடும்பத்தினரும் இரண்டாம்நாள் திரு. த.இராசரத்தினம் ஆசிரியர் குடும்பத்தினரும் மூன்றாம் நாள் அருணாசலம் ஆசிரியர் குடும்பத்தினரும் குடும்பத்தினரும் நாலாம் நாள் திரு.தம்பிநாதர் மற்றும் கந்தவனம் குடும்பத்தினரும் ஐந்தாம் நாள் சீனியர் ஆறுமுகம் குடும்பத்தினரும் ஆறாம் நாள் பொ.இளையப்பா குடும்பத்தினரும் ஏழாம்நாள் சின்னப்பு குடும்பத்தினரும் எட்டாம் நாள் சப்பறத்திருவிழாவை குப்பிளானைச் சேர்ந்த ஆலியெலை கந்தையா குடும்பத்தினரும் தேர்த்திரு விழாவினை பி.எஸ். நடராசா குடும்பத்தினரும் தீர்த்தத் திருவிழாவை தா.இராசேந்திரம் தா.மகேந்திரம் தா.கந்தையா சி.குணரத்தினம் வ.செல்லமுத்தர் வே.சுப்பிரமணியம் க.இளையதம்பி ஆகியோர் அடங்கிய அன்பர்சபையும் உபயகாரர்களாக இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. மிக நீண்டகால இடப்பெயர்வு காலத்தில் இவர்களில் பெரும்பாலானோர் அமரத்துவம் அடைந்த நிலையில் இவர்கள் வழிவந்த குடும்ப உரிமையாளர்களாலும் உறவினர்களாலும் இவ் உபயங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொருநாட்களும் அம்பாள் விநாயகர் மற்றும் முருகப்பெருமான் திரு வீதியுலா வரும்காட்சி அடியார்களை மெய்மறக்க வைக்கும். இதற்கு மெருகூட்டி நிற்பவை ஆலயக் குருமார்களால் செய்யப்படும் சோடனை அலங்காரங்கள் தான். சப்பறத்திருவிழா தேர்த்திருவிழா( பச்சை சார்த்திய அலங்காரம்) தீர்த்தத்திருவிழா அலங்காரங்கள் பூங்காவன அலங்காரங்கள் என்பன ஏனைய பெரும் ஆலயங்களில் இடம்பெறும் நிகழ்வுகளுக்கு ஈடுகொடுக்கக் கூடியனவாக அமைவது கண்கொள்ளாக் காட்சியாகும். திருவெம்பாவை பூசை நடைபெறும் வேளையில் இடம் பெறும் திருவெம்பாவை பாடல்களை இசைப்பதில் திரு. இராசையா இராசரத்தினம் அவர்களின் குரல் கேட்போர்யாவரையும் பக்திப்பரவசத்தில் ஆழ்த்திவிடும். இதேபோல் திருமதி ராணி சிவனேசன் அவர்களும் திருமதி சிந்தா அரியரட்ணம் அவர்களும் தமது கணீ ரென்ற குரல்வளத்தால் பக்தர்களைக் கவர்ந்து நிற்பார்கள்.

மேலும் அம்பாளின் மகோற்சவகாலத்துக்கு மெருகூட்டி நிற்பது மாலைநேர பூசைகளைத் தொடர்ந்து இடம் பெறும் சமயச்சொற்பொழிவுகள்தான். சமயச் சொற்பொழிவுகளை வருடாந்தம் குறிப்பிட்ட சைவப்பெரியார்கள் நடத்தி வரலாற்றில் எல்லோர் உள்ளங்களிலும் அழியா இடம்பிடித்து நின்றமை நினைவு கூரத்தக்க தொன்று. 1951ம் ஆண்டுமுதல் அம்பாள் ஆலயத்தில் சன்மார்க்க சபையினரின் ஒழுங்குபடுத்தலின் கீழ் திருவெம்பாவை உற்சவ காலச் சைவப் பிரசங்கங்கள் தொடர்ச்சியாக 30 ஆண்டுகள் நடந்துவந்துள்ளன. இந்த வகையில் சைவப்பெரியார்களான பண்டிதர் வே.சங்கரப்பிள்ளை பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அருட்கவி விநாசித்தம்பிப்புலவர் பண்டிதர் நமசிவாயம் விரிவுரையாளர் ச.விநாயகமூர்த்தி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். ஓவ்வொரு நாட்களும் நடைபெறும் இச் சைவப் பிரசங்கங்களை ஆரம்பிக்கும் வகையில் வரவேற்று அறிமுக உரையை ஆற்றுபவர் இரசிகமணி கனக செந்தில்நாதன் அவர்கள். அவர் தனக்கே உரிய பேச்சுநடையில் மிகவும் இரசனையுடன் உரையாற்றும் திறமை படைத்தவர். இரசிகமணி கனக செந்தில்நாதன் அவர்கள் அம்பாள் திருவீதி உலாவரும் வேளையில் கூட்டுப்பிரார்த்தனைகளை நடாத்தி செல்லும் பாங்கும் தனித்துவமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுக்கு மேலாக திருவெம்பாவைக்காலத்தில் எல்லோராலும் நினைவுபடுத்தப்படக் கூடிய ஒருவர் என்றால் அது அமரர் திரு. த. இராசரத்தினம் ஆசிரியர் அவர்களாகும். சைவப்பிரசங்கங்களை ஒழுங்கு படுத்துவதிலும் ஆலயத்தில் சமயாசாரங்களை நெறிப்படுத்துவதிலும் ஆலய நிகழ்வுகளுக்கு அடிநாதமாக விளங்கியவர் ஆசிரியர் அவர்கள். ஆசிரியர் அவர்களின் உருவமும் அவரது குரலும் திருவெம்பாவை உற்சவகாலத்தில் கலந்து கொண்ட அடியார்களுக்கு இன்றும் நினைவில் நிற்கின்றன. "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" "திரு வீதியில் துப்புதல் மூக்குநீர் சிந்துதல் பாவமாகும்" "மரகத வர்ணமயமான சப்பரத்தில் அம்பாள் வீதியுலா வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்" "நாளை ஆருத்ரா தரிசனம்" இவை இன்றும் கேட்டுக்கொண்டே இருப்பதைப் போன்ற உணர்வு.

ஆசிரியர் அவர்களின் பணி ஆலயவரலாற்றுடன் மிகவும் நெருங்கிய ஒன்றாகும். முக்கிய திருவிழாக் காலங்களில் விழாக்களை முறையாக ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளில் ஆசிரியர் பலவருடகாலம் ஈபாடுகாட்டி வந்தார். அம்பாள் ஆலயக் கொடியேற்ற வைப வத்துக்காக கொடித்தம்பச் சேலை வாங்கி தெய்வீக சித்திரம் வரையும் பணி இவரால் மேற்கொள்ளப் பட்டு வந்தமையும் இப்பணி வருடாவருடம் இறுதிவரை தொடர்ந்ததாகவும் "நிஜங்களின் தரிசனம்" என்ற இவரது நினைவு மலரில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் ஆலய முகாமையாளர் அமரர் க.செல்லத்துரை அவர்களுக்கு பக்கபலமாக நிதியாளராக செயற்பட்டதுடன் சித்திரத்தேர் அமைப்புக்காக பிரசாரம் செய்தல் நிதி திரட்டுதல் தனாதிகாரியாக கடமையாற்றுதல் ஆகிய பணிகளிலும் சளைக்காது ஈடுபட்ட ஒருவர் என்பதை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டாக வேண்டும்.

தேர்த்திருவிழாவினைப் பொறுத்தவரையில் 1965 காலப்பகுதிகளிலேயே சித்திரத்தேர் திருப்பணிகள் ஆரம் பிக்கப்பட்டிருந்தன. அதற்குமுன்னர் கட்டுத்தேர் முறையே நடைமுறையில் இருந்து வந்தது. தேர்த்திருவிழா வன்று காவடி கரகம் தூக்குக்காவடி பறவைக்காவடி என்று கிராம மக்களின் பிரார்த்தனைகளின் வெளிப் பாடுகளை கண்டுகளிக்கக் கூடியதாக இருக்கும். இந்நிகழ்வுகளை நினைத்துப்பார்க்கும் போது இந்துதாசன் வையாபுரி குலோத்துங்கர் தம்பிராசா கந்தசாமி போன்றோர் எம் நினைவில் நடமாடுகிறார்கள். குலோத்துங்கர் அவர்கள் பெண்வேடந்தாங்கி சிறுவர்களை மகிழ்விப்பார். திரு.சீ.கந்தசாமி அவர்கள் முள்மிருதடியில் காவடியெடுத்து மக்களை பரவசமடைய வைப்பார். தம்பிராசா அவர்கள் பறவைக் காவடி துலாக்காவடி என்பற்றில் துறைபோனவர். இதேபோல இந்துதாசன் அவர்கள் காவடி மற்றும் பறவைக் காவடி நிகழ்வுகளில் கிராமத்தில் மட்டுமன்றி வெளி மாவட்டங்களிலும் பிரசித்தமானவர்.

தீர்த்தத்திருவிழாவுக்காக மதவாச்சி அனுராதபுர பகுதிகளில் இருந்து தாமரை மலர்கொண்டு வரப்பட்டு தீர்த்தத் தொட்டியிலிடப்படும். தீர்த்தத் திருவிழாவன்று மகோற்சவம் முடிவடைகிறதே என்று மக்கள் முகங்களில் ஒரு ஏக்கம் படர்ந்திருப்பதை அவதானிக்கலாம் திருவிழா இன்னும் நீடிக்கக் கூடாதா என்ற தவிப்பே இதற்குக் காரணமாகும். பத்துநாட்களும் உற்சவகாலத்தில் அம்பாள் திருவீதியுலா வருவதிலும் சப்பறம் மற்றும் தேர் திருவிழாவில் வடம் பிடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்பதிலும் கைகோர்த்துநிற்கும் கணிசமான அளவு இளைஞர்கூட்டத்தை ஆலயம் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். மகோற்சவம் நிறைவடைந்த கையோடு நடைபெறும் பூங்காவனத் திருவிழா துடிப்புமிக்க இளைஞர் கூட்டத்தினருக்கென நடாத்தப்படும் உற்சவம்போல இன்னிசைக் கச்சேரி மேளவாத்திய விருந்து மெல்லிசை நிகழ்ச்சிகள் என்பவற்றை கொண்டதாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும்.

மக்கள் இடம்பெயர்ந்து வாழும் காலகட்டத்தில் எல்லாம் தாம் வாழ்ந்த பகுதிகளில் உள்ள ஆலயங்களில் திருவெம்பாவை வழிபாடு நடைபெறும்போது கொடியேறிவிட்டதா? எப்பொழுது தேர்? என்றே கேட்டுக்கொள்வது வழக்கம்.அந்தளவுக்கு எமது கிராமத்தவரை பொறுத்தவரையில் திருவெம்பாவை என்பது கொடியேற்றத்துடன் கூடிய ஒரு உற்சவம் என்ற எண்ணப் பாட்டை அவர்கள் கொள்ளும் அளவுக்கு ஆலயத்தின் பெருந்திருவிழாவாக விளங்கியது

இடம்பெயர்ந்து வாழ்ந்த காலகட்டத்தில் இன்னுமொரு முக்கிய விடயத்தை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். 1991 ம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து மிக நீண்டகால இடப்பெயர்வு சூழலை நாம் சந்தித்திருந்த வேளையிலும் மக்கள் திருவெம்பாவைகால வழிபாட்டை உணர்வுபூர்வமாக ஏதோ ஒரு விதத்தில் அனுஷ்டித்து வந்தனர். யாழ் மாவட்டத்துக்குள் குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலையமானது 1992 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து திருவெம்பாவை நாட்களின் ஒன்பதாம் நாளான தேர்த்திருவிழா தினத் தில் ஊர்மக்களின் நலன் வேண்டி பூசை வழிபாட்டு நிகழ்வுகளை வருடந்தோறும் நடத்தி வந்தது. குறிப்பாக ஏழாலை தெற்கு வசந்தபுரம் அருள்மிகு வசந்த நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் பல வருடங்கள் இவ்வழிபாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. மேலும் மக்கள் இடம்பெயரும் சூழல்களை மையமாகக் கொண்டு சாவகச்சேரியில் இராமாவில் பிள்ளையார் ஆலயத்திலும் உரும்பிராயில் அண்ணமார் ஆலயம் மற்றும் காளிகோவிலிலும் இவ்வழிபாட்டு நிகழ்வுகள் 2010ம் ஆண்டுவரை நடத்தப்பட்டன. இப்பூசை வழிபாட்டு நிகழ்வுகளில் சைவப்பிரசங்கம் கூட்டுப்பிரார்த்தனை அன்னதானம் என்பன மேற்கொள்ளப்பட்டு வந்தன. சைவப்பிரசங்கங்களை சிவத்திரு குமாரசாமி ஐயா அவர்களும் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வுகளை அன்னைதாசன் க.ஆனந்தராஜா அவர்களும் நிகழ்த்தி சிறப்பித்துவந்தனர்.

தற்பொழுது எமது கிராமத்தில் அம்பாளுக்கான ஆலயம் புனரமைப்பு செய்யப்பட்டு கும்பாபிஷேகத்தினை கண்டு நிற்கும் இவ்வேளையில் எதிர்காலத்தில் ஆலயம் காணப்போகும் மகோற்சவ நிகழ்வுகளில் இவ்வுணர்வுகளும் நிகழ்வுகளும் கலந்திட வேண்டிப் பிரார்த்திப்போமாக.

**அருண் சக்திவேல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசமய நுட்பமும் சக்தி தத்துவச் சிறப்பும்

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டமைந்த வகையில் சைவசமயமானது திகழ்கின்றது. சிவன் என்னும் போது சிவன் வேறு சக்தி வேறு என்னாது சிவத்தோடு சக்தி பிரிப்பின்றி நிற்கும் நிலை எடுத்தாளத்தக்கதாகும். சிவத்தோடு பிரிப்பின்றி நெருப்பில் சூடுபோலவும் பழத்தில் சுவை போலவும் வேறற நிற்கும் சக்தியே சிவசக்தியாகும். சிவமின்றிச் சக்தியில்லை. சக்தியின்றிச் சிவமில்லை எனும் கருத்தமைவுகள் சைவத்தில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். சக்தியுடன் கூடிய சிவத்தைச் சதாசிவம் என அழைக்கப்படுதலும், சிவன் உமைபாகனாகத் தோற்றம் அளிக்கும் நிலையில் அர்த்தநாரீஸ்வரர் எனச் சுட்டப்படுதலும் சிவசக்தித் தன்மையினைப் புலப்படுத்தி நிற்கின்றன. வேத உபநிடதங்கள் உலகெங்கும் நிறைந்த நிறைவான பூரணப் பொருளைப் பிரம்மம் எனச் சுட்டிநிற்கின்றன. உயர்வன்மை கொண்டதால் இதனைச் சக்தி என்றும் குறிப்பிடுவர். உண்மையில் பிரம்மம் வேறு பிரம்மசக்தி வேறு என்பதல்ல. இப் பிரம்ம சக்தியே பிரபஞ்சத்தின் அனைத்து இயக்கத்திற்கும் அடித்தளமானதாகும். செயல் தத்துவம் உருப்பெறுவதும் இச் சக்தி தத்துவத்திலிருந்துதான் என்பது உள்ளடக்கமான உண்மையாகும். இதனாற்றான் இச் சக்தி சாதாரண சக்தியாக அன்றிப் பராசக்தியாக எடுத்தாளப்படுகின்றமை காணலாம். பராசத்தி என்பது மேலான சக்தியைக் குறித்து நிற்கும். சக்தியின்றி வாழ்வென்பதில்லை. சக்தியின் துணையே வாழ்க்கைக்கும், வாழ்க்கையின் சகல முயற்சிகளுக்கும் உறுதுணையாக அமைகின்றது. இவ்வகையில் சக்தி அருள் வடிவாகவும் விளங்குவது அறியக்கூடியதாகும். இதனையே சிவஞானசித்தியாரும்,

"அருளது சக்தியாகும் அரன் தனக்கு
அருளையின்றித் தெருள் சிவமில்லை
அந்தச் சிவமின்றிச் சக்தியில்லை."

என அழகுறக் குறிப்பிடுதல் நயக்கத் தக்கதாகும். பிரபஞ்சத்தின் தோற்றம், ஒடுக்கம் ஆகியவற்றுக்குக் காரணமாக அமைவது சக்தியே. இச் சக்தி வழியே தான் பிறப்பு, வளர்ச்சி, அழிவு எனும் தொழிற்பாடுகள் ஓர் ஒழுங்கு நெறியில் அமைவுறுகின்றன. படைக்கும் சக்தி பிரமா வழியும் காக்கும் சக்தி விஸ்ணு வழியும் அழிக்கும் சக்தி உருத்திரன் வழியும் நடைபெறுவதாகச் சைவசமயம் காட்டி நிற்பது காணலாம். உண்மையில் ஒரே சக்தியே இம் மூன்று வேறுபட்ட செயல்களை, குணங்களினைக் கொண்டதாக எடுத்துக்காட்டப்படுகின்றது. இதுவே திரிமூர்த்தி தத்துவம் இலகுபடுத்தி நிற்கும் விளக்கமுமாகும். முத்தொழிலை ஆற்றுகின்ற வகையில் இச் சக்தியானது பிரம்மாணி, வைஸ்ணவி, உருத்திராணி என அழைக்கப்படுதலும் காணலாம். இங்கு சக்தி பல்வேறுபட்ட நாமங்களினால் சுட்டப் பெற்றாலும் அடிப்படையில் ஒன்றென்பது தெளிவிற்குரியதாகும். சிவபெருமான் உமையாளோடு பிரிப்பின்றி அர்த்தநாதிஸ்வரனாக விளங்குகின்ற போதிலும் சிவனை ஆணாகவும் சக்தியைப் பெண்ணாகவும் உருவகித்து உவக்கின்ற சிறப்பினைச் சைவசமயத்தில் காணலாம். இங்கு அன்னையாகச் சக்தி எடுத்தாளப்படுவதிலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல சிறப்புக்கள் உளங்கொள்ளத்தக்கன. இவ்வுலகில் பிறந்த ஜீவராசிகள் அனைத்தும் அன்னையின் இருப்பினை அறிந்திருக்காதிருக்க நியாயமில்லை. ஒவ்வொரு ஜீவராசிகளது ஜனனமும் அதன் அன்னையிலேயே தங்கியுள்ளமை நோக்கத்தக்கது. கருவும், கருவின் வளர்ச்சியும், அதன் பிரபஞ்சப் பிரவேசமும் தாயின் அரவணைப்பிலேயே ஆதாரமாக அமைதல் காணலாம். பிறந்த மழலை உயிர் பெறுவது மாத்திரமன்றி இவ்வுலகோடு உணர்வோடு ஒட்ட வாழப் பழகுவதில் அன்னையின் பெருமையினை அளவிடுதல் இலகுவானதன்று. இதன் வெளிப்பாடாய்த்தான் போலும் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் " என்றும் "தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை" என்றும் சுட்டி நிற்கும் கூற்றுக்குள் பெண்ணின் பெருமையினைச் சாற்றி நிற்கின்றன

. நிலவுலகில் அன்பின் உயர்வினை எடுத்தாள்வதற்குரிய உயர்ந்த பாத்திரமாக அமைவது தாய்மையேயாகும். தாய்மையின் தியாகத்திற்கும் தன்னலமற்ற தன்மைக்கும் ஈடிணையாக வேறெவ்வுறவினையும் எடுத்தாள்வது சாத்தியமில்லை. இதனாற்றான் போலும் இறைவனின் அன்புப் பிரவாகத்தையும் அளப்பரிய தன்மையையும் எடுத்துக்காட்டவல்ல அனுபவச் சான்றாக அன்னையுறவைச் சைவ சமயம் சிறப்பாக எடுத்தாள்வது நயக்கத்தக்கதாகும். இதனாற்போலும் மாணிக்கவாசகரும் "தாயிற் சிறந்த தயவான தத்துவனே" என இறைவனை விளித்துரைக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

தாயானவள் பொதுவில் பொறுமையின் சின்னமாகப் போற்றப்படுகின்றாள். தாயின் நற்குண நலன்கள் விரவியிருக்கின்ற தன்மை அவளை உலகமாதாவாக எடுத்தாள வைக்கின்றது. பொறுமையின் எல்லையாக எடுத்தாள்வதனாலேயே பூமியைக்கூடத் தாயாக, உமாதேவியாக நோக்குகின்ற பண்பாட்டைக் கொண்டவர்களாக விளங்குகின்றோம். தாய்மை உலகின் பல்வேறுபட்ட செயற்பாடுகளின் உறைவிடமாகும். நிலமானது நமக்குரிய உணவின் படைப்பிடமாக விளங்குவதுபோல பெண்ணானவள் இச்சமூகத்தின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் ஆதார சுருதியாக விளங்குகிறாள். பெண்ணானவள் இனியவளாய், நல்லவளாய், எமைக் காப்பவளாய் வாழ்கின்ற தரத்ததால் உயர்வுக்குரியவளாய் மதிக்கப்படுகின்றாள். ஒரு வண்டிலுக்கு அச்சாணி எந்தளவிற்கு முக்கியமானதோ அதுபோல வாழ்வில் பெண்ணின் மகத்துவம் இன்றியமையாததுடன் அவ்வுண்மையானது சைவ சமயத்தில் சக்தி எனும் வடிவத்தில் எடுத்தாளப்பட்டு விளக்கப்படுதல் நயத்தற்குரியதாகும். சிவனை முழுமுதற் கடவுளாக எடுத்தாளும் சைவசமயமானது பெண்ணின் வடிவத்தில் சக்தியினை உருவகித்து விளக்கி நிற்றல் அறிதற்குரியது. அச் சக்தியானது அனைத்தின் செயல்தத்துவமாக விரிந்தமைகின்றது. சக்தியின்றி சிவமில்லை என எடுத்தாளப்படும் கூற்றானது சிவத்தின் செயல்தத்துவத்திற்குச் சக்தியின் இணைவுநிலையே அத்தியாவசியமான தென்பதினைத் தெளிவுறுத்தி நிற்பதாக அமைகின்றது. உலகம் உய்ய, உயிர்கள் இன்புற்று வாழ, அறம் தழைக்க, அன்பு நெறி ஓங்க இறைவன் மாதொருபாகனாக, மங்கையொரு பங்கனாக காட்சியளிக்கின்றான். மேலும் சக்தியானது சிவத்திற்கும் ஆன்மாக்களுக்கிடையில் ஒரு தொடர்புறுத்தும் பாலமாக அமைந்து மேனிலையை அடைவதற்கு வழிகாட்டவல்ல தென்பதனை நுட்பமாகச் சுட்டி நிற்பதாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாக்களின் அஞ்ஞானமாகிய இருளை நீக்க ஞானத்தை வாரி வழங்குபவள் அன்னையென எடுத்துரைப்பர். தாயானவள் தன் குழந்தைக்கு பிணிபோக்கும் பொருட்டு அந்நோய்க்குரிய மருந்தை பிள்ளையின் வயிறு தாங்காதெனக் கருதி அம் மருந்தைத் தான் உண்டு அம் மருந்தின் சத்தினைப் பிள்ளைக்கு தனது தாய்ப்பாலுடாக ஊட்டுகின்றாளென எடுத்துரைக்கும் சமய அனுபவமானது சக்தியின் நுட்பமான அன்புநிலையை உணர்த்தி நிற்பதாகின்றது. ஷ

“பாலுண் குழவி பசுங்கடல் பொறாது என
நோயுண் மருந்து தாயுண்டாங்கு
மன்னுயிர்த் தொகுதிக்கு இன்னருள்கிடைப்ப”

எனக் குமரகுருபரர் இதனை அழகுற எடுத்துரைப்பது காணலாம். இதுபோலவே நமது பிறவிப் பிணியை நீக்க சிவனின் சிவானந்தப் பெருவெள்ளமாகிய ஞானத்தேனை தாம் பருகி அதன் பலனாம் பேரின்ப முக்தியை மிகச் சுலபமாகத் தன்னை நேசித்து நிற்கும் பக்த கோடிகளின் தகுதிக்கமைய தன்னருள் பார்வையால் வழங்கி நிற்பாள் என எடுத்துரைக்கும் அழகானது நயக்கத்தக்கதாகின்றது.

“அன்னையைப் போல ஒரு தெய்வம் வேறில்லை” என்றும் “தாயிற் சிறந்ததொரு கோவிலுமில்லை” என்றும் எமது வியவஹார வாழ்க்கையை நோக்குகின்ற தரத்தில் ஒப்பிட்டு சக்தி தத்துவமானது அனைத்துயிர்களையும் வாழ்வில் உயர்நிலைக்கு உயர்த்தவல்ல ஒரு சாதனமாக இருத்தல் சாத்தியமாகின்றது. இத்தன்மை கருதியே கவிமணி தேசியவிநாயகம் பிள்ளையவர்கள் “மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும் அம்மா” என விளம்புதலும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். எமை நல்வழிப்படுத்தி நற்கதிகாட்டி நிற்கின்ற வகையில் சைவ சமயமானது சக்தி வழிபாட்டினை முதன்மைக்குரிய தொன்றாக எடுத்தாள்கின்றது. இதனாலேயே இன்றும் இலங்கையில் விளங்கும் ஆலயங்களினைக் கணக்கிலேடுத்து நோக்குகையில் அம்மனாலயங்களும் விநாயகராலயங்களுமே அதிக எண்ணிக்கையில் விளங்குவதுடன் மக்களினாலும் அதிகளவில் ஆதரிக்கப்படுவதனைக் காணலாம். அஞ்ஞான இருளை அகற்றி மெய்ஞ்ஞான ஒளியை அளிக்கும் ஞானவிளக்காய் பறை எனச் சுட்டப் பெறும் பராசக்தி விளங்குகிறாள். அஞ்ஞான இருளை அகற்றி மெய்ஞ்ஞான ஒளியை ஊட்டும் வகையிலேயே அன்னையர் மூவருக்கும் பணிந்து எடுக்கும் விழாவாக நவராத்திரியானது சைவப் பெருமக்களால் பெரிதும் கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். நவம் எனும் ஒன்பது இரவுகளும் இருளை அகற்றி மெய்ஞ்ஞான ஒளியை நாடும் கருத்தினைக் கருவாகக் கொண்டு மகாகாளி, மகாலட்சுமி, மகாசரஸ்வதி எனும் முப்பெரும் தேவியர்களுக்கு அர்ப்பணம் செய்வதாக அமைகின்றது. ஒளி பொருந்தியவளே தேவியாவாள். இந்நவராத்திரி விழாவானது அனைத்து இந்துக்களாலும் குறிப்பாகப் பாடசாலைச் சமூகத்தாலும் கொண்டாடப்பட்டு வருதல் காணலாம். இந்தியாவில் சில மாநிலங்களில் நவராத்திரி நிகழ்வானது வருடத்திற்கு இருதடவை நடாத்தப்படுவதும் அறிதற்குரியதாகும். காளி, லட்சுமி, சரஸ்வதி என மூன்று தேவியர்களாகச் சுட்டினும் அன்றேல் மகேஸ்வரி, கௌமாரி, வாராகி, மகாலட்சுமி, வைணவி, இந்திராணி, மகாசரஸ்வதி, நாரசிம்மி, சாமுண்டி என வேறுபட்ட நாமங்களைக் கொண்ட அன்னையாகக் கொள்ளப்படினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் சக்தி ஒன்றேயாகும். அஞ்ஞான அரக்கர்களை அழித்தொழிப்பதில் பராசக்திக்கு நிகர் பராசக்தியேயாகும். மதுகைபடர், மகிஷாசுரன், சும்பநிசும்பர் எனும் அரக்கர்களை அழித்தொழித்துத் தர்மத்தைக் காக்கின்ற வகையில் அவள் தருமச் செல்வியாக மிளிர்கின்றாள். ஒவ்வொரு அரக்கர்களின் அழிவிலும் ஒவ்வோர் அசுரத்தனத்துக்கு தேவியாற்றும் வதமாகச் சுட்டுதல் சாத்தியமாகும். பொய்மை, கபடம் போன்ற செயல்களுக்கு நாயகமாக வாழ்ந்திருந்த சும்பநிசும்பர்களினை வதம் செய்து நிசும்பசூதனி என அழைக்கப்பட்ட தேவி அரக்கர்களை மாத்திரம் ஒழிக்கவில்லை. பொய், மோசடி போன்ற அசுரக் குணங்களையும் அடியோடு அழித்து நிற்பதாக அமைகின்றது. அகங்காரங்களுடன் கொடிகட்டிப் பறந்த மகிஷாசுரனை வதம் செய்து மகிஷாசுரமர்த்தினி எனச் சிறப்புடன் அழைக்கப்பட்ட நாயகி அரக்கனை மாத்திரம் அழிக்கவில்லை. அவனுடன் கூடியிருந்த அழுக்குடைக் குணங்களையும் அழித்தொழித்தாள் என்பதே உண்மையாகும். இதுபோலவே ஆணவம், மமதை, செருக்கு போன்ற அகங்கார குணங்களுடன் இருந்த மதுகைபடரை ஒழித்து நின்று மதுகைபடநாசினி எனப் பெருமைபெற்ற காளி அரக்கர்களோடு கூடியிருந்த அசுரக்குணங்களையும் அழித்தொழித்தாள் என்பதே பெறத்தக்கதாகும். இவ்வாறு ஜீவகோடிகள் அனைத்தினதும் நன்மை நாடுகின்ற அன்பே வடிவான அம்பிகை இழிநிலை கண்டு வெஞ்சினமும் வீராவேசமும் கொண்டு மனித குலவாழ்வின் வளத்திற்கு வழிசமைப்பதாக அமைவது தெளிவிற்குரியதாகும்.

ஜீவகோடிகளின் அறியாமையை நீக்கும் தாயாகப் போற்றப்படும் வகையில் அவள் ஞானாம்பிகையாகவும், ஸ்ரீ வித்யா ஆகவும், மகாதிரிபுரசுந்தரியாகவும் மகாசரஸ்வதியாகவும் காட்சியளிக்கிறாள். ஐஸ்வரியங்களை அளித்தும் கீர்த்தி, செல்வம் வைராக்கியம், தர்மம் ஆகியன வழங்கும் சிறப்புடைய அன்னையாக விளங்குகையில் மாகாலட்சுமி எனவும் பகவதி எனவும் சண்டி எனவும், சுபத்திரை எனவும் ஏற்றிப் போற்றப்படுகின்றாள். இன்னல், துன்பங்கள் அகற்றி கொடிய பகவனை அழித்து தர்மம், நீதி நிலைக்கவும் சர்வ நலம் செழிக்கவும் வழிகாட்டும் நங்கையாக துர்க்கை, மகாகாளி, முத்துமாரி, மஹாமாரி, எனும் நாமங்களில் அழைக்கப்படுகின்றாள். சாந்தசொரூபியாய் அன்பு சொழித்தோங்க இன்பம் பெருக, அருள் வழங்கும் கருணைத் தாயாக விளங்குகையில் பூரணி, மனோன்மணி, இராஜராஜேஸ்வரி, பார்வதி, ஈஸ்வரி போன்ற பல்வேறான நாமங்கொண்டு திகழ்வது குறிப்பிடத்தக்கதாகும். காலத்தை வென்று காலத்தின் வடிவமாய்த் தோன்றும் பராசக்தி ஜீவகோடிகளின் அஞ்ஞானத்தை அழித்து மெய்ஞ்ஞானம் அளிக்கும் தாயாக விளங்குகையில் மோட்சப்பிரதாயினி எனச் சிறப்புப் பெயர் பெற்று விளங்குகின்றாள். இவ்வகையில் அன்னையானவள் ஒன்றானாலும் பல்வேறு நாமங்கொண்டாளாய் நயக்கப்பெற்று வழிபடுதல் காணலாம். பின்கல நிகண்டானது உமைக்கு ஆரியை, காமக்கோட்டி, அம்பிகை, நாரி, சக்தி, நாயகி, கௌரி, தேவி, சாம்பவி, தருமச் செல்வி, மலைமகள், சங்கரி, மாதா, ஐயை, பரை, உருத்திரை, பார்ப்பதி, இந்தரி, நீலி, கன்னி, நிமலி, குமரி, வேதமுதல்வி, விமலை, முக்கண்ணி, அமலை, இமயவதி, அயிராணி, சமயமுதல்வி, தற்பரை, மனோன்மணி, சிவை, உமை,யம்மை, அரவிடத்தவள், சுகமீன்றவள், பவானி, அன்னை, புண்ணியமுதல்வி என முப்பத்தெட்டு நாமங்களைச் சுட்டி நிற்றல் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலநாமங்களில் பல ரூபங்களில் நாம் அன்னையைக் கண்டுகொள்ள வழிகாட்டும் சைவசமயத்தின் நுட்பத்தினை வியக்காமல் இருக்கமுடியாது. தேவியரை வழிபட்டு சொல்லுதற்கரிய நன்மைகளையும் நற்கதியையும் அடைவதற்குக் கோவில்கள் நற்பணிபுரிவனவாக விளங்குகின்றன. இலங்கையானது ஆன்மிக பூமியென சிறப்புற அழைக்கப்பட்டதொரு தீவாகும். இங்கு விளங்குகின்ற ஆலயங்களினை எடுத்து நோக்கின் அதிக அளவில் விரிந்திருக்கும் ஆலயங்களில் அம்மனுக்குரியதான ஆலயங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. அம்மனைப் பல பக்தர்களும் பல நாமங்களில் வழிபடுவது மாத்திரமன்றி பல மூர்த்தங்களிலும் கண்டுவக்கின்ற வகையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். நாகபூசணியம்மன், புவனேஸ்வரியம்மன், பருவதவர்த்தனி அம்பாள், சிவகாமியம்பாள், மாரியம்மை, மனேன்மணியம்மை, வீரமகாகாளியம்மை, மத்துமாரியம்மை, இராஜராஜேஸ்வரியம்மை, தையல்நாயகியம்மை, மீனாட்சியம்மை, மஹாமாரியம்மை, காளிகாபரமேஸ்வரியம்மை, சிவமுத்துமாரியம்மை, துர்க்காதேவி, ஸ்ரீ காமாட்சியம்மை, பத்திரகாளியம்மை, நாச்சியம்மன், சிவகாமசுந்தரியம்மன், பத்தினியம்மன், கண்டிகா பரமேஸ்வரியம்மன், விசாலாட்சியம்மன், திரௌபதை யம்மன், நாயகியம்மன், காளிதேவி, பராசக்தியம்பாள், வாராஹியம்பாள், என எண்ணற்ற நாமங்களில் வெவ்வேறுபட்ட மூர்த்தங்களில் அம்மன் எழுந்தருளி பக்தகோடிகளுக்கு அருள்பாலித்து வருவது காணலாம். மேலும் இதனைவிட வெவ்வேறு சிற்றூர்களில் மக்களின் நம்பிக்கையின் அடிப்படையில் பேச்சியம்மன், அடுப்பனாச்சியம்மன், முதலிப்பேர்த்தியம்மன் போன்ற அம்மன் வழிபாடுகளும் ஆகம முறைகளுக்கு அப்பாலாய் விரிந்து இடம்பெற்றுவருவது குறிப்பிடத்தக்கதாகும். அவ்வவ்வூர் மக்களின் அன்புக்கும் ஆதரவுக்கும் இலக்காகி அருள்பாலிக்கின்ற சக்தி வாய்ந்த கோவில்களாக இவை அமைந்து விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும். சைவசமய மானது தேவியை உலகனைத்திற்கும் தாயாக வர்ணிக்கின்றது. மங்களம் அளிப்பவளாயும், பக்தி வசமனாவளாயும், நன்னடத்தைக்குரியவளாயும், அபயமளிப்பவளாயும், இன்பங் கொடுப்பவளாயும், மரணபய மொழிப்பவளாயும், மோட்சம், ஞானம் அளிப்பவளாயும், சிவசக்தியாகப் பிரகாசிப்பவளாயும் ஸ்வரியம், கீர்த்தி, வைராக்கியம் என்பனவற்றை வாரி வழங்குபவளாகவும் எடுத்தாளப்படுகின்றாள். அன்னைவடிவில் சக்தியாக அகிலத்தவர் உய்வடைந்து பெரும்பேறு அளிப்பவளாகச் சித்தரிக்கும் சிறப்பினை கண்டுவப்பதுடன் அவள் வழிநின்று நற்கதியடைய முனைவோமாக.


**பேராசிரியர். நா.ஞானகுமாரன்**
மெய்யியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உட்பிரகாரம்



வசந்த மண்டபம்



விநாயகர்



சந்தானகோபாலர்



முருகன்



நவக்கிரக மூர்த்திகள்



சண்டேஸ்வரி



வைரவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடமுழுக்கு வைபவப் படங்கள் 27-03-2013










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துமாரியம்மன் வழிபாட்டு மரபுகள் ஊடாக அறியப்படும் பண்பாட்டு நிறுவனங்கள்

**அறிமுகம்**

திராவிட மரபில் முத்துமாரியம்மன் வழிபாட்டு மரபின் தோற்றம் , அதன் காலம், சமூகச்சூழல் யாவும் சோழப்பேரரசின் வீழ்ச்சியுடன் உருவான சமூகப்பிறழ்வுகளுடன் தொடர்புபட்டதாக இருப்பதனைக்காணலாம். கி.பி. 13ஆம் நூற்றாண்டினைத்தொடர்ந்து சமூகத்தில் ஏற்பட்ட வரட்சி காரணமாக அதாவது குடும்ப உறவுகளில் ஏற்பட்ட விரிசல்கள், சாதிக்கட்டமைப்பு மற்றும் ஒரு சமூகத்தில் மற்றொரு சமூகம் தங்கி வாழும் முறைகள் யாவும் பராதீனப்படுத்தப்பட்டு அடிமை-குடிமை போன்ற சமூக வழக்காறுகள் என்பன நிறுவனங்களாகப் பரிணாமமடைந்த ஒரு காலகட்டத்தில் முத்துமாரியம்மன் வழிபாடு தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் பெருவளர்ச்சி கண்டது. முத்துமாரியம்மன் வழிபாட்டு மரபின் பின்னணியில் வேப்பிலைப்பண்பாடும், குளிர்த்தி என அழைக்கப்படும் நீர்க்கோலப்பண்பாடும் இரண்டறக்கலந்திருப்பதனையும் காணலாம். ஆகம மரபிலும் பௌராணிக மரபிலும் காணப்படும் ஐதீகங்கள் முத்துமாரியம்மன் வழிபாட்டு மரபின் உயிர்ப்பின் முக்கியத்துவத்தினைப் பதிவு செய்து வைத்துள்ளமையைக்காணலாம். இந்தவகையில் இங்கு ஆய்விற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட பொருள் மிகச்சுருக்கமாக இலங்கையின் நீர்வளப்பண்பாட்டின் பின்னணியில் முத்துமாரியம்மன் வழிபாட்டுமரபுகள் இற்றைவரைக்கும் மக்கள் வாழ்வில் உருவாக்கிக்கொண்டிருக்கும் பண்பாட்டு நிறுவனங்கள் தொடர்பான பங்களிப்புப் பற்றியதாகும்.

**நீர்வள நாகரிகத்துடன் தொடர்புபட்ட பிரதான கடவுளர் வடிவங்கள்:**

இலங்கைத்தீவின் பண்பாட்டிலே நீர்க்கருமங்களுடனும் நீர்வளத்துடனும் தொடர்புபடுத்தப்பட்ட கடவுளர் வடிவங்கள் பல காணப்படுகின்றன. சிங்கள மரபிலே பர்ஜயன்னய என அழைக்கப்படும் நீர்த்தேவதை வழிபாடு, ஐயனார் வழிபாடு (குதிரையும் மனிதனும் - அனுராதபுரம்), நாகக்கல் வழிபாடு, கணபதி வழிபாடு ஆகியன நீர்த்தேக்கங்களுடனும் நீர்வழிபாட்டுமரபுகளுடனும் தொடர்பு படுத்தப்பட்ட தெய்வங்களாகவுள்ளன. திராவிடமரபிலே கணபதியுடன் முத்துமாரி, சீதளாதேவி, சீதளாகௌமாரி, மகாமாரி, கருமாரி முதலியவள் ஆகிய தெய்வங்கள் நீருடன் தொடர்புபட்ட சமய வழிபாட்டுக்குரிய தெய்வங்களாக இருப்பதனைக் காண்கின்றோம். இத்தெய்வங்களுள் எல்லாம் முத்துமாரி ஆகம மரபினையும் பௌராணிக மரபினையும் இணைக்கின்ற வகையில் நீர்ச்சடங்குகளுடன் தொடர்புபட்ட, வெப்பியல் சம்பந்தப்பட்ட நோய்களைத் தீர்க்கின்ற வகையில் வட இலங்கை மக்களாலும், தென்னிலங்கை மக்களாலும் போற்றப்பட்டுவருவதனைக் காண்கின்றோம். இவ்விதமாக இருபக்க நிலைப்பாடுகளையும் நன்கு இணைத்தவகையில் மொழி வேறுபாடுகள் இன்றி முத்துமாரியம்மன் வழிபாடானது இலங்கைத்தீவில் பரவிக்கொண்டிருந்த வகையை எமது சமய மரபுகள் காண்பிக்கின்றன.

முத்துமாரியம்மன் வழிபாடானது கிராமியத் தெய்வ வழிபாட்டு முறைகளிலிருந்து உருவாக்கப்பட்டதென்பதில் எவ்விதமான சந்தேகங்களும் இருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. ஒன்றுமறியாத பாமரமக்களின் நம்பிக்கை நிதியமாக முத்துமாரி விளங்கினாள். பாமரமக்கள் மத்தியிலே முத்துமாரியினுடைய முகத்தோற்றம் முதலிலே மிகவும் உக்கிரமான உணர்வுகளை வெளிப்படுத்தக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. கண்ணகி போன்ற மானிடத் தெய்வங்கள் பௌராணிக மரபில் ஒரு கிராமியத் தெய்வமாக பூஜிக்கப்பட்ட ஒரு காலகட்டத்துக்கு முன்பதாகவே முத்துமாரியம்மன் வழிபாடு இந்திய உபகண்டத்தின் தென்பிராந்தியத்தில் தோற்றம்பெற்றிருந்தமையைத் தொல்லியல் மூலாதாரங்களுடன் காண்கின்றோம். முத்துமாரியினுடைய தோற்றவடிவமைப்பு தொடர்பான தொல்லியல் சான்றுகளும் கிடைத்துள்ளன. தமிழ்நாட்டில் தொல்லியலாளர்கள் முத்துமாரியினுடைய தோற்றத்தைக்காட்டும் சுடுமண்ணாலான பல சிற்பங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆதிச்ச நல்லூரிலிருந்து அகழ்ந்து பெறப்பட்ட சுடுமண்ணாலான சிற்ப வடிவங்களுள் சில அகோரமுகத்தோற்றத்தையுடையனவாக் காணப்படுகின்றன. இதேபோன்று கந்தரோடையில் போல் இ.பீரிஸ் என்பவரால் 1917இல் அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்ட தொல்லியல் எச்சங்களுள் தலையை மட்டும் சித்தரிக்கின்ற பெண் உருவமொன்று அகோரமுகத்தோற்றத்துடன் கிடைத்துள்ளது. அந்தவடிவம் இப்பொழுது யாழ்ப்பாணம் அரும்பொருளகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. இற்றைக்கு 20 ஆண்டுகளுக்கு முதல் திருகோணமலையிலுள்ள நிலாவெளியிலிருந்து மீட்டெடுக்கப்பட்ட முத்துமாரியினுடைய சுடுமண் சிற்பமொன்று கிறீஸ்தவ பாதிரியாரான சேவையர் என்பவரால் அவரது LAND OF LETTERS என்ற நூலில் எடுத்துக் காட்டியிருப்பதனைக் காண்கின்றோம். அவர் அந்த தாய்த்தெய்வ உருவத்தைச் சிந்துவெளியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட அதனை ஒத்த உருவங்களுடன் ஒப்பிட்டுக்காட்டியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

முத்துமாரியம்மனின் தொன்மையைப் பற்றிய பல செய்திகள் இலக்கியங்கள் வாயிலாக எடுத்துக்காட்டப்படுவதனைக் காண்கின்றோம். ஆகம நிலையில் முத்துமாரியம்மன் வழிபாட்டை ஆராய்ந்த ஆய்வாளர்கள் அதனை கி.பி. 5ஆம் 6ஆம் நூற்றாண்டுகளிலிருந்து தோற்றுவிக்கப்பட்டதாகக் கொள்வர். உத்தர காரணாகமம் என்ற நூலில் மாராசுரனை வதம் செய்த காரணத்தினால் மகாமாரியென அவள் பெயர் பெற்றாளெனக் குறிப்பிடுவதனைக் காண்கின்றோம். மாரி என்ற பெயர் புராண காலத்திலிருந்தே மக்கள் வாழ்வில் நிலைபெற்றுவிட்டிருந்தமையைக் காண்கின்றோம். மாரியம்மனுடன் தொடர்புடைய யமதாக்கினி முனிவர் பரசுராமர்,ரேணுகாதேவி ஆகியோர்களது வாழ்வும் வழிபாடும் ஒன்றாக இணைக்கப்பட்டிருப்பதனைக் காண்கின்றோம். கந்தபுராணத்தின் ஏழாவது காண்டமாகிய உபதேச காண்டத்திலும், ஒரு சிறந்த தலபுராணமாகிய காஞ்சி புராணத்திலும் யமதாக்கினிமுனிவர், ரேணுகாதேவி ஆகியோர்களுடைய கதைகளினூடாக முத்துமாரியம்மனின் வழிபாட்டு முக்கியத்துவத்தினை நன்கு அவதானிக்கமுடிகிறது. சில வரலாற்றாசிரியர்கள் பரசுராமரின் தந்தையாராகிய யமதாக்கினிமுனிவர் பற்றிய கதையை வேதபாசுரங்களிலிருந்து எடுத்துக்காட்டி மாரியம்மன் வழிபாட்டின் தோற்றத்தினை வேத காலத்துடன் எடுத்துக்காட்டுவர். கீரிமலை மாவிட்டபுரத்திலும் ஜமதாக்கினி முனிவர் வந்து தங்கியிருந்து தவம் இயற்றியதாக இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இங்கு தம்பலேஸ்வரி அம்மன் ஆலயம் ஒன்றும் அமைந்திருந்ததாகக் குறிப்பிடுவர். பாசுபதர் கூட்டத்தினர் வாழ்ந்திருந்த கீரிமலையில் தம்பலேஸ்வரியான ரேணுகாதேவிக்கு ஆலயம் ஒன்று இருந்ததென்றால் அது பரசுராமருடைய நாடான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேரளத்திலிருந்து முத்துமாரியம்மன் வழிபாடாக இங்கு ஏற்பட்டிருக்க வேண்டும். காத்தவராயன் கூத்து இதற்குரிய சான்றாதாரமாக அமைவது இங்கு குறிப்பிடத்தக்கது.

